

# சிரிக்கச் சிந்திக்க சில வரிகள்

கலாபூஷணம்

மு.மாசிலாமணி



# சிரிக்கச் சிந்திக்க சில வரிகள்



கலாபூஷணம் மு.மாசிலாமணி

# நூல் விபரம்

- ☞ நூல் : சிரிக்க சிந்திக சில வரிகள்
- ☞ ஆசிரியர் : கலாபூஷணம் மு.மாசிலாமணி
- ☞ பக்கங்கள் : ii + 53
- ☞ பதிப்பகம் : "சாயி பிறிண்டேர்ஸ்"
  கே.கே.எஸ் வீதி,
  இணுவில்.
- ☞ விலை : 250/=

# முன்னுரை

1965 ஆம் ஆண்டு முதல் இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகிய வானொலி நாடகங்களால் கவரப்பட்டு எழுத்துலகு எனும் சமுத்திரத்தில் ஒரு சிறு துளியாய் கலந்த நான் இன்றும் பத்திரிகைத் துறையூடாக ஆக்கங்களை வெளியிட உதயன் கைகொடுக்கிறது.

1965 இல் எனது முதல் நாடகமாகிய "நாய்க்குட்டி" எனும் 15 நிமிட நகைச்சுவை நாடகம் ஒலிபரப்பாகி சன்மானமாக ரூபா 30 மணி ஓடர் பெற்றது உந்துசக்தியாக அமைந்தது எனலாம். அரச சேவையில் சேவையில் இருந்ததால் அதிக நேரம் ஒதுக்கமுடியாமற் போனாலும் சில மேடை நாடகங்களை எழுதி நெறியாள்கை செய்து "சிங்கப்பூர் மாப்பிள்ளை" எனும் நாடகத்துக்கு மன்னார் மாவட்டத்தி முதல் பரிசு கிடைத்தமை மேலும் உற்சாகமூட்ட கிளிநொச்சி இரணைமடு கனகாம்பிகை கோவிலில் "செவினற் செல்லையா" எனும் மேடை நாடகம் அரங்கேறியது. பின்பு இதே நாடகம் வானொலிக்காகப் பிரதியாக்கம் பெற்று அரை மணிநேர ஒலிபரப்பாகியதிலிருந்து 2004 வரை 100 இற்கு மேற்பட்ட நாடகம் எழுதும் பாக்கியம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தால் வழங்கப் பட்டமைக்கு நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். தொடர்ந்தும் எழுதுவதற்கு வாசகர்களின் உற்சாகம் மிகவும் அவசியமெனக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். எனது ஆக்கங்கள் பெரும்பாலும் நகைச்சுவைக்கு முன்னுரிமை கொடுத்து யாழ்ப்பாணப் பேச்சு வழக்கில் அமைந்திருக்கும். சமுதாயத்தில் ஒரு செய்தியை உறைக்க சொல்வதானால் அதில் இனிப்பு எனும் நகைச்சுவையைக் கலந்து கொடுத்தால் மக்கள் மனதில் இலகுவாகப் பதியும் என்பதை "சிரிக்க சிந்திக்க சில வரிகள்" எனும் இந்நூல் ஏற்படுத்துமென்று நம்புகிறேன்.

# என்னுரை

இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகும் நாடகங்களால் 1965ம் ஆண்டு முதல் கவரப்பட்டு எழுத்துலகு எனும் சமுத்திரத்தில் ஒரு சிறுதுளியாய் கலந்த நாள் இன்றும் பத்திரிகைத் துறையூடாக எனது ஆக்கங்கள் வெளியிட உதயன் கைகொடுக்கிறது.

1965 இல் எனது முதல் வானொலி நாடகமாக நாய்க்குட்டி (15 நிமிட நகைச்சுவை நாடகம்) எனும் ஆக்கம் ஒலிபரப்பி ரூபா 30 மணி ஓடர் சன்மானம் பெற்றது உந்துசக்தியாக இருந்தது. அரச சேவையில் இருந்ததால் அதிக நேரம் எழுத முடியாமற் போனாலும் மேடை நாடகங்களில் சில எழுதி நெறியாள்கை செய்து "சிங்கப்பூர் மாப்பிள்ளை" எனும் நாடகத்துக்கு முதல் பரிசு பெற்றமை மீண்டும் எழுதத் தூண்டியது.

1995 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரை 100 இற்கு மேற்பட்ட இலங்கை வானொலி நாடகங்களுக்கு பிரதியாக்கம் செய்யும் பாக்கியம் கிடைத்தது. எனது ஆக்கங்கள் பெரும்பாலும் நகைச் சுவைக்கு முன்னுரிமை கொடுத்து யாழ்ப்பாணப் பேச்சுவழக்கில் அமைந்திருக்கும். சமுதாயத்தில் ஒரு செய்தியை உறைக்க சொல்வதானால் அதில் இனிப்பு எனும் நகைச்சுவையைக் கலந்து கொடுத்தால் மக்கள் மனதில் இலகுவாகப் பதியும் என்பது இந்நூல் "சிந்திக்க சில வரிகள்" சான்றாகும் என நம்புகின்றேன்.

இலங்கை வானொலியில் எனது பங்களிப்புக்காக அரச உயர் விருதாகிய "கலாபூஷணம்" விருது 2013 ஆம் ஆண்டும், அதே வருடம் "Journalism Award For Excellence" எனும் பத்திரிகைத்துறை விருதும் கிடைத்தது. தொடர்ந்து எழுத தூண்டுகிறது. வாசகர்கள் ஆதரவு ஒரு எழுத்தாளனுக்கு மிகவும் அவசியம் என்பதை அனுபவரீதியாக உணர்ந்து இந்நூலை நான் கற்ற கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு சமர்ப்பணம் செய்கின்றேன்.

## நூலின் சமர்ப்பணம்

இந்நூலினை கலையுலகில் எனக்கு
புகழ் கிடைக்க வைத்த
என் பாடசாலை அன்னையான
கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு
சமர்ப்பிக்கின்றேன்.


# சிரிக்க சிந்திக்க சில வரிகள்


1961 ஆம் ஆண்டு அரச சேவையில் தெரிவாகி கிழக்கு மாகாணம் சம்மாந்துறையில் கடமை. வெளிக்கள உத்தியோகத்தர் என்பதால் காணிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கும், மக்களின் முறைப் பாடுகளை ஏற்பதற்கும் அந்த ஊர் மக்களிடம் நெருங்கிப் பழக வேண்டிய கடமை. செம்மொழியாம் தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட இஸ்லாமியர் பெரும்பான்மையாக உள்ள ஊர் சம்மாந்துறை. ஆனால் அவர்கள் பேசும் மொழிதான் என்னை சங்கடத்துக்குள் மாட்டிவிட்டது. எனது உதவியாளர்களும் அந்த ஊர்வாசிகளாக இருந்ததால் அவர்கள் உதவியும் அரிதாகவே கிடைத்தது. அசல் யாழ்ப்பாணத் தமிழ் பேசும் எனக்கு அவர்கள் பேசும் தமிழைப் புரிய காலம் எடுத்தது.

ஒருமுறை அரச காணிகளைப் பார்வையிட மோட்டார் சைக்கிளில் போய் வயல் ஓரமாக நிறுத்திவிட்டு கடமையே கண்ணாகி இருந்தபோது தூரத்தில் நின்ற விவசாயி பலத்த குரலில் "கெளியுது வாப்பா கெளியுது. கெளியுது வாப்பா கெளியுது" எனச் சத்தமிட்டுக்கொண்டே இருந்தார். இறுதியில் எனது மோட்டார் சைக்கிள் சரிந்து விழுந்து விட்டது. பின்புதான் புரிந்து கொண்டது அவர் சொன்னது "சரியுது சரியுது" என சரிந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிளைப் பார்த்து என்பது. சரி! சரிந்ததுதான் சரியட்டும் என விட்டுவிட்டு காணிகளின் எல்லைகளை அடையாளம் காட்ட வந்திருந்த வட்ட விதானை சொன்னார் "அண்ணா பாருங்க, எழுவான் பக்கம் தெரியிற வேலி ஒள் (ஒழுப்பம்) கிறுகி வந்து படுவான் பக்கம் உள்ள பூவரசோடை முடியுது" எண்டார்.

இன்னொரு நாள் அரச காணிகளை பார்வையிடச் சென்ற வேளையில் விருந்தோம்பலுக்குப் பெயர் பெற்ற இஸ்லாமிய விவசாயி "வாப்பா, கொஞ்சம் மையேறும் வளுதன்காயும் தரட்டுமா வீட்டுக்கு எடுத்துப்போக" என்றார். அது என்ன சாமான் என எனது மொழியில் கேட்க அவர் சொன்னது மரவள்ளிக்கிழங்கும் கத்தரிக்காயும் என்பதை பின்னால்தான் புரிந்துகொண்டேன். வளுதன்காய் கத்தரிக்காய்க்கு அழகிய தமிழ்.

பின்பு 1981 ஆம் ஆண்டு தமிழ்நாட்டுக்கு சுற்றுலா சென்றவேளையிலும் சென்னையில் சோடா என ஒரு கடையில் கேட்க கழுத்துக்குள் போளை உள்ள சோடாப் போத்தலை டக்கெண்டு அடித்துத் தந்தார். குடித்தால் அது Plain soda. "என்ன தம்பி இது?" என்றேன். அவர் சொன்னார் அதுதான் சோடா! கலர் எண்டு கேட்க வேணும் எண்டார். சென்னைத் தமிழ் புரிய கொஞ்சம் காலம் பிடிக்கும். ஆங்கிலம் கலந்த அழகிய தமிழ் யாழ்ப்பாணத்தமிழில்கதைத்தால் "சார் நீங்க மலையாளமா" எனக் கேட்பார்கள். அதற்கும் காரணமிருக்கிறது. மலையாளமும் யாழ்ப்பாணத் தமிழும் பல வழிகளில் ஒத்ததாக இருக்கிறது. எனது யாழ்ப்பாண நண்பர் "சவுக்காரம் ஒரு கட்டி தாருங்கோ" என கடையில் கேட்க கடைக்காரர் கேட்டாராம். "அது என்ன சார்" என்று பின்பு நண்பர் அதைத் தொட்டுக் காட்டக் கடைக்காரர் Soap (சோப்) எண்டு தமிழில் சொல்லுங்க சார்" எண்டாராம்.







காலங்காலமாக – மரவள்ளி ஆஸ்பத்திரி, தர்ம ஆஸ்பத்திரி, பெரிய ஆஸ்பத்திரி என யாழ் மக்களால் அழைக்கப்பட்டு வந்த ஆஸ்பத்திரி இன்று யாழ் போதனா வைத்தியசாலையாக நிமிர்ந்து நின்று பல்லாயிரக்கணக்கான நோயாளிகளுக்கு அளப்பரிய சேவையை வழங்கி வருகிறது.

உங்களுக்குச் சொன்னால் என்ன, இலங்கையில் பிறந்ததுக்காக இரு விஷயங்களில் பெருமைப் படலாம். ஒன்று இலவசக் கல்வி. அடுத்தது இலவச வைத்திய சேவை. யாழ் போதனா வைத்திய சாலையில் சிற்றூழியர் முதல் வைத்திய நிபுணர் வரை தமது பணிகளைச் சிறப்பாக வழங்கி வருகின்றனர். ஓரிரு குறைகள் இருப்பினும் மக்கள் சேவை மகேசன் சேவையென நடைபெறுகிறது.

சரி விஷயத்துக்கு வருவோம். பொதுவாக எங்களில் பலர் நோய் வந்து இயலாத கட்டத்தில் தான் ஆஸ்பத்திரியை நாடும் வழக்கமாக உளர். ஆனால் தமது வாகனங்களையும் தமது செல்லப் பிராணிகளையும் பராமரிப்பதில் கண்ணும் கருத்துமாய் இருப்பர். கண்ணும் கருத்தும் என்றதும் எனக்கு கண் சிகிச்சைப் பிரிவில் ஏற்பட்ட சுவையான நிகழ்வை உங்களுடன் பகிர்ந்துகொள்ளலாம். ஆச்சி ஒருவர் சிகிச்சைக்காக வரிசையில் நின்று தனது முறை வந்ததும் எழுத்து வாசிக்கும் வேலையை ஆரம்பித்தார். பணியாளர் “ஆச்சி ஒரு கண்ணை பொத்திக்கொண்டு வாசியுங்கோ” என சொன்னது தான் தாமதம். ஆச்சி ஓட்டப் பந்தயத்துக்கு தயாராக நிற்கும் வீராங்கனை போல் யாழ் தேவி வேகத்தில் “ப..ப..ட..ல..வ” என்று தான் பாடமாக்கி வைத்திருந்ததை எடுத்துவிட்டார். பணியாளர் இடையில் நிறுத்தி “ஆச்சி நிற்பாட்டுங்கோ” என்று கத்தியும் பிரயோசனமில்லை. ஆச்சி கே.கே.எஸ் ரயில் நிலையத்தில் தான் பிரேக் போட்டார். அன்று தான் வாசிக்கும் பலகையை ஆஸ்பத்திரி ஊழியர் மாற்றியிருந்தனர் என்பதை ஆச்சி அலட்சியப்படுத்தி அசத்திவிட்டார் பாருங்கோ. தனக்கு வருத்தமில்லை என வைத்தியரை திருப்திப்படுத்த பலர் இப்படியும் நடந்து கொள்வர்.

குடாநாட்டில் உள்ள கோயில்களில் பூசை பண்ண பூசகர் இல்லாவிட்டாலும் கும்பிட ஆக்கள் இல்லாவிட்டாலும் மணியடிக்க மறந்து போனாலும், நேரம் தப்பாமல் ஊரில் உள்ள மக்களின் நித்திரையைக் குழப்ப ஒருவர் இருப்பார் பாருங்கோ. அவர்தான் ஒலிபெருக்கி ‘ஒப்பறேற்ரர்’. இவரின் சேவை அதிகாலையில் அற்புதமாக இருக்கும். கிழடு கட்டையளையும் , நோயாளிகளையும், O/L, A/L படிக்கும் பொடிபெட்டையளையும் குறி வைத்துத் தாக்குவதில் வல்லவராய் இருப்பார். அவர் விஞ்ஞானம் படித்தாரோ தெரியாது. ஆனால் ஒலிபெருக்குவதில் விண்ணர். 60 தொடக்கம் 90 டெசிபெலுக்கு குறையாமல் பெருக்கிவிடுவார்– ஒலியை. சரி! அந்த ஒலியைத்தான் தாங்கி





கொண்டிருக்க இவருக்குப் போட்டியாக அடுத்த கோயில் ‘ஒப்பறேற்ரர்’ தனது கைவரிசையைக் காண்பிக்கத் தொடங்கிவிடுவர். தொடர்ந்து சுற்றியுள்ள கோயில்களிலும் இதே பல்லவிதான். வில்லன் வீரப்பா சொன்னது போல் “சபாஷ் ! சரியான போட்டிதான்”

உப்பிடித்தான் பக்கத்திலை உள்ள பத்திரகாளி அம்மன் கோயிலிலை ஒருநாள் 'ஸ்பீக்கர் சவுண்ட்' குறைவாய் கேட்குது. எனக்கெண்டால் வலு புளுகம். ஒப்பறேற்றருக்கு நன்றி சொல்லுவம் எண்டு கோயிலுக்கு போய் "தம்பி இப்பதான் சவுண்ட் கணக்காய் இருக்கு' எண்டன். அவர் சொன்னார் "உமக்கென்ன விசரே? அண்ணாந்து பாரும் அரைப்பனை உயரத்திலை அரியாலைப் பக்கம் அவிட்டுக் கட்டியிருக்கிறன் குளாயை" எண்டார். "ஏன் எண்டன் நான், அவர் சொன்னார் "ஐயர் சொன்னவர் அரியாலைச் சனம் அரிச்சனைக்கு வாறது குறைஞ்சு போச்சாம் எண்டு. அதுதான் அரியாலை வரை கேக்க உயரமாகக் கட்டியிருக்கிறன்" இது எப்படியிருக்கு?




1987 வருட இறுதியில் இந்திய அமைதிப் படையினர் நடத்திய போர் நடவடிக்கைகளில் வடபகுதி மக்கள் பட்ட துன்பம், அமைதியின்மை சொல்லில் அடங்கா. மக்கள் அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்ய பட்ட கஷ்டங்கள் பல. இந்திய அமைதிப் படையினருக்கு மொழி ஒரு முட்டுக் கட்டையாக இருந்தது. உலகமொழி (ஆங்கிலம்) இடைக்கிடை கைகொடுத்து உதவியது. இருந்தும் சிப்பாயினருக்கு உலகமொழி முழுமையாகத் தெரிந்திருக்கவில்லை. அடிக்கடி ஊரடங்குச் சட்டம் பிறப்பிப்பார்கள். அதை வாய் மூலம் Announce அனவுன்ஸ் பண்ணுவார்கள். திறியோகுளொக் கர்பியூ–போறோகுளொக்–சூட்டிங்" என ஏதோ சினிமாப்பட சூட்டிங் மாதிரி சொல்லிவிட்டுப் போய்விடுவார்கள். மக்கள் அதை ஒருவாறு ஊகித்துக்கொள்வார்கள். அதாவது பிற்பகல் மூன்று மணிக்கு ஊரடங்கு அமுல். அதை மீறினால் 4 மணிக்குப் பின் துப்பாக்கிச் சூடுதான் என.

சரி விடயத்துக்கு வருவோம். அற்ப ஆசை– அற்ப ஆசை என்பார்கள். இந்த அற்ப ஆசை யாரைத்தான் விட்டது. என்னையும் சேர்த்துத்தான். சண்டை ஓரளவு தணிந்த பின் வான் மழையும், ஷெல் மழையும் ஓய்ந்து வெளியில் சென்று சாப்பாட்டுக்குப் பொருள்களை தேட மக்கள் மாடாய் அலைந்தனர். கன நாளாய் மீன் சாப்பிடேலை. என்ரை மனுசி சொன்னா–இஞ்சாருங்கோ இண்டைக்கு எங்கடை சந்தையிலை மீன் வந்திருக்காம். போய் வேண்டிக்கொண்டு வாங்கோ" எண்டு. மீன் பாக்கை எடுத்துக்கொண்டு சந்தைக்கு ஓடினேன். சந்தைக்குப் பக்கத்தில் உள்ள இந்திய அமைதிப் படை முகாமில் பெரிய சனக் கூட்டம் நுழைந்து விசாரித்தேன். ஏதோ சாப்பாட்டுப் பொருள்கள் இலவசமாய்க் குடுக்கப் போகினம் என்று ஒருவர் சொன்னார். ஆமியில் பெரியவன் வந்து கியூ கியூ என்று கத்தினார். நிண்ட சனம் முண்டியடித்துக் கொண்டு வரிசையாக நிண்டினம். நானும் ஒருவாறு நுழைந்து Q வில் இடம்பிடித்துவிட்டேன். "என்ன கொடுக்கப் போகினமாம்" எண்டு எனக்கு முன்னால் நின்றவரைக் கேட்டேன். அதற்கு அவர் "எனக்கும் தெரியாது. எல்லாரும் நிண்டினம். நானும் நிற்கிறேன். இலவசமாய் அரிசி, கிரிசி கொடுப்பினம் போல கிடக்கு" எண்டார். இலவசமாய் கிடைத்த பொருள்களை மனிசிக்குக் கொடுத்தால் எவ்வளவு சந்தோசப்படுவா என எண்ணினேன்.

உங்களுக்குச் சொன்னால் என்ன, முந்த நாள் நாங்கள் போட்ட சண்டைக்குப் பிறகு என்ரை மனுசி என்னோடை முகம் குடுத்து கதைக்கிறேல்லை. கிடைக்கிற சாமான்கள் எம்மைச் சமாதானமாக்க இந்திய அமைதிப்படை உதவுகினம் என மனதுக்குள் மத்தாப்பு. அதேநேரம் சந்தையிலை மீன் முடிந்துவிடுமோ என பயமும் தலைகாட்டியது. ஆனால் ஓசிச் சாமான்களை விடவும் மனமில்லை.

கடைசியில் ஒருவாறு ஒரு சாக்கு பருப்பை பங்கீட்டு வழங்க ஆரம்பித்தனர். சிப்பாய் ஒருவர் Q இல் நிண்ட ஒவ்வொருவருக்கும் ஒரு பேணி என சிறிய பேணியால் அளந்து அளந்து கொடுத்துக் கொண்டு இருந்தார். இடைக்கிடை ஆமிப் பெரியவர் வந்து ஹிந்தியில் ஏதோ சொல்ல சிப்பாய் ஒரு பேணியை அரைப்பேணியாக அளந்தார். நேரம் செல்லச் செல்ல அரைப்பேணி கால்பேணி ஆகியது. எனது முறை வர கால்ப் பேணியே கிடைத்தது. கால் பேணி பருப்பு வாங்க இரண்டு மணி நேரம் Q இல் நின்ற என்னை நானே மனதுக்குள் ஏசிவிட்டு மீன் சந்தைக்கு ஓடினேன். சந்தை முடிந்து சந்தையைக் கழுவிக் கொண்டிருந் தார்கள். கால் பேணி பருப்புடன் வீடு நோக்கி ஓடுகின்ற என்னை மனிசி எப்படி வரவேற்றிருப்பாள் என்பதை உங்கள் ஊகத்துக்கே விட்டுவிடுகிறேன். என்னை நானே தேற்றிக் கொண்டது– எனக்கு கால் பேணி பருப்பாவது கிடைத்தது. எனக்குப் பின்னால் வரிசையில் மணிக்கணக்காய் நின்றவர்களுக்கு ஆமிப் பெரியவர் சொன்னது "இன்று போய் நாளை வா" என்று இராவணனுக்குச் சொல்லப்பட்டது போன்று இருந்தது. என்று மடியும் இந்த அற்ப ஆசை.



தமிழ் மக்களின் அன்றாட வாழ்வில் பிரிக்க முடியாத இரு பொழுதுபோக்கு அம்சங்கள் சினிமாவும், வானொலியும். பேசாத படத்திலிருந்து பேசும் படம் வரையும் படிப்படியாக வளர்ந்து விஸ்வரூபம் எடுத்து நிற்கிறது தமிழ் சினிமா. உலகிலே அமெரிக்க ஹொலிவூட்டுக்கு அடுத்த படியாக இந்திய சினிமா 100 வருடம் கடந்து முன்னிலையில் நிற்கிறது என்றால் அது இரசிகர்களின் ஆதரவுதான்.

அந்தக் காலத்துப் படங்களில் பாடல்களுக்கு முக்கியத்துவம் கொடுத்தார்கள். சின்னப்பா, கிட்டப்பா, கொன்னப்பா, தியாகராஜபாகவதர் பாட்டுக்களைக் கேட்கவென்றே ரசிகர்கள் படம் பார்த்தார்கள். அவர்கள் ரசித்தார்களோ இல்லையோ என்பது வேறு விஷயம். பின்பு வசனத்துக்கும், நடிப்புக்கும் என்றே படம் ஓடியது. பின்பு பாட்டுக் கென்று, பகிடிக்கென்று படிப்படியாக ரசிகர்களின் ரசனை மாறியது. தொழில்நுட்ப ரீதியிலும் தமிழ் சினிமா முன்னிலையில் நிற்பது தமிழ் மக்களுக்குப் பெருமை. அனலொக் (Analog) கிலிருந்து டியிற்றல் வரை 3D என்று வந்து இரசிகர்களின் பாராட்டைப் பெற்றது– பெறுகிறது.

ஆனால், இவையெல்லாம் எமது கலாசாரத் தையும் தமிழை வளர்க்கிறதா அல்லது தேய்க்கிறதா என்பதில் சந்தேகம். அண்மைக்காலப் படங்களில் இசைக்கும், செக்ஸ்சுக்கும் தான் முக்கியத்துவம். குடும்பத்துடன் தியேட்டருக்கோ ரி.விக்கு முன்போ உட்கார முடியாது. பட தயாரிப்பாளர் களின் முக்கிய குறிக்கோள் மக்களின் 'மணிபேசை' காலியாக்குவதுதான். தமிழை வளர்க்கவேண்டும் என்று தொண்டை கிழியக் கத்தும் தமிழ்நாட்டு அரசியல்வாதிகள், தமிழ் பற்றுனர்கள் பலர் ஆங்கிலம் தமிழ் கலந்த மசாலாப் படங்கள் தயாரித்து தம்மையே வளர்த்துக் கொள்கிறார்கள். "காதலிக்க நேரமில்லை" படத்தில் நடிகர் நாகேஷ் நகைச்சுவையாகச் சொன்னார். தான் எடுக்கும் படம்தான் படம். அதை பார்த்துத் தீரவேண்டியது தமிழ் மக்களின் தலைவிதி என்று.

சரி சினிமாவை விட்டுவிட்டு றேடியோவைப் போடுவம் செவிக்காவது விருந்து கொடுப்பம் என்று எண்ணினால் பரவாயில்லை. F.M இல் தூள் கிளப்புகிறார்கள். தனியார், அரச வானொலிகள், இளம் அறிவிப்பாளர்கள் யாழ்தேவி வேகத்தில் பேசி அசத்துகிறார்கள். அவர்கள் செய்தி வாசிப்பது தான் எமது பொறுமையைச் சோதிக்கிறது. எவ்விடத்தில் நிறுத்தி எவ்விடத்தில் தொடர்வது என்பதில் தடுமாறுகிறார்கள். அதனால் அவர்கள் சொல்லவரும் கருத்து திரிபடுகிறது. நகைச் சுவைக்காக ஒரு செய்தியை வாசிப்போம். கொடிகாமம் கணபதிப்பிள்ளை தாச்சிப் போட்டியில் முதலிடம் பெற்றுள்ளார் என்பதை செய்தி வாசிப்பாளர்

கொடிகாமம் கணபதி–பிள்ளை தாச்சிப் போட்டியில் முதலிடம் பெற்றுள்ளார் என வாசித்தால் எப்படி யிருக்கும். உலகிலே அழகாகத் தமிழ் செய்தி வாசிப்பவர்களில் இலங்கை வானொலி சற்சொரூபவதி, ராஜேஸ்வரி சண்முகம் ஆகியோர் தமிழ் மக்களின் மனதில் குடியேறிவிட்டார்கள். அவர்களைத் தனியார் வானொலி பின்பற்றினால் மேலும் சிறப்படைவார்கள் என்பதில் மாற்றுக் கருத்து கிடையாது (WE DONT SEE ENGLISH PICTURES WE SEE ONLY TAMIL PICTURE) எனும் நடிகர் நாகேஷின் கனவு எப்ப நிறைவேறும். அவர் சொன்ன வசனமும் ஆங்கிலத்தில்தான். ஆனால் அவை ஆங்கிலேயரால் சொல்ல அவர் ஆசைப்பட்டார்.

“ஆசைக்கனவு தான் பலிக்குமா..” என்ற பழைய இனிமையான சினிமாப் பாடல் ஒன்று எனது காதில் ஒலிக்கிறது.பழைய பாடகி ஸ்வர்ணலதா பாடியதாக ஞாபகம். வாழ்க சினிமாவும் வானொலியும். வளர்க தமிழ்

அண்மையில் எம் ஊர்களிளெல்லாம் வருடாந்த கோயில் திருவிழாக்கள் மிகவும் அட்டகாசமாக நடந்தேறின. வழமைபோல் ஒலிபெருக்கி இம்சை எந்தவிதத்திலும் குறைய விழாக்காரர்கள் விடவில்லை. போதாக்குறைக்கு வெளிநாட்டு அன்பர்கள் அடியார்கள் தமது அன்பளிப்பாக நீட்டுக் குழாய் ஒலிபெருக்கிகளை வழங்கித் தமது காணிக்கையை செலுத்திவிட்டு காதுக்கெட்ட தூரத்தில் நிம்மதியாக அந்த நாட்டுச் சூழலுக்கு ஏற்ப இயர்போர்னில் பாட்டுக் கேட்டுக்கொண்டிருக்க, நம் இளையராஜா பாடிய “சொர்க்கமே என்றாலும் அது நம்ம ஊர் போல வருமா” என ஏங்கிக் கொண்டிருக்க வேண்டியிருக்கு.

பக்திப் பாட்டைத்தான் காது கிழிய போடுகிறார்கள் என்றால் மூச்சுவிடாமல் நம் அந்தணர்கள் ஓதும் மந்திரமும் 100 மடங்கு ஒலிபெருக்கி எம்மைக் கேட்க வைக்கிறது. ஒரு சொல்லாவது எமக்குப் புரிகிறதா? ஏதோ ஐயர் ஓதுகிறார் என்று கடவுளைக் கும்பிட வேண்டியதுதான். சமஸ்கிருதம் இறந்த மொழி (DEAD LANGUAGE) என்கிறார்கள். ஆனால் எமது காதுக்கு அது இரைந்த மொழியாகவே கேட்க வைக்கிறார்கள். அடியார்கள் அகம் மகிழ அழகிய தமிழில் மந்திரம் கேட்பது எப்போது? A.R.ரகுமான் ஒஸ்கார் விருது வாங்கியபோது அழகிய தமிழில் சொன்னது “எல்லாப் புகழும் இறைவனுக்கே” என அடியார்களாகிய நாம், அந்தணர் சொல்லும் மந்திரத்தை புரியாவிடினும் இறைவன் புரிந்துகொண்டால் சரியென கோயில் நிர்வாகிகள் நம்புகிறார்கள் போலும்.

நான் மந்திரங்களைப் பற்றி உங்களுக்குச் சொல்ல, எனக்கு ஒரு சம்பவம் ஞாபகத்துக்கு வருகுது. அண்மையில் எனது நண்பர் வீட்டுக்குச் சென்றிருந்தேன். அவர் முத்தத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த புத்தம் புதிய மோட்டார் சைக்கிளை சோகமாக பார்த்துக்கொண்டே இருந்தார். “என்ன கந்தையாண்ணை கவலையாய் இருக்கிறியள்” எண்டன். அவர் சொன்னார் “தம்பி அந்த ஐயரைக் கண்டால் செம்மையாய் குடுப்பன்” எண்டார். (ஏதோ தட்ஷணை கொடுக்கப் போவது போல்) . “ஏன் அண்ணை என்ன நடந்தது?” என்று கேட்க அவர் சொன்னார். “ஐயர் பீக்கரிலை மந்திரம் சொல்லேக்க அடிக்கடி யனமஹ–யனமஹ எண்டு சொன்னதாலை அதைக் கேட்ட என்ரை மோன் யமஹா–யமஹா எண்டு சொல்லி தனக்கு புது யமஹா மோட்டார் சைக்கிள் வாங்கி தர வேணும் இல்லாட்டி நஞ்சுகுடிப்பன் எண்டு வெருட்டத் தொடங்கி இப்ப பார் மூண்டு லட்சம் ரூவாயை விழுங்கிப்போட்டு நிற்குது. பொங்கைபார் தம்பி எண்டார். புத்தம்புது மோட்டார் சைக்கிள் என்னைப் பார்த்து சிரிப்பது போலிருந்தது. பாவம் கந்தையாண்ணை.



PENNY WISE AND POUND FOOLISH என ஆங்கிலத்தில் ஓர் அழகான பழமொழியுண்டு. அதன் அர்த்தத்தைப் புரிய வைக்க எனது நண்பரின் கதையைக் கேளுங்கள். அவர் தனது உடைமை களைக் கண்ணும் கருத்துமாகப் பாதுகாக்கும் குணமுடையவர். ஆனால் ஞாபக மறதி அவரை ஆட்டிப் படைக்கும்.

ஒருமுறை கண்டியிலிருந்து கொழும்புக்கு பேரூந்தில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். நடுவழியில் பேரூந்து பழுதடைந்துவிட்டமையால் வேற ஒரு பேரூந்தில் ஏறி பயணத்தை மேற்கொள்ள நேரிட்டது. மாறி ஏறிய பஸ்ஸில் பயணம் செய்கையில் மழை பெய்ய ஆரம்பித்த பின்புதான் தனது குடையை முதல் வந்த பஸ்ஸில் விட்டு விட்டதாக ஞாபகம் வந்தது. உடனடியாக பஸ்ஸை விட்டு இறங்கி ஒரு ஓட்டோவை வாடகைக்கு அமர்த்தி திரும்பிப் போய் தனது குடையை எடுத்துவிட்டாராம். (காணாமற் போன மகன் மீண்டும் கிடைத்த புளுகம் மாதிரி) இந்தக் கதையை அடிக்கடி சொல்லி பெருமைப்படுவர். இப்படி ஒரு நாள் இந்தக் கதையை என்னிடம் சொல்ல ஆரம்பித்தார். அப்போ நான் கேட்டேன் "மச்சான் உது பழங்கதை. குடை என்ன விலை" என. அதற்கு அவர் 200 ரூபா எண்டார். ஓட்டோவுக்கு எவ்வளவு எனக் கேட்க அதற்கு சற்று யோசித்து விட்டு அமைதியாக 300 ரூபா எண்டார். இது எப்படி இருக்கு? படிக்கும் காலத்தில் இன்னொரு நண்பர் எனது விடுதி அறையில் தங்கிப் படித்தார். கஞ்சத்தனம் கொண்டவர். இலகுவில் புதிய பொருள்கள் காசு கொடுத்து வாங்கார். ஒரு முறை அத்திபூத்தது போல் ஒரு சோடி இறப்பர் செருப்பை மலிவு விற்பனையில் வாங்கிவந்துவிட்டார். அன்றிரவு அந்தச் செருப்பை எப்படித்தான் தந்திரமாக விற்பனை செய்தவரிடம் மலிவாக வாங்கினார் என்ற கெட்டித்தனத்தைச் சொல்லி அறுத்துக்கொண்டிருந்தார். அடிக்கடி இரண்டு செருப்பையும் ஒன்றுடன் ஒன்றை 'டொக் டொக்' என்று தட்டி மகிழ்ந்தார். இறுதியாக இரவு படுக்கைக்குப் போக முன்பும் தனது அருமை செருப்பை 'டொக் டொக்' எனத் தட்டி எனக்குக் காட்டிவிட்டு செருப்பின் அடிப்பாகத்தை மெல்ல திரும்பிப் பார்த்தவர் அப்படியே சிலைபோல் நின்றார். அவரது முகம் பூரண சந்திரனை கருமேகம் மூடுவது போல் கறுத்துக் கொண்டிருந்தது. பேச்சுமூச்சில்லை. "என்ன மச்சான்?" என்றேன். ஒண்டுமில்லை எண்டு மழுப்பினார். உன்ரை முகம் சரியில்லை உள்ளதைச் சொல்லு" என்றேன். அழாக் குறையாக மச்சான் வலது செருப்பு 8 ஆம் நம்பர். இடது 7 என்று அழுதவர், "மச்சான் விடிய 6 மணிக்கு என்னை எழுப்பிவிடு. கடை திறந்த உடனை குடுத்து மாத்தவேணும்" என்று சொல்லி கட்டிலில் சாய்ந்துவிட்டார். ஆபத்தில் உதவும் குணம் கொண்ட நான், நண்பனை காலை 6 மணிக்கெல்லாம் எழுப்பிவிட வேண்டும் என்ற எண்ணத்தில் 5 மணிக்கெல்லாம் எழுப்பி அவரது கட்டிலைப் பார்த்தேன். ஆளைக் காணோம். இரவு முழுவதும் சிவராத்திரி கொண்டாடிவிட்டு எனக்கு முதல் எழும்பி கடைக்கு ஓடிவிட்டார். கேவலம் ஒரு சோடி செருப்பின் விலை 50 ரூபாய். முற்பகல் 10 மணிக்கு வாயெல்லாம் பல்லாக சரியான அளவுச் செருப்புடன் , இல்லை செருக்குடன் வந்தார். "சரியான அளவு கிடைத்ததா" என்றேன். ஓம் மச்சான், ஆனால் போக்குவரத்துச் செலவு 60 ரூபாய் எண்டார்.



அண்மையில் நமது முருகன் கோயில்களில் நடந்தேறிய சூரன்போர் திருவிழா மனதில் பல கேள்விகளை எழுப்பியிருக்கிறது. வரவர இந்து சமய சடங்குகள் எங்கே போகின்றன என்பதைப் புரிய, புதிராக இருக்கிறது. இந்தியாவில்தான் வருடா வருடம், அமைதியாக வீற்றிருக்கும் விநாயகரைத் தண்ணீருக்குள் அமுக்கிக் கரைத்து ஆனந்தம் அடைகிறார்கள் என்றால் நம்மவரும் அதைக் கெட்டியாகப் பிடித்து, சில காலத்துக்கு முன் கீரிமலையில் திருவிளையாடல் செய்துள்ளனர் என்பதை 'உதயன்' சுட்டிக்காட்டியிருந்தது குறிப்பிடத்தக்கது. மேற்கு ஆபிரிக்காவை ஆட்டிப் படைக்கும் எபோலா வைரஸ் நோய் போல் ஈழத்துக்கும் இந்தியாவிலிருந்து வேடிக்கையான சமயச் சடங்குகள் தொற்றலாம். சரி விடயத்துக்கு வருவோம். இந்தச் சூரனை முருகன் வெற்றி கொள்ள முதல், எமது இளைஞர்கள் அவனைத் தோளில் சுமந்தவாறு அங்குமிங்கும் ஓடியும் குலுக்கியும் அவன் வயிற்றைக் கலக்கி அவனைச் சறண்டர் ஆகச் செய்துவிடுவார்கள் போலிருக்கிறது. வேலனின் வேலுக்கு வேலையில்லாமல் போய் விடும் ஆண்டுதோறும் உலகிலே மிகவும் சிறப்பாக நடைபெறும் சூரன்போர் திருச்செந்தூரில்



நடைபெறுகிறது. இந்த விழாவை உலகில் உள்ள இந்துக்கள் நேராகவும், தொலைக்காட்சி மூலமும் பார்த்துப் பரவசமடைய, அந்தச் சேவல் என்ன பாவம் செய்தது, அதை ஆட்டி ஆட்டி ஏன் இம்சை செய்கிறார்கள். இந்தச் செயலை S.P.C.A (S.P.C.A= Society of Prevention of Cruelty to Animals) கண்டு கொள்வதில்லையா? அண்மையில் உள்ளூரில் நடைபெற்ற ஒரு சூரன்போரில் சூரன் பெயரால் மங்கையர்களை நோக்கி மாங்காய்களைத் தலை ஆட்டுபவர் (சூரன் தலையை) எறிந்து விளையாடி யிருந்ததாக 'உதயன்' சுட்டிக்காட்டியிருந்தான். சூரன் மாமரமாகி நின்றானே தவிர, மாங்காய் களை ஏன் எறிந்தான் என்று ஆராய ஒரு கொமிஷன் நியமிக்கபபடவேண்டும் எனவும் சிந்திக்க வேண்டியிருக்கிறது.

இப்போதெல்லாம் நமது சமூகத்தில் பெரியவர் களுக்கு அன்றாட வாழ்க்கையில் இளைஞர்கள் மதிப்புக் கொடுப்பதில்லை. முன்பெல்லாம் வயது முதிர்ந்தவர்கள் நக்கலாக 'நயின்ரி' என்றார்கள். பின்பு இயக்கங்கள் தலையெடுத்த காலத்தில் சற்று மரியாதையாக 'ஐயா' என்றார்கள். பிற்பாடு ஐயா தேய்ந்து அப்புவாகி இப்போ அம்போ என்று முதியவர்களை எமது சமூகமே கைவிட்டுவிட்டன. மூத்த பிரஜைகளை கௌரவிக்க அரசும், தனியார் வங்கிகள், ஸ்தாபனங்களும் முதியோர் அடையாள அட்டை வழங்கினும் அது பெயரளவில்தான். கசப்பான உண்மை என்னவெனில் தென்பகுதியில் பொது இடங்களிலும் பிரயாணம் செய்யும் வண்டி களிலும் முதியவர்களுக்கு இளையவர்கள் கொடுக்கும் மதிப்பு எங்கள் பகுதியில் கிடைப்பதில்லை என்பதுதான்.



"நாற்பதில் நாய்குணம்" என்று ஒர பழமொழி உண்டு. இந்த மொழியை யார் கண்டுபிடித்துச் சொன்னார்களோ தெரியவில்லை. உண்மையில் 40 வயதுக்குப் பின்தான் ஒரு மனிதனின் திறமைகள் வெளிப்படுகின்றன. எவறெஸ்ட் உச்சியை அடையும் போது டென்சிங்குக்கு வயது 40. மாமன்னன் மாக்கஸ் ஒறிலியஸ் உரோம இராச்சியத்தைக் கைப்பற்றும் போது அவனுக்கு வயது 40. பேஃடினன் மேகலன் ஆபிரிக்கப் பழங்குடி இனத்தைக் கண்டுபிடிக்கும்போது பசுபிக்

சமுத்திரத்தை கண்டுபிடித்து பெயரிட்டபோதும் அவனுக்கு வயது 40. வில்லியம் பொக்ஸ் டல்பொட் புகைப்படப் பிடிப்பை கண்டுபிடித்தது 40 வயதில்தான். உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானி மைக்கேல் ஃபறடே மின் பிறப்பாக்கியைக் கண்டுபிடித்த போது வயது 40. உலகப் புகழ்பெற்ற ஹென்றிஃபோட் (Herry ford) தனது கார் உற்பத்தி கம்பனியை ஸ்தாபித்து பணத்தைக் குவித்தது அவரது 40 வயதில்தான். அரிஸ்ரோட்டில் ஒனாசிஸ் கப்பல்களை வாங்கிக் குவித்து பணத்தில் மிதந்தது 40 க்கு மேல் தான். அணு விஞ்ஞானி அப்துல்கலாமை வெளி உலகு அறிந்தது 40 வயதுக்குப்பின்தான். இரண்டாவது உலக மகாயுத்தத்தில் வெற்றிக்கொடி நாட்டிய போது வின்ஸ்ரன் சேச்சினுக்கு வயது 40 வயதுக்கு மேல். சரி இவ்வளவும் ஆண் சாதனையாளர்கள் பற்றிச் சொன்னேன். 40 வயதுக்கு மேல் சாதனை புரிந்த பெண்களை பார்ப்போம். இந்தியாவை ஆண்ட இந்திராகாந்தி. இரும்பு மனுஷி மாகிறெட் தாட்ஷர் அன்னை திரேசா. உலக முதல் பெண் பிரதமர் சிறிமாவோ. பிரபல விஞ்ஞானி மேறி கியூறி அம்மையார் எனச் சொல்லிக்கொண்டே போகலாம்.

இயக்கங்கள் பல தமிழ்ப் பகுதியை நிர்வாகம் செய்த காலத்தில் நடந்த சம்பவம் ஒன்று– பிரயாணிகள் அடைக்கப்பட்ட பஸ்ஸில் முதியவர் ஒருவர் உட்கார இடம் கிடைக்காது நீண்டதூரம் நின்று கொண்டே வந்தார். இடையில் ஏறிய வாட்ட சாட்டமான இளைஞன் ஒருவன் நிற்பவர்களைத் தள்ளிவிட்டுத் தான் சௌகரியமாக முதியவருக்கு அருகில் நின்றகொண்டே பிரயாணம் செய்கையில், முதியவரின் காலைத் தனது சப்பாத்துக் காலால் மிதித்துக்கொண்டே பயணித்தான். முதியவருக்கோ அவன் இயக்கம் என எண்ணி வாயை மூடி அந்த 75 கிலோ வலியைத் தாங்கி வந்தவர், தொடர்ந்தும் பொறுக்க முடியாமல் மெல்ல "தம்பி நீங்கள் எங்கை இறக்கம்" எண்டார். அதற்கு அவன் "அதைப்பற்றி உமக்கென்ன பேசாமல் வாரும்" எண்டான். பொறுத்துப் பொறுத்துப் பார்த்த முதியவர் "தம்பி கோவியாதையுங்கோ, நீங்கள் இயக்கமோ" எனத் தயங்கினார். "ஏய் பெரிசு நான் இயக்கமும் இல்லை மயக்கமும் இல்லை. இன்ரவியூக்குப் போறன்" எண்டார். பொறுத்தது போதும் பொங்கி எழு மகனே பொங்கி எழு என மனோகரா பட வசனத்தை மனதுக்குள் மடக்கி வைத்திருந்த பெரியவர் உரத்த குரலில் "டேய் எடடா சப்பாத்துக்காலை என்ரை காலை விளக்கிக்கொண்ட நிற்கிறாய் தெரியேல்லையோ" எண்டாராம் . இது எப்படியிருக்கு?

1991 ஆம் ஆண்டு அரச சேவையிலிருந்து ஓய்வுபெற (பென்ஷன்) விண்ணப்பிக்க புகைப் படம் இணைக்க வேண்டியிருந்ததால் புகைப்படம் எடுக்க படாத பாடுபட்டேன். காரணம் யுத்த சூழலில் மின்சாரம் இல்லை. ஸ்ரூடியோக்கள் இயங்கவில்லை. நாயாய் அலைந்து திரிந்த நான், சுன்னாகம் வரை போனேன். என் கண்ணில் பட்டது ஓர் விளம்பரப் பலகை. "மின்சாரமின்றி படம் எடுத்துக்கொடுக்கப்படும்" என கொட்டை எழுத்தில் ஒரு ஸ்ரூடியோ முன்பாக எழுதி வைத்திருந்தார்கள். ஆவலுடன் உள்ளே போய் பார்த்தேன். "வாங்கோ ஐயா என்ன வேணும்" என்றொரு குரல் கும் இருட்டில் அசரீரி போல் கேட்டது. "பென்ஷன் எடுக்க படம் எடுக்கவேணும்" என்றேன். "உந்தக் கதிரையிலை இருங்கோ" என்றார். தட்டித்தடவி



கதிரையைக் கண்டுபிடித்து அமர்ந்து விட்டேன். மீண்டும் நிசப்தம், குரலைக் காணோம்.– பின்னால்லையிற் எஞ்சினை இயக்கப் போய்விட்டாரோ என எண்ணி இருக்கையில், 10 நிமிடம் கழித்து கையில் எரியும் மெழுகு வர்த்தியுடன் வந்தவர் அதை என் முகத்துக்கு கிட்ட

பிடித்தபடி வலது கையில் ஒரு சிறிய கமராவைப் பிடித்துக்கொண்டு "ஸ்மைல், ஸ்மைல்" என்றார். 53 வயதில் பென்ஷன் எடுக்கும் மடத்தனமான தீர்மானம், யுத்த பீதி, பொருளாதார நெருக்கடியென மண்டைக்குள் அடைத்து வைத்திருக்கும் சோகங்களை மீறி எப்படிச் சிரிப்பது, தவிர சிரித்துப் பல நாட்கள் ஆகிவிட்டிருந்தது. இருந்தும் படம் நன்றாக வரவேண்டும் என்ற வைராக் கியத்துடன் நாகேஷின் நகைச்சுவை காட்சிகள் சிலவற்றைக் கற்பனை பண்ணி சிரிக்க முயற்சிக் கையில் அவர் படத்தை எடுத்துவிட்டு "ஒரு கிழமை களிச்சு வாங்கோ" என்றார்.

அந்த 7 நாட்கள் எப்போ வரும் என சினிமா படத் தயாரிப்பாளர் ஏங்குவது போல் ஏங்கி 7 ஆம் நாள் விரைந்தேன் சுன்னாகம் ஸ்ரூடியோவுக்கு – படம் றிலீஸ் ஆகியிருந்தது, ஆனால் அது என்னைப் போலில்லை. இது நானில்லை என்றேன். சத்தியமாய் அது நீங்கள்தான் என்றார் ஸ்ரூடியோக்காரர். வேறு வழியில்லாமையால் பென்ஷன் விண்ணப்பத்துடன் கொழும்பு போய் அக்கவுண்டனிடம் கொடுத்தேன். புகைப்படத்தை உற்றுப் பார்த்தவர் "You Look Like A Mummy" என்றார். அதற்கு நான் "No Sir I Think I Resemble My Dad" என்றேன். பின்புதான் அவர் குறிப்பிட்ட மம்மி எகிப்திய மம்மி என்பது. எனது கஷ்டத்தை உணர்ந்த அவர் பென்ஷனுக்கு அனுமதியளித்து விட்டார்.

இன்னும் பென்ஷன் காட்டில் அந்த மம்மி பயமுறுத்திக் கொண்டிருக்கிறது. மின்சாரமின்றி படமெடுத்து கொடுக்கப்படும் என்ற விளம்பரத்தை மின்சாரமின்றி படமெடுத்து கெடுக்கப்படும் என எழுதியிருக்க வேண்டியது. "காதலிக்க நேரமில்லை" படத்தில் நாகேஷ் பேசும் ஓர் வசனம் " நான் என்ன படம் எடுக்கிறேனோ அதுதான் படம். அதைப் பார்க்க வேண்டியது உங்க தலையெழுத்து"

இதை வாசித்துவிட்டு நீங்கள் சிரிக்காமல் சிந்திக்காமல் விட்டால் அது என் தலையெழுத்து என எடுத்துக்கொள்வேன்.



எம்மில் பலர் அன்றாட கருமங்களை உரிய நேரத்தில் செய்து முடிக்காமல் ஏதோ தாம் ஒரு பிசியான ஆள் போல் காட்டிக்கொள்வர். அடிக்கடி "I have no time, I have no time" எனச்சொல்வர். இந் நேரத்துக்கு றிவேஸ் கியர் கிடையாது. அது முன்நோக்கி சரியான வேகத்தில் ஓடிக்கொண்டே இருக்கும். அதனுடன் நாங்கள் தான் ஓடி வெல்ல முயற்சிக்க வேண்டும். அன்றாட கருமங்களை திட்டமிட்டு அந்தந்த நேரத்துக்குச் செய்து முடிப்பவர் தான் "Good manager of time" இவர்கள் வாழ்க்கையில் முன்னிலையில் இருப்பர்.

இரவு படுக்கைக்குப் போக முன், அடுத்த நாள் காலை எழுந்ததும் என்ன என்ன கருமம் என்ன நேரத்தில் செய்து முடிக்க வேண்டும் என வரிசைப்படுத்தி ஒரு தாளில் எழுதி வைத்துவிட்டு நிம்மதியாகப் படுத்துக் கொள்ளுங்கள். தூக்கம் தானாகவே வரும். அதைவிட்டு படுக்கும் போது மூளையில்எல்லாவற்றையும்போட்டுக்குழப்பாதீர்கள். பின்பு எல்லாம் பகற்கனவாகி விடும்.

ஒருவர் விமான நிலையத்துக்கு அவசர அவசரமாக காரில் போய்க் கொண்டிருந்தார். வீதியில் Colour light சிக்னலில் நிற்க வேண்டி வந்தது. அந்தச் சமயம் பார்த்து ஒரு பிச்சைக்காரன் "ஐயா" என்றவாறு வலது கையை காருக்குள் நீட்டினான். அவர் அவனை முறைத்துப் பார்த்து விட்டு "I have no time" எனக்கூறி அவனுடைய கையைத் தட்டிவிட்டார். பதிலுக்கு "I too have no time to spare" என இடது கையை நீட்டினான். கையில் றிவோல்வர்! வேறு வழியில்லாது நூறு ரூபாய்த் தாள் ஒன்றை அவன் கையில் திணித்து விட்டு கிறீன் லைற்றுக்காக காத்திருந்தார்.


பிச்சைக்காரன் "Thank you" சொல்லிவிட்டு அடுத்த காரை நோக்கி நகர்ந்தான். படித்த பிச்சைக்காரன் போலும். வாசகர்களே மேற்குறிப்பிட்ட வரிகளை வாசித்த நீங்கள் Don't waste my time என்று மட்டும் சொல்லிவிடாதீர்கள். சற்று சிந்தித்துப் பாருங்கள்.

Table Manners போல் Telephone Manners சும் அவசியம் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்று. தொலைத்தொடர்பு தொழில்நுட்பம் மிகவும் முன்னேறி விட்டாலும் அதன் பலனை அனுபவிக்கும் நாம் ரெலிபோன் பாவனைப் பண்பில் முன்னேறு வதாகத் தெரியவில்லை. விஞ்ஞானி அலெக்சாண்டர் கிரகம்பெல் 138 வருடத்துக்கு முன் "ஹலோ" சொல்லிக் கண்டுபிடித்த இந்தக் கருவி இன்றும் ஹலோ சொல்லிக் கொண்டிருந்தாலும் பலர் அந்த Telephone Manners சைக் கடைப்பிடிப்பதில்லை.




ஒரு நாள் எனது செல்போனுக்கு ஒரு கோல் வந்தது. 'ஹலோ பொன்னையாண்ணையைக் கதைக்கச் சொல்லுங்கோ என ஒரு அதட்டல் குரல். "யார் பொன்னையாண்ணை" என நான் கேட்க "என்னப்பா பொன்னையாண்ணையைத்தெரியாதோ" என்றார். சொறி றோங் நம்பர் எனச் சொல்லி எனது போனைக் கட் பண்ணிவிட்டேன். 10 நிமிடம் கழித்து மீண்டும் அதே குரல். "ஹலோ பொன்னையா அண்ணையிட்ட குடுங்கோ" எண்டார். வேறு வழியில்லை– "கொஞ்சம் லையினில நில்லுங்கோ" எனச் சொல்லிவிட்டு 5 நிமிடம் கழித்து லையினில காத்து நிண்டவரிடம் "'லோ பொன்னையாண்ணை குளிக்கிறார். ஒரு நிமிஷம் நில்லுங்கோ" எனச் சொல்ல அவர் "நான் கொஞ்சம் பொறுத்தெடுக்கிறன்" எனக் கட் பண்ணிவிட்டார். 10 நிமிடம் கழித்து மீண்டும் அதே குரல். "என்ன மாதிரி பொன்னையா அண்ணை குளிச்சிட்டாரோ" என்றார். அதற்கு நான் "தயவு செய்து லையினில நில்லுங்கோ பாத்துச் சொல்றன்" எனக் கூறிவிட்டு 5 நிமிடம் கழித்து "பொன்னையாண்ணை இப்பதான் சவுக்காரம் போடுறார்". என்றேன். அதன் பிறகு அவர் கோல் பண்ணவில்லை. பின்புதான் சரியான போன் நம்பரைக் கண்டுபிடித்தாரோ தெரியவில்லை. ஒரு சொறியாவது சொல்ல அவருக்குத் தெரிந்திருக்க வில்லை.

இதே போல் சில ஆண்டுகளுக்கு முன் கண்டியில் ஒரு கம்பனியில் ரெலிபோன் ஒப்பரேற் றராகப் பணிபுரிந்தேன். அடிக்கடி ஒரு வாடிக்கை யாளர் கோல் பண்ணுவார். நான் குட்மோனிங் சேர். கான் ஐ கெல்ப் யூ (Can I help you) என பணிவாகச் சொன்னாலும் அவர் "பத்தி ... ரண" என முக்கிச் சொல்வார். வேறு ஒன்றுமே சொல்லார். வழமைபோல் அதே வாடிக்கையாளர் கோல் பண்ணி "பத்தி..ரண" என முக்கினார். அவரது கோலை எமது பணிப்பாளர் பத்திரண வுக்குப் போட மிஸ்டர் பத்திரண கேட்டார் யார் லையின்லை என, நான் மிஸ்ரர் Constipation என்று. வேறு என்னத்தைச் சொல்ல.



## அந்தநாள் ஞாபகம்

தலைப்பை வாசித்ததும் மூத்த வாசகர் களுக்கு பழைய சினிமா பாடல் ஒன்று ஞாபகத்துக்கு வரலாம். அந்த நாள் ஞாபகம் வந்ததே எனும் பாடலும் மனத்திரையில் ஓடலாம்.

சினிமாப் பாடல்கள் பழையனவாகவோ புதியவையாகவோ இருப்பினும்எமது சமுதாயத்துக்கு பல நல்ல கருத்துக்களை அப்பப்போ சொல்லி வருகின்றன. மூத்த பிரஜைகள் அடிக்கடி சொல்வது என்ன பாட்டுகள் வந்தாலும் அந்தக்கால பாட்டுக் களைப் போலை வராது என்பது தான்.

தியாகராஜ பாகவதர் படங்களில் வந்த பாடல்கள், தமிழில் பண்டிதர் பட்டம் பெற்றவர் களுக்குத்தான் புரியும். பாமர மக்கள் இசையை மட்டுமே ரசித்தனர் என்பதுதான் உண்மை. அவரது பாடல்கள் தான் பலருக்குப் புரியாமல் இருந்தது என்றால் தற்கால சினிமா கவிஞர்களும் தமது திறமையைக் காட்டி வருகின்றனர். தியாகராஜ பாகவதர் காலத்து பாடலில் வதனமே சந்திர பிம்பமோ மலர்ந்த சரேரசமோ? என கதாநாயகியின் அழகை வர்ணிக்க வைரமுத்து போன்றோர் ஆம்பர் ஆம்பர் என இலக்கணத் தமிழ் எழுதி இசைக்காகத் தழிழை வருத்தி வருகின்றனர். அது மெட்டுக்கு பாட்டாம். நிற்க, நான் சொல்ல வந்த விடயம் எமது சமுதாயம் வேண்டி நிற்பது நிம்மதிதான். அந்த நிம்மதி முக்கியமாக யாழ் குடாவில் இல்லவே இல்லை என்பதுதான்.

அதிகாலை நான்கு மணிக்குப் பின் எமது கோயில்களில் மணியோசையும் ஒலிபெருக்கியின் ஓலமும் நிம்மதியாகத் தூங்கும் வயோதிபர்கள், சிறுவர்கள் என பாரபட்சம் இல்லாமல் துயில் எழுப்பி விடுகின்றன. மாணவர்கள் காலையில் எழுந்து படித்தால் பாடங்கள் இலகுவாக மனதில் பதியும். ஆனால் எமது கோயில் குளாய்களின் ஒப்பறேற்றர் அவர்களைப் படிக்கவிடாமல் 100 டெசிபெல் அளவில் பாட்டைப்போட்டு குளப்பி விடுவார். சரி! றேடியோவைத்தான் கேட்போம் என்றால் ஒவ்வொரு வானொலியும் தமது வானொலியை சத்தமாக போட்டு பாட்டைக் கேட்கும் நேயர்களைப் புகழ்ந்து நேயர்களை நோயர்களாக மாற்றி விடுகின்றனர்.

அண்மையில் எனது நண்பர் ஒருவரின் இறுதி யாத்திரைக்குச் சென்றிருந்தேன். இறுதிச் சடங்கு முடிவுற்று அவரது பூதவுடல் இறுதியாத்திரை புறப்பட இளைஞர்கள் வெடிகள் வெடித்து குதூகலம் கொண்டாடி பட்டாஸ்களை கொளுத்தி வீதியால் போவோர் வருவோரைக் கவனத்தில் கொள்ளாது வீசி எறிந்து மகிழ்வதைக் காணக்கூடியதாக இருந்தது. இறந்தவரோ மிகவும் பண்பானவர். அவர் இந்தச் செயலை முற்கூட்டியே அறிந்திருந்தால் மிகவும் வருந்தியிருப்பார். அவரது உறவினர்கள் இதையெல்லாம் கவனத்தில் கொள்வதில்லை.

இறுதியாத்திரையிலும் ஆரவாரமாகப் போக வேண்டுமென விரும்புகிறார்களே தவிர இறந்தவரின் விருப்பத்தைக் குறித்துச் சிந்திக்கிறார்கள் இல்லை. கண்ணீர் அஞ்சலி நோட்டீஸ்களை அடுத்தவர், அயலவர்கள் அனுமதியின்றி மதில்சுவரில் ஒட்டி விலாசம் காட்டுவதில் இன்பம் அடைகின்றனர். இப்பொழுதெல்லாம் கலியாண வீடு, சாமத்தியச் சடங்கு, பிறந்தநாள் எனக் கொண்டாட்டங்களுக்கு பெரிய பெரிய பொக்ஸ் ஒலிபெருக்கிகளை உச்ச ஒலியில் ஒலிக்கவிட்டு, குறைந்தது அயலில் உள்ள பத்து வீட்டுக்காரர்களையாவது குழப்பி விடுவதில் இன்பமடைகின்றார்கள். நம் மக்கள். எங்கே நிம்மதி எங்கே நிம்மதி எனப் பாடிவிட்டு வாயை மூடிக்கொண்டு இருக்க வேண்டியதுதான் என முடிவெடுக்க, முயற்சி செய்ய, இளைஞர் ஒருவர் எனது ஆதங்கத்தைப் புரிந்துகொண்டு அங்கிள் யாழ்ப்பாணத்தில் நிம்மதியாய் இருக்க விரும்பினால் இருக்கவே இருக்கிறது என்னிடம் மருந்து என்றார். “அது என்ன மருந்து தம்பி எனக் கேட்ட போது சகல விதமான போதை வஸ்துகள், மதுபானங்கள் தாராளமாய் தரலாம்” எண்டார்.

மகாகவி பாரதியார் பாடியது போல் காலை எழுந்ததும் படிப்பு, பின்புதான் மற்ற கருமங்கள். யாழ் மக்கள் காலை எழுந்ததும் முதல் வேலையாக பத்திரிகைகளை படிப்பதும் வானொலிகளைத் திருப்பித்திருப்பிச் செய்திகள் கேட்பதும் அன்றாட வேலையாகிவிட்டது. எப்படி ரீ, கோப்பி குடிப்பார் களோ அப்படி பத்திரிகைகள் வானொலி கேட்காமல் எம் மக்களுக்கு விடியாது.



செய்திகளை தனியார் எப்.எம். வானொலிகள் பலத்த ஆரவார இசையுடன் பிரதான செய்தி, மணித்தியால செய்தி என வாசிக்க நாம் எல்லாம் காதைத் தீட்டிக்கொண்டு கேட்போம். முன்பெல்லாம் இலங்கை வானொலியில் மட்டும்தான் நல்ல தமிழில் செய்தியைக் கேட்கலாம். அதுவும் அரச வானொலி என்பதால் அரச விரோத அல்லது சுயாதீனமான செய்திகளை கேட்க முடிவதில்லை. இருந்தும் நாம் சுயமாக சிந்தித்துச் செயற்பட்டோம். இன்று தனியார் வானொலிகள் உண்மையாக சுயாதீனமான செய்திகளை வாசிக்கின்றனரோ தெரியவில்லை. ஆனால் தமிழை ஏன் கொலை செய்கின்றனர் என்பதுதான் புதிராக இருக்கிறது.

அவர்கள் வாசிக்கும் பாணி ஒரு ஸ்ரைல் என நினைக்கின்றனரோ தெரியவில்லை. உதாரணமாக நம்பத்தகுந்தது என்பதை நம்பத்தக்க என்று இழுக்கிறார்கள். செய்தி வாசிப்பவர்களுக்கு என பயிற்சி ஏதாவது கொடுக்கிறார்களோ தெரியவில்லை. வேகமாக வாசிப்பதும் ஒரு ஸ்ரைல் என நினைத்து தமிழை நசுக்கி சொற்களை விழுங்கி விடுகின்றனர். அதனால் நேயர்கள் கவனமாகக் கேட்டு சில விடயங்களை ஊகித்துக்கொள்ள வேண்டியுள்ளது.

சில தனியார் வானொலி அறிவிப்பாளர்கள் மிக வேகமாக நல்ல தமிழிலும் பேசுவது கொஞ்சம் ஆறுதல் தந்தாலும் செய்தி வாசிப்பாளர் நல்ல பயிற்சி பெற வேண்டும் என்பது பல நேயர்களின் விருப்பமாக உள்ளது. இருந்தும் அறிவிப்பாளர்கள் நேயர்களிடம் முக்கியமான கேள்விகள் கேட்பதை தவித்துக் கொண்டால் நல்லது. அது என்ன முக்கியமான கேள்வி என கேட்பது காதில் விழுகிறது. அதுதான் "சாப்பிட்டாச்சா" ரீ குடிச்சாச்சா? இன்று என்ன சாப்பாடு? நாங்கள் வந்தால் சாப்பிடலாமா? போன்றவை.



ஆங்கிலம் இரவல் வாங்கியே வளர்ந்த மொழியாகிலும் உலக மொழியாக வளர்ந்து விட்டது. வாயிருந்தால் வங்களாம் போய் வரலாம் என்பார்கள். ஆங்கிலம் பேசத் தெரிந்தால் அகிலம் முழுவதும் போய் வரலாம். ஆங்கிலேயர் ஆண்ட நாடெல்லாம் ஆங்கிலம் பரவிவிட்டது. ஆங்கிலம் தெரிந்தால் சமூகத்தில் ஒரு அந்தஸ்து என ஒரு நிலைப்பாடு. குறிப்பாக தமிழ் நாட்டு பேச்சு வழக்கில் ஆங்கிலம் கலக்காத வார்த்தைகளே இல்லை எனலாம்.

"ஜாலியா நாவல் படிச்சுகிட்டு இருந்தார் சார்" ஜாலி என்றால் Jolly, jolly என்றால் சந்தோஷம். அது ஜாலியாகிவிட்டது. நாவல் என்றால் Nove, Novel என்றால் கதை. சார் என்றால் Sir தமிழ் படும்பாடு, நான் ஆங்கிலேயர் ஆண்ட காலத்தில் பிறந்து வளர்ந்து ஆங்கிலம் படித்தாலும் ஆங்கிலப் பாடம் எம்மை ஆட்டிப் படைத்து விடும். ஒரு முறை எனது ஆங்கில ஆசிரியர் Malady என்றால் என்ன என்று எனக்கு முன்வரிசையில் அமர்ந்திருந்த


நண்பனைக் கேட்டார். அவனோ திருதிரு என்று முழித்துக் கொண்டு எழும்பி நின்றான். பாவம் அவனுக்கு உதவ "Woman Without Children" என்று மெல்ல அவன் காதில் மட்டும் கேட்கும்படி சொல்லிக் கொடுத்தேன். இல்லை கெடுத்தேன். எனக்கு விழவேண்டிய அடியை அவனே வாங்கிக் கட்டிக் கொண்டான். malady என்றால் நோய் வருத்தம் என்பதை அப்போது அறிந்திருக்கவில்லை.

பின்பு 1968 ஆம் ஆண்டு கிளிநொச்சியில் எனது குடும்பத்தினருடன் வசித்து வந்த போது ஒருநாள் தந்தி வந்தது. Mother Expired – pathmanathan என்று. எனது மனைவி தந்தியைப் பார்த்ததும் குளறி அளத்தொடங்கிவிட்டாள். ஊரில் உள்ள தனது தாயாருக்கு ஏதாவது நடந்திருக்குமோ என தந்தியை அனுப்பிய பத்மநாதன் my mother Expired என்று எழுதி அனுப்பியிருக்கலாம். அவர் ஏன் அந்த my யை விட்டாரோ தெரியவில்லை. அவரது பேனா மையை மிச்சம் பிடிக்க நினைத்தாரோ? எதற்கும் ஊரில் உள்ள உபதபால் அதிபரை ரெலிபோனில் தொடர்பு கொண்டு எனது மனைவி பேசினார். அதற்கு அவர் சொன்னார். "உன்ரை கொம்மா இப்பதான் மீன் வேண்டிக் கொண்டு போறார்" எண்டு.

பின்பு 1992 ஆம் ஆண்டு Care international எனும் N.G.O வில் சேவையாற்றிய காலம். எமது ஸ்தாபனத்துக்கு கொழும்பிலிருந்து கப்பல் மூலம் பருத்தித்துறைக்கு பொருள்களை அனுப்புவார்கள். பெட்டிகளில் Care என பெரிதாக விலாசம் இட்டிருப்பார்கள். கப்பலிலிருந்து அவற்றைப் பாக்ஷ் எனும் மிதக்கும் படகில் இறக்கி இறங்கு துறைக்குக் கொண்டு வந்து லொறிகளில் ஏற்றும் பணியில் தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்படுவர். இதே போல் ஏனைய திணைக்களங்களுக்கும் பெட்டிகளில் பொருள்கள் வரும். நாம் "தம்பியவை" பெட்டீயிலை Care எண்டு போட்ட பெட்டிகளை இறக்கி வாற லொறியிலை ஏத்தி விடுங்கோ" என்று சொல்லி விட்டு வந்துவிட்டோம். அரைகுறை இங்கிலீசு தெரிந்த தொழிலாளர்கள் சுகாதார இலாகாவுக்கு வந்த Handle with care எனப் போடப்பட்ட பெட்டிகளையும் அனுப்பிவிட்டார்கள் கேட்டதற்கு அவர்கள் சொன்ன பதில் நீங்கள் தானே care எண்டு போட்ட பெட்டிகளை இறக்கச் சொன்ன நீங்கள் என்று கொஞ்சம் சிரியுங்களேன்!

அந்தக் காலத்தில கோயிலுக்குப் போனால் திரும்பி வரக்கை கடைலைக் கொட்டை வாங்கிக் கொறிச்சுக் கொண்டு வருவம். இப்ப கடலைக் கொட்டை அவுட்ஒஃப்பாக்ஷன் ஆகி ஐஸ்கிறீம் அந்த இடத்தைப் பிடித்து விட்டது. இந்த ஐஸ் கிறீமுக்கு சில மாதங்களுக்கு முன்பு பலசோதனைகள் நடந்தது உங்களுக்கு ஞாபகம் இருக்கும். அதில் மலத்தொற்றுக் கிருமி என பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியிருந்தன. இருந்தும் ஐஸ்கிறீம் புத்துயிர் பெற்று அமோகமாக விற்பனை யாகிறது. எங்கெங்கு கோயில் கொடியேறி இருக்குது எண்டு ஐஸ்கிறீம் வான்காரரைக் கேட்டால் தெரியும். அங்கே ஒலி பெருக்கிச் சகிதம் படையெடுப்பர்.


இந்த ஐஸ்கிறீமில் பார்க்க ஒலிபெருக்கி மிக ஆபத்தானது. ஓடும் வானில் பலத்த சத்தத்துடன் பாடல் ஒலித்துக் கொண்டு செல்லும் போது சிறுவர்கள் பெரியவர்கள் எனப் பலர் படையெடுத்து



ஐஸ்கிறீமை வாங்கி றோட்டைக் கடக்க எதிரிலும் பின்புறமாகவும் வரும் வாகனங்களில் மோத வாய்ப்புண்டு. இப்படி பல தடைவ விபத்துக்கள் ஏற்படுவது கண்கூடு. இதை போக்குவரத்துப் பொலிஸார் காணபதில்லை போலும். சரி விடயத்துக்கு வருவம். ஐஸ்கிறீம் ஒரு சத்துணவு என்பது பலருக்குத் தெரியாதிருக்கலாம். ஆனால் அதன் தயாரிப்பில் முட்டை மஞ்சள் கரு கலப்பது நம்மில் பலருக்குத் தெரியாது என நினைக்கிறேன். சைவ ஐஸ்கறீம் தயாரிக்கிறார்களோ தெரியவில்லை.


இவற்றையெல்லாம் கருத்தில் கொள்ளாது விரதமிருந்து கோயிலுக்குப் போய் கும்பிட்டு ஐஸ்கிறீம் குடிக்காது யார் வருகிறார்கள்? நல்லூர் கோயில் உட்பட பல கோயில்களில் ஐஸ்கிறீம் நிரந்தர இடம் பிடித்து பக்தர்களைப் பரவசம் மூட்டுகிறது. இந்துக்கள் Vegetarian ஆக இருப்பது மரபு அதில் சிலர் Eggtarian ஆக இருக்கிறார்கள் இந்த ஐஸ்கிறீம் குடிப்பவர்களை Eggtarian என தம்மை சமாதானப்படுத்தலாம். தீர்மானத்தை உங்களிடமே விட்டுவிடுகிறேன்.

* மந்திரியாருக்குக் காது மந்தமாகிவிட்டது போலிருக்கிறது. ஏன் அப்படிச் சொல்கிறாய்? அரசர் தனக்கு வாயுக்கோளாறு வைத்தியரை அழைத்து வாரும் எனச் சொல்ல ஆயுள் கோளாறு என நினைத்து சோதிடரை அழைத்து வந்திருக்கிறார்.
* அரசன் :– குற்றம் சாட்டப்பட்ட சேவகன் செய்த குற்றம் என்ன?
* மந்திரியார்:– "யார் அங்கே" எனக் கூப்பிட்டதும் விழுந்தடித்துக் கொண்டு ஓடி வந்தான் அரசே.
* அரசன் :– அதில் என்ன குற்றம்?
* மந்திரியார்:– அவன் ஓடி வந்தது அந்தப் புரத்திலிருந்து மகாராஜா!



* இப்பவெல்லாம் இளவரசர் ராஜசபையில் அடிக்கடி எழுந்து நின்று பணிவுடன் அரசரைக் கனம் பண்ணுகிறாரே! அப்படி ஒன்றும் கனம் பண்ண எழுந்து நிற்கவில்லை. இளவரசர் இருக்கையில் மூட்டைப் பூச்சிக்கடி தாங்க முடியாது எழுந்து நிற்கிறார்.
* மன்னர், ஆட்சியில் இருக்கும் போதே இளவரசர் முடிசூடி விட்டாரே இளவரசர் தலையில் முடியில்லை அதனால் முடி சூடிவிட்டார் அவ்வளவுதான்.

கல்யாணம் சொர்க்கத்தில் நிச்சயப்படுத்தப் படுகின்றன என்பார்கள். இந்தக் கூற்று உண்மையோ அல்லவோ என்பது வேறு விடயம். ஆனால் எமது விதி, வீதிகளில் தீர்மானிக்கப்படுகிறதோ என சிந்திக்க வேண்டியுள்ளது. அன்றாடம் பத்திரிகை களில் வரும் செய்திகள் எமது எண்ணத்தை, சிந்தனையை அவ்வாறு தட்டி விடுகிறது. தினமும் பத்திரிகைகளில் வரும் செய்திகளை விட விபத்துக்கள் அதிகமாகவே நடந்தேறுகின்றன என்பதைத் தனியார், அரச வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறும் நபர்களைக் கொண்டே அறியலாம். தவிர பத்திரிகைகளில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் மதில் மேல் மோதி ஓட்டுநர் சாவு என விபத்துக்கான பழியை மோட்டார் சைக்கிள் மீது போடுவதும் வேடிக்கையாக இருப்பது கண்கூடு. தாம் பயணம் செய்யும் வாகனத்தைக் கட்டுப்படுத்துவது ஓட்டுநரின் கையில் தான் உள்ளது. மோட்டார் சைக்கிளினதும் ஓட்டோவினதும் கடிவாளம் கையிலும் காரினதும் கடிவாளம் காலிலும் எமது




கட்டளைக்காகக் காத்திருக்க அவற்றை நாமே கட்டுப்படுத்த வேண்டும்.

காப்பெற் வீதியில் செல்லும் வாகனங்கள் கட்டுப்பாடு அற்ற வேகத்தில் செல்வதைப் போக்கு வரத்துப் பொலிஸார் கண்காணித்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும். அரசு முக்கியமான வீதிச் சந்திப்புக்களில் 'கலர் லையிற்' சிக்னல் அமைத்து வாகன நெரிசலைக் கட்டுப்படுத்த ஏற்பாடு செய்தால் ஓரளவுக்கு விபத்துக்களைக் குறைக்கலாம். தவிர லைசென்ஸ் (ஓட்டுநர் அனுமதிப் பத்திரம்) பெற்றுக்கொள்ள எழுதும் பரீட்சையில் பாஸ்

பண்ண மட்டும் படித்த வீதி ஒழுங்கு நூலை மறந்து விட்ட பலர் உண்மையில் வீதி விதிகள் தெரிந்திருக்கிறதா என்பதையும் அடிக்கடி சோதித்தால் விபத்துக்களைக் குறைக்கலாம்.

ஓட்டோக்கள் ஏழைகளின் வாகனம். எமது அவசர தேவைகளுக்கு உதவுகின்றன. இருந்தும் அவற்றின் வாடகை, ஓட்டுநரின் தீர்மானத்திலே உள்ளது. கொழும்பில் மீற்றர் பூட்டிய ஓட்டோக்கள் சேவையில் உள்ளதால் வாடிக்கையாளர் பயமின்றிப் பயணம் செய்ய, யாழ்ப்பாணத்தில் பேரம் பேசி ஏற வேண்டியுள்ளது. இது பற்றி எவரிடம் முறையிடுவது என்பது மக்களுக்குத் தெரியவில்லை. மோட்டார் சைக்கிளைப் பற்றிக் கூறும்போது எனது மனத்திரையில் தென்படுகிறது ஒரு சம்பவம். சுமார் 60 வருடங்களுக்கு முன்பு எமது ஊரில் ஒரு பி.எஸ்.ஏ மோட்டார் சைக்கிள் அண்ணனிடம் நின்றது. அவர் இல்லாத சமயம் பார்த்து பல உதைகள் கொடுத்து இயக்கி தோட்ட வெளியில் தூள் கிளப்பினேன். இதைக் கவனித்த ஆறுமுக வாத்தியார் "தம்பி என்னை ஒருக்கா ஒட்டகப்புலத்திலை இறக்கி விடுவீரா" எனக்கேட்க ஏறுங்கோ வாத்தியார் எனச் சொல்ல கட்டளைக்குக் காத்திருந்த இராணுவ வீரர் போல பாய்ந்து ஏறிவிட்டார் பின் சீற்றிலை.

பறந்தது பி.எஸ்.ஏ வாகனம். தாய்க் குரங்கை சேய்க் குரங்கு கட்டிப்பிடிப்பது போல் வாத்தியார் என்னைக் கட்டிப்பிடித்தபடி இடைக்கிடை தம்பி மெல்லப் போ, மெல்லப் போ என எம்.ஜி.ஆர். படத்தில்வந்த பாடல்போல் சொல்லிக் கொண்டிருந்தார். இடையில் 'டிங்' என ஒரு சத்தம் 'என்ன சத்தம் இந்த நேரம்' என அவர் கேட்க பின் ஸ்ராண்ட் கீழை இறங்கி விட்டுது என்றேன். நீர் ஓடிக்கொண்டே இரும் நான் காலால் தட்டி விடுகிறேன் என எனக்கு உதவுவது போல் சொல்லி மௌனமாகிவிட்டார். என்ன மாஸ்ரர் சத்தத்தைக் காணேல்லை எனக் கேட்க 'எல்லாம் சரி நேராய் பெரிய ஆஸ்பத்திரிக்கு விடும்' என்றார். ஏன் எனக் கேட்க 'இடது கால் சின்னி விரலைக் காணேல்லை' என்றார் சோகமாக.



குடியேற்றத் திட்டத்தில் பணிபுரியும் போது பலதரப்பட்ட குடியேற்றவாசிகள் தமது பிரச்சினைகளை அங்கு பணிபுரியும் உத்தியோகத்தர்கள் தான் தீர்க்க வேண்டும் என்று நினைப்பதுண்டு. சிறு சிறு பிரச்சினைகளையும் பெரிதாக்கி முறையிட்டுக் கொண்டே இருப்பார்கள். நான் வவுனிக்குளம் திட்டத்தில் பணியாற்றிக் கொண்டிருந்த போது எனது உதவியாளர் ஒருவர் நகைச்சுவையாகப் பேசிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் வல்லவராக இருந்தார். ஒருவர் தனது காணியில் இரவில் முள்ளம் பன்றிகள் தொல்லை தருகின்றன என்று அடிக்கடி முறைப்பாடு செய்து கொண்டே இருப்பார். அன்றும் அதே போன்று முள்ளம் பன்றிக்கு எதிராக முறையிடுவதற்கு வந்தார். உதவியாளர் முந்திக் கொண்டு "என்ன கந்தையா முள்ளுப்பண்டி வந்திட்டுதோ?" என்று கேட்க, அதற்கு அவர் "ஓம் ஐயா அதுதான் உங்களிட்டைச் சொல்லுவம் எண்டு வந்தனான்" என்றார். உதவியாளர் சொன்ன பதில் "இண்டைக்கு இரவு நான் வந்து அமத்தித்தாரன், நீ போ" என்றார். அன்றிலிருந்து அவர் முறையிட வருவதில்லை.

இதே போல் இன்னொரு நாள் புதிய குடியேற்றவாசிகளுக்கு காணிகளைக் காண்பிக்கும் கடமையில் ஈடுபட்டுவிட்டு மிகவும் களைப்படைந்த நிலையில் விடுதிக்குத் திரும்பிக் கொண்டிருக்க, ஒருவர் ஓடி வந்து, "ஓவசியர் ஐயா, என்ரை 64 ஆம் காணி எங்கை எண்டு காட்டி விட்டுப் போங்கோ" என்றார். அதற்கு அவர் அமைதியாகச் சொன்ன பதில், "பயப்பிடாதை உன்ரை காணி 65 ஆம் காணிக்குப் பக்கத்தில தான் இருக்கு. நாளைக்கு நேரத்தோட வா, காணியைக் காட்டுறன்".

இன்னொரு நாள் குடியேற்றத் திட்டத்தில் காணி சம்பந்தமான கூட்டம் கச்சேரியில் இருந்து

வந்த மாவட்டக் காணி அதிகாரியால் நடத்தப்பட, குடியேற்றவாசிகள் கலகலவென தமக்குள் பேசி கூட்டத்தை அமைதியாக நடத்த இயலாதது இடையூறாக இருந்தனர். மாவட்ட காணி அதிகாரி கடுப்பாகி, "என்ன ஓவசியர், உங்கடை ஆக்கள் அலட்டிக் கொண்டிருக்கிறாங்கள்" என்றார். அதற்கு ஓவசியார், "சேர் உதுக்குத்தான் வெள்ளைக்காரன் உவையளுக்கு (Allottee) என்று பேர் வைச்சவன்" என்றார். அதிகம் சிரிக்காத மாவட்டக் காணி அதிகாரி இரண்டு சென்ரிமீற்றர் மட்டும் சிரித்து விட்டு 'ரென்சன்' ஆகாமல் கூட்டத்தைத் தொடர்ந்து நடத்தினார்.

அது சரி, சிரிப்பை சென்ரிமீற்றரில் அளக்க முடியுமா எனக் கேட்கத் தோன்றுகின்றதா? இந்த அளவீடு குறித்து சினிமா கவிஞர் ஒருவர் தனது பாடலில் குறிப்பிட்டிருந்தார்.

ரெடி ஸ்ராட், கமெரா, அக்ஷன் இது சினிமா பாஷை அத்துடன் கட்கட் என இடைக்கிடையே இயக்குனர் சொல்வதெல்லாம் நடிகர்களைக் கட்டுப்படுத்தும் மொழிப் பயன்பாடு. இதை ஏன் சொல்ல நினைக்கிறேன் என்றால் எமது சமூக விழாக்கள், கொண்டாட்டங்கள் என்பவற்றின் இயக்குநர் வீடியோ படப்பிடிப்பாளர் தான். சினிமாவிலும் தொலைக்காட்சி நாடகங்களிலும் இயக்குநர் எப்படி நடிகர்களை ஆட்டிப் படைக்கிறாரோ அதுபோல் நிஜ வாழ்வில் நடக்கும் மங்கலகரமான நிகழ்வுகளை இந்த வீடியோ படப்பிடிப்பாளர்கள் குறிப்பாக மணப்பெண்களை தங்கள் இஷ்டப்படி கமெராவுக்குள் பதிவுசெய்யப்படாத பாடுபடுத்து கிறார்கள். கலியாணமாக இருந்தால் மணமகள் வீட்டில் இருந்து மணமேடைக்கு வரமுன்னே அப் பெண்ணை பல கோணங்களில் நிற்க வைத்தும் பெண்ணின் பொற்றோர்களை துணைநடிகர் களாக்கியும் படுத்தும்பாடு பெரும்பாடு. கவுண்ட மணியின் பாஷையில் சொன்னால் "போதுமடா சாமி"

மணமேடையிலும் வீடியோ இயக்குநர் தான் கட்டுப்பாட்டாளர். முன்பெல்லாம் கன்னிக்காலைச் சுற்றி மாவிலை, தோரணங்கள், மாலைகள் என அலங்கரித்து மணமேடை அழகாகவிருக்கும். மணமேடை ஐயரின் கட்டுப்பாட்டில் இருந்தது. காலம் செல்லச் செல்ல, மெல்ல மெல்ல மாலையும் தோரணமும் கமெராவுக்கு இடைஞ்சலாக இருக்குமென வீடியோ இயக்குநரால் அகற்றப் பட்டுவிட்டது. ஐயரும் இதைப்பற்றி கேள்வி எழுப்பவில்லை. இலட்சக்கணக்கில் செலவு செய்து திருமணம் நடத்தும் பொற்றோரும் இந்தச் செயலைத் தட்டிக் கேட்கவில்லை.



திருமணத்தையோ பூப்பெய்த சடங்கையோ பார்த்து ஆசீர்வாதம் செய்ய அழைக்கப் படுபவர்கள். மேடையில் என்ன நடக்கிறது என்பதைப் பார்க்க் கமெராமன், லையிற் பிடிப்பவர் களை "சற்றே விலகியிருக்கும் பிள்ளாய்" என்று கூற இயலாதுள்ளது. என்னதான் நடக்குது நடக்கட்டுமே என இருந்து விடுவார்.

சடங்குகள் முடிவுற்று அறுகரிசி போடும் போட்டி பெரும் போட்டி. விருந்தினர் தமது வரவைப் பதிவு செய்ய (வீடியோவில்) முண்டியடித்து நிற்பர். அறுகரிசி போட்டு மணமக்களின் கையில் என்வெலப்பைத் திணித்துவிட்டுஅடுத்த கட்ட கியூவுக்கு ஓடி இடம் பிடித்து வயிற்றுக்கு வஞ்சகம் செய்யாது பார்த்துக் கொள்வர்.

எனக்குத் தெரிந்த அன்பர் ஒருவர் ஊரில் நடக்கும் கல்யாணம், பூப்பெய்த சடங்கு, பிறந்த நாள் கொண்டாட்டம் என ஒன்றையும் தவறவிடாது போய் இருப்பர். அவர் கொடுக்கும் என்வெலப்பில் பணம் இருக்காது என்ற இரகசியம் எனக்கு மட்டுமே தெரியும். தயவு செய்து இந்த இரகசியத்தை ஒருவருக்கும் சொல்லாதீர்கள். இலட்சக்கணக்கில் செலவு செய்து நடத்தும் விழா உபயகாரர் குத்துவிளக்கில் கணக்குப் பார்க்க நேரிடும்.

மனிதர்கள் பல விதம். அதில் ஒவ்வொருவரும் ஒருவிதம். உலகநாதன் இதற்கு விதிவிலக்கல்ல. அந்தக்காலத்தில் எஸ்.எஸ்.சி சோதனையைத் தாண்ட அவர் பட்டபாடு அவருடன் படித்த மாணவர்களைக் கேட்டால் தெரியும். தவிர அக்காலத்து ஆசிரியர்கள் சக்கட்டை மாணவர்களை மட்டம் தட்டுவதில் வல்லவர்கள். ஆங்கில மொழியில் பாடங்கள் அமைந்ததால் ஒவ்வொரு வகுப்பிலும் ஆற அமர அமர்ந்து அவர் படிக்க வேண்டியதாயிற்று.



அதனால் எஸ்.எஸ்.சி எனும் தடையைத் தாண்ட அவர் பட்ட கஷ்டம் அவருக்குத் தான் தெரியும். மாணவர்கள் ஆசிரியர்களுக்கு பட்டம் சூட்டி தமக்குள் பகிடிவிட்டுக் கொள்வர். ஆனால் ஆசிரியர்கள் வெளிப்படையாகவே மாணவர் களுக்குப் பட்டம் சூட்டி அழைப்பர். ஆங்கில ஆசிரியர் உலகநாதனுக்கு சூட்டிய பட்டம் உலக்கைநாதன்! இப்பட்டம் உலகநாதனுக்கு மன உழைச்சலை ஏற்படுத்தியது. இப்பட்டத்தை அழிக்க தனக்குத்தானே ஒரு பட்டத்தை ஏற்படுத்த ஒரு உபாயம் செய்தார். தனது பெயருக்கு முன்னால் ஓல்றவுண்டர் எனும் பட்டத்தைப் போட்டு ஒரு தபால் அட்டையை எழுதி பள்ளிக்கூட விலாசத்துக்கு அனுப்பிவிட்டார்.

விலாசம் தெளிவு போதாமையால் அதிபர் தபாலட்டையை விளம்பரப் பலகையில் போட்டு விட மாணவர்களும் ஆசிரியர்களும் ஆர் இந்த ஓல்றவுண்டர் எனக்குழம்ப, அந்த ஓல்றவுண்டர் பட்டம் அவரது பெயருடன் ஒட்டிக்கொண்டது. பிற்காலத்தில் உண்மையான ஓல்றவுண்டர் லோகநாதன் எனும் பெயருடைய ஒருவர் மிகவும் பிரபல்யமான பேர்வழியாக பத்திரிகைகளில் பெயர் அடிபட்டது. இதைச் சாதகமாகப் பயன்படுத்த உலகநாதன் தீர்மானித்தார். அதன்படி ஒரு பத்திரிகையாளர் சந்திப்பை ஏற்படுத்தி தான் தான் அந்த ஓல்றவுண்டர் லோகநாதன் என நிரூபிக்க விபரீத ஆசையை நிறைவேற்ற முற்பட்டார். பத்திரிகையாளர்கள் கேட்ட கேள்விக் கணை களுக்குச் சலிக்காமல் பதில் கொடுத்தார். தான் ஒரு சிவில் சேவன்ற் எனவும் அரச உயர் பதவிகளில் இருந்ததாகவும் பல்துறை விற்பன்னர் எனவும் எடுத்துவிட்டார்.

விளையாட்டுத் துறையில் சர்வதேச பயிற்சியாளர் எனவும் கிறிக்கெற்றில் சச்சினுக்கு துடுப்பாட்டங்களின் நுணுக்கங்களையும் கால் பந்தில் றொனால்டோவுக்கு ஆலோசகராகவும் அரசியலில் ஒபாமாவுக்கு உதவியாளராகவும் கர்நாடக இசை விற்பன்னராகவும் இருப்பதான புளுகு மூட்டையை அவுட்டு விட செய்தியாளர் ஒருவர் கேட்ட கேள்வியில் தடக்கி விழுந்து போனார். அப்படி என்ன கேள்வி என அறிய வேண்டுமென நினைக்கிறீர்களா? கர்நாடக இசையில் மும் மூர்த்திகளின் பங்களிப்பு என்ன? என்பதுதான் அந்தக் கேள்வி. இதற்கு ஓல்றவுண்டர் சொன்ன பதில் அந்த மும்மூர்த்திகளை இசைப் பிரியர்கள் மறக்கமுடியுமா? கானமூர்த்தி, பஞ்ச மூர்த்தி, தட்சணாமூர்த்தி மக்கள் மனதில் நிலைத்து நிற்பார்கள் என்பதுதான்.



வளரும் பயிரை முளையிலே தெரியும் என்பார்கள். இது தாவரங்களுக்கு பொருந்தும். ஆனால் மனிதர்களுக்கும் பொருந்துமோ என்பது சந்தேகமாக இருக்கிறது.

வாழ்க்கையில் முன்னேறிய பலரது வாழ்வில் இளமையில் அவர்கள் ஜொலித்தார்கள் எனத்

தெரியவில்லை. பலரைச் சொல்லலாம். அவர்களில் சிலர் இளம் பராயத்தில் சாதாரண சிறுவனாகவோ சிறுமியாகவோ தான் தென்பட்டார்கள். ஐசாக் நியூட்டன் பல கண்டுபிடிப்புக்களுக்குச் சொந்தக் காரன். சிறுபராயத்தில் படிப்பில் நாட்டம் செலுத்த வில்லை. அல்பேட் ஐயன்ஸ்டீன் சாதாரணமான சிறுவனாகத்தான் வளர்ந்தார் பிற்காலங்களில் அவர்களை உலகமே திரும்பிப் பார்க்க வைத்தது அவர்களது அறிவியல் திறமைதான்.

நாற்பதில் நாய்க்குணம் என்றும் சொல்வார்கள். இது எவ்வளவு உண்மை என்பது புரியவில்லை. உலகில் பிரபல்யமான மனிதர்கள் 40 வயதுக்கு மேல்தான் உச்ச நிலையை அடைந்துள்ளனர். உலக அரசியல், விஞ்ஞானம், செல்வம், திறமை என உச்ச நிலையை அடைய அவர்கள் 40 வயதைத் தாண்டிவிட்டனர் எனலாம். இருந்தும் சில அதிசயப் பிறப்புக்களும் இருந்துள்ளதாக அறியக்கிடக்கிறது. திருஞானசம்பந்தர் முளையிலே பாக்கள் இயற்றும் வல்லமையும் கணித மேதை ராமானுஜன் சிறுவனாக கணிதத்தின் சூத்திரத்தை உலகறியச் செய்தமையும் விதி விலக்காகக் கொள்ளலாம்.

தற்காலத்தை நோக்கினால் பல சிறுவர்கள், சிறுமிகள் முளையிலே ஜொலிப்பதைக் காணலாம். விஞ்ஞானம், தொழில்நுட்பம் முன்னேறிக் கொண்டிருக்கையில் அதை இலகுவில் புரிந்து கொள்கின்றனர். மூத்த, முதிர்ந்தவர்களுக்கு புரியாத தொழில்நுட்பங்களை இலகுவில் பிள்ளைகள்புரிந்து வைத்துள்ளனர் என்பது கண்கூடு.

இதே வேளையில் சிறுவர்களின் கற்பனா சக்தியும் கூர்மையாகவே உள்ளது. அண்மையில் எனது நண்பர் வீட்டுக்குச் சென்றிருந்தேன் வெள்ளிக்கிழமையானதால் அவர் தனது மகனை விளக்கு ஏற்றி சுவாமி கும்பிடும்படி சொல்லிவிட்டு என்னுடன் பேசிக்கொண்டிருச்தார். சற்று நேரம் கழித்து அவரது 6 வயது மகன் அப்பா பிள்ளையார் தன்ரை வலது கொம்பை ஏன் உடைத்தார் என்று கேட்க நண்பர் அது எனக்குத் தெரியாது வேணும் எண்டால் கொம்மாவிடம் கேட்டுப்பார் என்றார். அதற்கு அம்மாவும் தெரியாதாம் என்றான் பிள்ளை. பின்பு அந்தச் சிறுவன் வெளியில் வந்து எனக்குப் பதில் தெரியுது என்றான்.

என்ன பதில் எனக் கேட்க ஒரு முறை பிள்ளையார் பூலோகத்துக்கு வந்து வங்கியில் பணம் எடுக்க வரிசையில் நின்றாராம். அவர் முறை வந்ததும் வங்கி ஊழியர் பணம் எடுக்கும் படிவத்தில் கையொப்பமிட வேண்டும் எனக் கூற பேனையைக் கேட்டாராம். ஊழியர் கொடுக்க மறுக்க கோபங்கொண்ட பிள்ளையார் தனது கொம்பை முறித்து ஒப்பமிட்டுக் கொடுத்தாராம் என்றான். இது எப்படி இருக்கிறது.

சிரிப்பு என்பது மனித குலத்துக்கே சொந்தமானது என்று பழம் பெரும் நகைச்சுவை நடிகர் என்.எஸ்.கிருஷ்ணன் பாடி வைத்தார். சிரிப்பில் பலவகைச் சிரிப்பு சிரித்து எம்மை சிரிப்பில் மட்டுமல்லாது, சிந்திக்கவும் வைத்தவர் அந்தக் கலைவாணர். மனிதனின் உடல் உறுப்புக்களின் செயற்பாட்டை உயிரியல் விஞ்ஞானிகள் ஆராய்ந்து கண்டுபிடித்து நமக்குச் சொல்லியிருக் கிறார்கள். ஆனால் எமது மூளையின் செயற் பாட்டைப் பூரணமாக ஆராய்ந்து அறிய இன்னமும் காலம் தேவைப்படுகிறது. சிரிக்கவும் சிந்திக்கவும் மூளையே காரணம். சந்தோஷத்தின் ஒருவகை வெளிப்பாடே சிரிப்பு எனலாம்.



வாழும் வகையில் சிரித்து வாழ வேண்டும். பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே என ஒரு சினிமாக் கவிஞன் பாடி வைத்தான். நகைச்சுவை உணர்வு இல்லாதவன் வாழ்க்கையில் பற்று அற்றவன். வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும் என்பார்கள். நகைச்சுவைத் தென்றல் லியோணி ஒரு பட்டிமன்றத்தில் இந்த வாய்விட்டுச் சிரிக்காத மனிதர்களை சிரிக்கவைக்க "கலியாண வீட்டில் காணாமல்போன செருப்புகள் இந்த சிரிக்காத மனிதர்கள் வீட்டில்தான் இருக்கும்" என அழகாகச் சொல்லி எம்மை சிரிக்க வைத்தார்.

சிரிப்பு, சிரிப்பு என நான் உங்களுக்குச் சொல்லும் போது எனக்கு வந்த சிரிப்பையும் உங்களுக்கு சொன்னால் என்ன? ஒரு நாள் என்ரை கூட்டாளி ஒருவர் வீதியால் சோகமாக நடந்து வந்தார். என்ன மச்சான் முகம் வாடியிருக்கு எண்டன். "மச்சான் என்ரை கூட்டாளியைப் பார்த்து சிரிச்சது பிழையாய் போட்டுது" எண்டான். ஏன் மச்சான்? எண்டு கேட்டதுக்கு அவர் சொன்னார் "நான் சிரிச்சது கூட்டாளியைப் பார்த்து தான். அவருக்குப் பின்னாலை வந்துகொண்டிருந்த பரம எதிரியைப் பாத்தில்லை" எண்டான். நான் சொன்னேன் "கூட்டாளியுடன் சிரிப்பை ஓஃப் (Off) பண்ணியிருக்க வேணும்" எண்டு. அதற்கு அவர் சொன்னார் "ஓம் மச்சான் அது தான் நான் விட்ட பிழை" எண்டு பரம எதிரியையும் சிரிப்பால் வெல்ல முடியும். அது வாய்விட்டு சிரிக்காமல் புன்னகையாக இருக்கட்டும் வெற்றி உங்களுக்கே.

நாம் படித்த காலத்தில் ஆங்கில மொழியில் படிக்க வேண்டியிருந்தது (தமிழையும் சமயத்தையும் தவிர). ஒவ்வொரு தவணைக்கும் பரீட்சை வைத்து 'றிப்போட்' கொடுப்பார்கள். அந்த 'றிப்போட்டை' வீட்டுக்கு எடுத்துச் செல்லும் நாள் நெருங்க நெருங்க ரென்ஷனாகி விடுவோம். காரணம் வீட்டில் அப்பா அல்லது அம்மா 'றிப்போட்டை' பார்த்துத்தான் 'வரவேற்பு' அளிப்பார்கள். சில பெற்றோர்கள் முன்கூட்டியே பூவரசம் தடி தயாராக்கியி வைத்திருப்பார்கள். ஒருமுறை எனது றிப்போட்டை பார்த்த அம்மா (அவர் தான் வீட்டில் கல்வி அதிகாரி) ஒவ்வொரு பாடமாக நான் எடுத்த புள்ளிகளை நோட்டம் விட்டுவிட்டுக் கேட்டார். 'இதென்ன பௌதிகவியல் (Physics) பாடத்தில் 10 மார்ஸ் வாங்கியிருக்கிறாய்' என்று. அதற்கு நான் "அம்மா பௌதிகவியலில் வெளிச்சம், சூடு, மின்சாரம், காந்தம் போன்ற பாடங்கள் என்னை, புத்தகத்தையே திறக்கவிடமாட்டேன் என்று தடைசெய்துவிட்டன. திறந்திருந்தால் வெளிச்சம் கண்ணைத் திறக்கவிடமாட்டுதாம். சூடுதொடவிட தடை மின்சாரம் (Shock) அதிர்ச்சி அடித்தது. காந்தம் வட துருவம் – தென் துருவம் என இழுத்துக் கொண்டே இருந்தது. பின்பு எப்படிப் படிப்பது" என்று கேட்க அம்மா சிரித்து விட்டுப் பூவரசம் தடிக்கு விடை கொடுத்து குசினிக்குப் போய்விட்டார். நல்லகாலம் நான் எத்தனையாம் பிள்ளை என்பதைக் கவனிக்கவில்லை (வகுப்பில் தான்) உங்களுக்குச் சொன்னால் என்ன 10 ஆம் பிள்ளை. தயவு செய்து ஒருவருக்கும் சொல்லி விடாதீர்கள்.

குறிப்பு:– வகுப்பில் 10 பிள்ளைகள் தான்.



நாய்களைப் பற்றிய பல கதைகள் உள்ளன. அதுவும் அவற்றின் விசுவாசத்தைப் பற்றிய கதைகள் ஏராளம். நாய் நன்றியுள்ள செல்லப் பிராணி என்பதில் ஐயம் இல்லை. ஆனால் சமீப காலமாக வீட்டைக் காக்கும் தொழிலைக் கைவிட்டு விட்டதோ என ஐயம் கொள்ள வேண்டியுள்ளது. காரணம் அண்மைக் காலமாக கொள்ளையர்களின் அட்டகாசம் பற்றிப் பத்திரிகைகளில் பந்தி பந்தியாக செய்திகள் வெளிவருகின்றன. ஆனால் ஒரு செய்தியாவது கொள்ளையர்களை நாய் கடித்து விரட்டியது அல்லது குரைத்து விரட்டியது என வராதா என்று ஆசையாக உள்ளது. வீட்டு நாய்கள் கொள்ளையர்களுடன் கூட்டமைப்போ என்றொரு சந்தேகமும் கூடவே எழுகிறது. இவைகளை (நாய்கள்) இனி நாம் "நாய்கள்" என அழைத்தால் S.P.C.A அமைப்பினர் எம் மீது வழக்குத் தாக்கல் செய்தாலும் ஆச்சரியப்பட ஒன்றும் இல்லை காரணம் அவைகள் அரசினால் பாதுகாக்கப்படும் செல்லப் பிராணியாக PROMOTE பண்ணப்பட்டு விட்டன. நீங்கள் உங்கள் பிள்ளைகளைத் தண்டிக்கலாம், ஆனால் நாய்களை மன்னிக்கவோ, நாய்களைத் தண்டிக்கவும் நிந்திக்கவோ சட்டத்தில் இடமுண்டோ என சட்ட வல்லுநர்களைத் தான் கேட்கவேண்டும்.

சரி விடயத்துக்கு வருவோம்: இந்த நாயர்கள் செய்யும் லீலைகள் பல அதில் மோட்டார் சைக்கிள் ஓட்டிகளைச் சறுக்கி விழுத்தி வித்தை காட்டுதல், காலையில் நடுரோட்டில் நம்பர் வண், நம்பர் ரூ செய்தல் வழிப்போக்கர்களைக் கடிக்க விரட்டுவது என பல கடமைகள் அவைக்கு உண்டு. இந்த நம்பர் வண்ணுக்கு சிலர் ஆராய்ச்சி செய்து கேற்றில் பெப்சி, கொக்கோ கோலா வெற்றுப் போத்தல் களில் கலர் நீர் நிரப்பி பாதுகாக்க முற்பட்டாலும், நம்பர் ரூவுக்கு என்ன பதில் நடவடிக்கை என ஆராய எவரும் முற்படவில்லை. காரணம் எஜமானர்களுக்கு அவை விசுவாசமாக எஜமானர் வீட்டில் நம்பர் ரூ செய்யாமல் ரோட்டில் காலைக் கடனை முடித்து விடுவார்கள். இதனால் ரோட்டில் பயணம் செய்யும் சைக்கிள், மோட்டார் சைக்கிள் ஓட்டிகள் வெட்டி ஓட நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். இதுவும் நன்மைக்குத்தான் போல் தெரிகிறது. மோட்டார் சைக்கிள் பழகும் ஓட்டிகளுக்கு எட்டுப் போட நமது பொதுச் சொத்தான றோட்டே போதுமானது. வெட்டி வெட்டி எட்டுப் போட நல்ல களம். இதற்காக யாழ் முற்ற வெளிக்குச் செல்ல வேண்டியதில்லை. நாய்களின் கல்யாணசீசன் வந்தால் இரவு பகலாகக் கொண்டாட்டம் நாய்களுக்கு. எஜமானர்களுக்குத் திண்டாட்டம். என்னத்தைச் சொன்னாலும் மேல் நாட்டுச் செல்லப்பிராணியான நாயர்கள் கொடுத்து வைத்தவர்கள். அவைகளின் சொகுசு வாழ்க்கை நமது நாய்களுக்குத் தெரிந்தால் நடு ரோட்டில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்தாலும் செய்வர். நமது இந்துக் கடவுளர்கள் தமக்குரிய வாகனங்களாக மிருகங்களை SELECT பண்ணிவிட்டார்கள். அதில் வைரவருக்கு நாய்தான். மன்னிக்கவும் நாயர்தான் வாகனம். வைரவரை வணங்கும்போது இவரையும் வணங்குவோமாக.


**இந்த நாயர்கள் விசுவாசமாக எஜமானர் வீட்டில் நம்பர் ரூ செய்யாமல் ரோட்டில் காலைக் கடனை முடித்து விடுவார்கள். இதனால் ரோட்டில் பயணம் செய்யும் சைக்கிள், மோட்டார் சைக்கிள் ஓட்டிகள் வெட்டி ஓட நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள்.**



1965 ஆம் ஆண்டு வவுனிக்குளம் குடியேற்றத் திட்ட அலுவலராகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன். கட்டைப் பிரமச்சாரி. எனக்குரிய விடுதியில் ஊரில் உள்ள எனது அம்மா சொல்லித்தந்த சமையல் குறிப்பு பிரகாரம் சமைத்துச் சாப்பிட நிர்ப்பந்தம். காரணம் காடு சாப்பாட்டுக் கடைகள் கிடையாது. எனது சமையலை நானே புகழ்ந்து (மனதுக்குள்) ரசிப்பேன். சாப்பிட்ட கோப்பை, பாத்திரங்களை சாப்பாட்டு மேசையிலேயே விட்டுவிடுவேன். (கழுவ வேலையாளர்கள் இருப்பதாக பெரிய எண்ணம்). பின்பு வேறு வழியில்லாமல் நானே கழுவி வைத்துவிடுவேன்.

அற்ப ஆசை, அற்ப ஆசை என்பார்கள். அதன் விளைவுகளை நானே அனுபவித்திருக்கிறேன். அதை உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என்ற அற்ப ஆசைதான் இந்த சிலவரிகள். ஒரு கிழமை லீவில் யாழ்ப்பாணம் வீட்டுக்குச்செல்ல ஒரு வெள்ளிக்கிழமை ஆயத்தமானேன். அரச கடமை களைச் செய்வதைவிட சமையல் டிப்பாற்மென்றை துப்பரவு செய்வது பெரும் வேலை.

கடைசியில் ஒருவாறு வெளிக்கிட, எஞ்சியிருந்த ஒரு கோழி முட்டை மட்டும் என்னை முழித்து முழித்து பார்த்துக் கொண்டே இருந்தது. அதை வீட்டுக்கு எடுத்துச் செல்லலாமா அல்லது விட்டுவிட்டுப் போகலாமா எனத் தீர்மானிக்க முடியாது மனதில் போராட்டம். கடைசியில் அற்ப ஆசையே வென்றது. அதைக் கவனமாக எனது கால்சட்டை பொக்கற்றுக்குள் லேஞ்சியில் சுற்றி வைத்துவிட்டு யாழ்ப்பாண பஸ்ஸில் ஏறிவிட்டேன். கையில் வேறு 'பாக்' ஏதும் இல்லை. கோணர் சீற் கிடைத்தது. நாடாளுமன்றத்தில் எம்.பி.சீற் கிடைத்தது போன்ற புளுகம். சீற்றில் அமரும்போது முட்டை தட்டுப்படாதவாறு பக்குவமாக அமர்ந்துகொண்டேன். பஸ் மாங்குளம் தாண்டி முறிகண்டிப் பிள்ளையார் கோயிலை நெருங்க நெருங்க முட்டையைப் பற்றிய கவலை, பயம் கூடிக்கொண்டே இருந்தது. வெள்ளிக்கிழமை முட்டையைக் கொண்டு முறிகண்டிப் பிள்ளையாரைக் கும்பிடலாமா என மனதில் பட்டிமன்றம் வேறு. முறிகண்டிப் பிள்ளையார் கோவில் வந்ததும் சனமெல்லாம் முண்டியடித்துக் கொண்டு இறங்கினர். நானோ கோணர் சீற்றில் அப்படியே அமர்ந்திருந்தேன். பஸ் கொண்டக்ரர்



"ஏன் ஐயா இறங்கேல்லையோ" என்றார். அவருக்கு எனது வேதனை எங்கே தெரியப்போகிறது. நானோ அந்த கோழி முட்டையை பக்குவமா கொண்டுபோய் அம்மாவிடம் எப்படி ஒப்படைப்பேன் என்ற பயத்தில் இருந்தேன். எனக்குப் பக்கத்தில் பிரயாணம் செய்தவர் ஒல்லியாக இருந்ததால் அவரால் முட்டைக்கு ஒரு இடையூறும் இருக்க வில்லை. முறிகண்டியிலிருந்து புறப்பட்ட பஸ் படு வேகமாக போய்க்கொண்டிருந்தது. ஆனையிறவில் செக்கிங்க இல்லை. அப்படி இருந்தாலும் பொக்கற்றைத் தட்டிப் பார்க்கமாட்டார்கள் என்ற துணிவு மனதை சற்று சாந்தப்படுத்தியது. நான் நினைத்தது போல் செக்கிங் இல்லை. இயக்கச்சியை தாண்டும்போது பஸ்ஸில் உள்ள பிரயாணிகளும் குதிரைச்சவாரி செய்வதுபோல் எழும்பி எழும்பி அமர்ந்தனர். எனது முட்டையை செக் பண்ணிப் பார்த்தேன். அது கைலேஞ்சிக்குள் கச்சிதமாக இருந்தது.


இறுதியாக பஸ் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் நின்றபோது நீல் ஆம்ஸ் சந்திரமண்டலத்தில் காலடி வைத்த போது ஏற்பட்ட மகிழ்ச்சிபோல் கம்பீரமாக இறங்கினேன். சொல்லி வைத்தாற்போல் 771 தாவடி, மானிப்பாய் இரட்டைத்தட்டு பஸ் ரெடியாக நின்றது. எப்படியும் வீட்டுக்குப் போய்விட வேண்டும் என்ற ஆசையில் பாய்ந்து ஏறினேன். அச்சமயம் பார்த்து பஸ் புறப்பட, பக்குவமாக இருந்த முட்டை பஸ்ஸில் ஏறும் வாசலில் இருந்த தூண்போன்ற அமைப்பில் "நறுக்" என்றது. முட்டையின் பயணம் முடிவுற்றது. எனது பயணம் வீடுவரை தொடர வீட்டு வாசலில் நின்ற அம்மா கேட்டார் "என்ன மோனை முகம் வாடிப்போச்சு, ஏதும் சுகயீனமோ" என்று. அத்துடன் எனது அற்ப ஆசைகளை கைவிட தீர்மானம் எடுத்தாலும் இன்னொரு அற்ப ஆசையை அடுத்த வாரம் உங்களுக்குச் சொல்ல எனக்கு ஆசைவிட்ட பாடில்லை.

இந்துக்கள் ஆகிய நாம் அனுபவிக்கும் மத சுதந்திரத்தைப் பிற மதத்தினர் அனுபவிக்கிறார்களோ தெரியவில்லை. கோயில்களில் வழிபடும் போது பக்தர்கள் வாய் விட்டு அரோகரா, அரோகரா எனக் கோஷமிட்டு பக்கத்தில் நிற்கும் அன்பரையும் அடியவரையும் நண்பர்கள் ஆக்கி பூஜை நேரத்தில் அளவளாவும் சுதந்திரம் எமக்கே உண்டு. செவ்வாய் என்ன வெள்ளி என்ன விரும்பினால் போகலாம் கோவிலுக்கு, போகாவிட்டால் கோவிக்கமாட்டார் ஐயர். 120 டெசிமெல்லில் பக்திப் பாடல்கள் ஒலிபெருக்கியில் ஒலிக்க விட்டு மாணவர்களையும், நோயாளர்களையும் வதைக்கும் சுதந்திரம் உட்பட பல சுதந்திரம் பக்தர்களுக்கு உண்டு.

காணாவத்தை வேள்வியில் ஆட்டு கடாக்களை வெட்டிச் சரித்தவரும் ஈஞ்சடி வைரவர் கோவில் வேள்வியில் பந்தயம் கட்டி ஒரே வெட்டில் 100 கிலோ ஆட்டுக் கடாவை தலை வேறாய் முண்டம் வேறாய் வீழ்த்திய வீரரும், கோவிலுக்குப் போகலாம். இந்துக் கடவுளர் கருணையின் மறு உருவம். பாவிகளை உடனே மன்னித்து விடுவர்.

அது சரி வைரவரை ஏன் இந்த அடல்ட் ஒன்லி (வயது வந்தவர்களுக்கு மட்டும் "ADULTS ONLY" கோலத்தில் நன்றி உள்ள நாயுடன் எழுந்தருளி விட்டார்கள். முருகனைத்தான் கோவணத்துடன் ஆண்டியாக விட்டார்கள் என்றால் வைரவருக்கும் அதுவும் கிடையாதா? வடை மாலையுடன் அம்மணமாகக் காட்சியளிக்க வேண்டியது தானா? அர்த்தமுள்ள இந்து மதத்தில் கண்ணதாசன் எழுதியது போல் தொடர்ச்சியாக இந்து மதம்






விமர்சிக்கப்பட்டதன் காரணமாகத்தான் அது புடம் போட்ட தங்கமானது எனும் அவரது கருத்தை ஏற்றுக் கொள்வோமாக. அண்மையில் பத்திரிகை ஒன்றில் ஓர் விளம்பரம் – படித்துப் பார்ப்போம் இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு. புறொய்லர் மற்றும் கல்பேட்ஸ் உட்பட தரமான கோழி வகைகள் மலிவு விலையில் துடிக்க துடிக்க வெட்டி சுத்தம் செய்து கொடுக்கப்படும்.

கொலைக்களம் பாம் (முருகன் கோவில் முன்பாக) திராவிடர்குளம், உரிமையாளர்:– சேவற்கொடியோன் மேற்படி விளம்பரத்தை வாசித்த குறும்புக்கார வாசகர் ஒருவர், அதைப் பிரசுரித்த பத்திரிகை ஆசிரியருக்கு ஓர் கடிதம் எழுதியிருந்தார். அதில் அன்பு மிக்க ஆசிரியர் அவர்கட்கு, உங்கள் பத்திரிகையில் பிரசுரமான இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு விளம்பரத்தில் உரிமையாளர் பெயர் தவறுதலாக அச்சிடப்பட்டு விட்டது போல் தெரிகிறது. அவரது பெயரை சேவலுக்குக் கொடியோன் என திருத்தி வாசிக்க ஏற்பாடு செய்யவும்.

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்பர். இந்தக் கூற்று எவ்வளவு உண்மை என்பதை நாம் எமது நாட்டில் நடந்த போர் மூலம் அறியக் கூடியதாக இருந்தது, போர் எமக்கு இழப்புக்களைத் தந்தது போலவே ஓரளவுக்கு நன்மையையும் தந்தது என்பதும் மறுக்க முடியாது. இளைய தலைமுறையினர் பலர் அகதிகளாகத் திரைகடல் தாண்டி தஞ்சம் அடைய அந்த நாட்டு அரசுகள் அரவணைத்து தொழில் புரியும் அனுமதியையும் வழங்கி உதவின. உதவி வருகின்றன. இதனால்



யாழ் குடா உட்பட நாட்டின் பல பகுதியினர் நன்மை அடைகின்றனர்.

நான் சொல்ல வரும் கதையும் இந்தக் கருத்தை உறுதிப்படுத்தும் என்று எண்ணுகின்றேன். ஐயாத்துரை குடும்பத்தில் இரு மகன்மார். மூத்தவனுக்கு ஓஎல் தடையைத் தாண்ட முத்துக் குமாரசுவாமி மாஸ்டர் பட்டபாடு கொஞ்ச நஞ்சமல்ல. மாஸ்ரர் முயற்சிக்க, அவனுடைய தாய் தங்கம்மா புறோக்கர் இராசதுரையின் உதவியை நாடி 10 லட்சம் கட்டி சுவிஸிக்கு அனுப்பிவிட்டா. பள்ளிக்கூடத்தில் பாட நேரத்தில் பள்ளி கொண்டாலும் விளையாட்டுப் போட்டிகளில் தடைதாண்டும் விளையாட்டில் முதலிடம் பெற்ற அனுபவம் அவனுக்கு பல நாடுகளைத் தாண்டி சுவிஸிக்குள் நுழைய உதவியது.

பின் கதவால் போனாலும் முன்கதவால் போனாலும் "போனால் போகட்டும் போடா, நீ வாடா" என சுவிஸ் அவனை அணைத்துக் கொண்டது. பத்து ஆண்டுகள் மாடாய் உழைத்தான். தங்கம்மாவின் வீட்டு அடுப்புப் புகைந்தது. சின்னவன் படிப்பில் கெட்டிக்காரன். அண்ணன் அனுப்பும் பணத்தால் யாழ். கம்பஸில் இடம் பிடித்து கலைத்துறையில் படிக்கிறான். தங்கம்மா தன்ரை மனுசனை மதிப்பதில்லை. மூத்த மகனை அடிக்கடி புகழ்ந்து "அவன் அங்கை மாடாய் உழசைச்சு அனுப்புறான் நீங்கள் இஞ்சை சும்மா இருந்து மூண்டு நேரமும் மூக்குமுட்டச் சாப்பிடுறியள்" என பேசுவா. பாவம் ஐயாத்துரையர் பொறுத்துக் கொள்வார். ஒரு நாள் சுவிஸில் இருந்து டெலிபோன் வந்தது. மூத்தவன் "அம்மா நாங்கள் தைப்பொங்கலுக்கு வருகிறோம். இந்த முறை வடிவாய் பொங்கலாம் என்று சொல்ல "தங்கம்மா தலைகால் தெரியாத புழுகத்தில் தடல்புடலாக பொங்க ஆயத்தம்.

பொங்கலும் வந்தது மூத்தவன் ஓட்டோவில் வந்து இறங்க தங்கம்மா இளையவனுக்குச் சொன்னா "உங்கை பார் பொங்கலுக்கு கொண்ணை ஒரு வெள்ளைக்காரப் பொடியனையும் கூட்டிக் கொண்டு வாறான்" எண்டா. இளையவன் சொன்னான் "அம்மா அது பொடியன் இல்லை ஜீன்ஸ் போட்ட பெட்டை" ஐஞ்சும் கெட்டு அறிவு கெட்ட தங்கம்மா "உது ஆர்மோனை" எனக் கேட்க, "இது என்ரை மனையாள்" என மகனும் செந்தமிழில் சொல்ல, ஐயாத்துரையர் சொன்னார் "மாடாய் உழைக்கிறவனுக்கு அடுத்த நாளும் பொங்க வேணும்" வானொலியில் "மணமகளே மணமகளே வாவா உன் வலது காலை எடுத்து வைத்து வாவா" எனப் பொருத்தமான பாட்டை ஒலிக்க விட்டிருந்தனர். இந்தப் பாட்டின் அர்த்தம் புரியாத பெண் "DARLING WHAT IS THE MEANNING OF THIS SONG (அன்பே, இந்தப் பாட்டின் பொருள் என்ன?) எனக் கேட்க மாப்பிள்ளை சொன்னார் "BRIDE BRIDE COME COME PLACE YOUR RIGHT LEG AND COME" என்றான் அவன்.

பழைய கால பசுமையான நினைவுகளை மீட்டிப் பார்ப்பதில் உள்ள சுகம் நமக்கு வேறெதுவும் இல்லை. எமது நினைவுகளில் நீண்டகால நினைவு, குறுகிய கால நினைவு எனப் பிரித்துக் கூறுவார்கள். எமக்கு வயது ஏற ஏற பழைய சுகமான இனிமையான நினைவுகள் மிதப்பதை வயோதிபர்கள் தமது நண்பர்கள், இளைய தலைமுறையினர் என தமக்குப் பிடித்தமானவர் களிடம் பகிர்ந்து பெருமைப்பட்டுக் கொள்வர்.



இசையால் வசமாகாத மனிதர்கள் யார் உண்டு? இந்து சமயத்தில் இசைக்கென கடவுளர் பலர் உள்ளதை உணரலாம். சுமார் 60 வருடங்களுக்கு முன்பு எமது வீட்டில் வானொலிப்பெட்டி ஒலித்தது. அக்கம் பக்கத்து இசைப்பிரியர்கள் ஒன்றுகூடி இசையைக் கேட்டு மகிழ்ந்த காலம் எமது

வாழ்வில் பொற்காலமெனலாம், அதற்கு முன்பே எனது தந்தையர் கிறாமபோன் பெட்டி ஒன்றை மலேசியா தேசத்திலிருந்து கொண்டு வந்திருந்தார்.

அந்தக் காலத்து சுப்பர் ஸ்ரார்கள் தியாகராஜ பாகவதர், பி.யு.சின்னப்பர், கிட்டப்பா ஆகியோர் பாடல்கள் 78 ஆர்.பி.எம் றைக்கோட்சில் இந்தியா விலிருந்து வரவழைத்து யாழ்ப்பாணம் கடைகளில் மூன்று ரூபா ஐம்பது சதத்துக்கு விற்கப்பட்டன. முக்கியமாக கொலம்பியா, எச்.எம்.வி. என இரு வியாபாரப் பெயரில் விற்கப்பட்டன.

அந்த கிறாமபோன் இசைக் கருவியில் எழும் இசை எமது ஊரில் அனைவரையும் கவர்ந்து இழுத்தது இன்றும் மனத்திரை ஓடிக்கொண்டிருக்கிறது. அது சரி 78 ஆர்.பி.எம். என்றால் என்ன எனக் கேட்பது புரிகிறது. ஒலிப்பதிவு செய்யும் போது இசைத்தட்டின் சுற்றும் வேகம் நிமிடத்துக்கு 78 தரமாக இருக்கும். மீண்டும் நாம் அதை அதே ஆர்.பி.எம் வேகத்தில் (றெவலுவான பேர் மினிற்ஸ்) சுழலவிட்டால் பாடல் தத்துரூபமாக ஒலிக்கும்.

பிற்காலங்களில் 45 ஆர்.பி.எம் – 33 ஆர்.பி.எம். இசைத் தட்டுக்கள் வெளி வந்தன. தொடர்ந்து இசையை இரசிக்க வானொலிப் பெட்டி தனது பங்கை ஆற்றத் தொடங்கியதும் கிறாம போன் பெட்டிக்கு சற்று ஓய்வு கிடைத்தது, மின்சாரம் இல்லாத யுகத்தில் பற்றறியில் இயங்கும் வானொலிப் பெட்டி கார் பற்றரியிலும் பின்பு 90 வோல்ற்ஸ் டிறை பற்றறியிலும் வால்பு செற் மொடலும் பின்னர் ரான்சிஸ்ரர் பெட்டியும் வெளிவந்தன. இன்றும் வானொலி ஊடாக பல நல்ல நிகழ்ச்சிகளையும் இசையையும் ரசிக்கும் வாய்ப்பு கிடைக்கிறது.

தொலைக்காட்சியுகம்வந்ததும்வானொலிகளும் சற்று ஓய்வெடுத்தாலும் என்றென்றும் வானொலி நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை. தொலைக்காட்சி என்றதும் நண்பர் ஒருவர் ஞாபகத்துக்கு வருகிறார். தனது தொலைக்காட்சி றிமோட்டை யாரோ திருடிவிட்டார்கள் என மிகுந்த கவலையில் இருந்தார். அவரைத் தேற்று வதற்காக நான் "கவலைப்படாதே உன்னுடைய ரி.வியை திருடவில்லையே தொடர்ந்து நிகழ்ச்சி களைப் பார்க்கலாம்தானே" என்றேன். அதற்கு அவர் எனது விருப்பமான சனலை பார்த்துக் கொண்டு இருக்க திருடன் அடிக்கடி வந்து றிமோட்டால் சனலை மாற்றிவிட்டு ஓடிவிட்டால் என்ன செய்வது என்றார்.



பொலிஸ்காரர் முறைப்பாட்டுக்காரரை நோக்கி, உங்கள் வீடு தீப்பற்றி எரிந்து சாம்பலாகும் வரை அதை அணைக்காமல் என்ன செய்து கொண்டிருந்தீர்கள் எனக் கேட்க, முறைப்பாட்டுக் காரர் கபாலி படம் ரி.வியில் பார்த்துக் கொண்டிருந்தோம் சேர் – என்றார். அதற்குப் பொலிஸ்காரர் தவறு உங்களுடையதுதான் எச்சரிக்கையாக இருந்திருக்கலாம் எனக்கூற முறைப்பாட்டுக்காரர் சேர் அப்பா அடிக்கொரு தடைவ நெருப்படா நெருப்புடா எனக் கத்த படத்தில் உள்ள வசனம் என இருந்துவிட்டேன் – என்றார். அதற்கு பொலிஸ்காரர் கோபமாக என்கால் செருப்புடா செருப்புடா என்றார்!



மருத்துவர் :– நான் கொடுத்த உடற்பலம் தரும் குளிசைகளை எடுத்த பின் உடம்பு எப்படியிருக்கு?

நோயாளி :– வேலையில்லை

மருத்துவர் :– ஏன்?

நோயாளி :– குளிசைப் போத்தல்மூடியைத்திறக்க பலம் இல்லையே


மருத்துவர் :– ???

என்ன விஷயத்தையும் மற்றயவர்கள் புரியும் வண்ணமும் சொல்ல வேண்டும். கேட்பவர்களுக்கு அவர்கள் மொழியில் சொன்னால் சங்கடம் இல்லை. ஆங்கில மொழியில் விஞ்ஞான பாடங் களைக் கற்றதால் எனக்கு ஏற்பட்ட அனுபவத்தை உங்களிடமும் பகிரலாம். பௌதிகவியலில் காந்தவியல் (Magnetism) ஒரு பாடம் காந்தத்தை Magnet என்பார்கள். எனக்கு இந்த Magnet மீது அளவில்லா காதல். அக் காலத்தில் இந்த Magnet ஒன்று வாங்கிவிட வேண்டும் எனப் படாத பாடு பட்டுக் கொண்டிருந்தேன்.

எனது நண்பன் ஒருவன் சொன்னான் "நல்லூர் திருவிழா நடக்குது அங்கை போனால் மணிக் கடைகளிலை Magnet வாங்கலாம் என்று. அம்மாவிடம் கெஞ்சி மண்டாடி 10 ரூபாய் வாங்கிக் கொண்டு நல்லூருக்குப் போய் கடைகடையாய் "அண்ணை மக்னெற் இருக்கோ? அண்ணை மக்னெற் இருக்கோ? என்று கேட்டுக் கேட்டு அலுத்துப்போய் கடைசியில் ஒரு மணிக்கடை முதலாளியிடம் "முதலாளி மக்னெற் இருக்கோ? என்று கேட்க அவர் "தம்பி! பெரிசு வேணுமோ சின்னன் காணுமோ? என்றார்.

எனக்கு கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை. "பெரிசு என்ன விலை சின்னன் என்னவிலை? எனக் கேட்க, அவர் "பெரிசு 10 ரூபாய் சின்னன் 5 ரூபாய்" எண்டார். "பெரிசிலை ஒண்டு தாருங்கோ" என்றேன். அவர் தூக்கித் தந்தது "Macclean" என பெயர் கொண்ட பற்பசை "Tooth paste"


காந்தம் என தமிழில் கேட்டிருந்தால் இவ்வளவு அலைச்சல் இருந்திருக்காது. இன்னொரு நாள், தெரிந்த நண்பர் ஒருவர் அவசர அவசரமாக



ஓடிவந்து கேட்டார் "தம்பி உங்கடை Goat ஐ ஒருக்கா தா திருப்பிக் கொண்டு வந்து தாறன்" என்றார். நான் சொன்னேன் "அண்ணை நாங்கள் அதை வித்துப் போட்டம் அதுக்கு இலை குழை போட்டுக் கட்டாது" என்று. என்ன தம்பி Goat ஐக் கேட்டால் என்னவோ சொல்லுறாய்" என்றார். சற்று நேரத்தின் பின்புதான் புரிந்தது அவர் கேட்டது (கோட்) Coat நாடகக் கலைஞர் அவர் நாடகம் நடிப்பதற்கு கேட்டது Coat கேட்டார் என்பது. Coat ஐ Goat ஆக்கியதன் பலன் தான் இந்தத் தடுமாற்றம்.

Coat க்கு என்ன தமிழ் என நீங்களும் தடுமாறு கிறீர்களா? Coat பிரச்சினையை தீர்க்க Court போகவேண்டியதில்லை. உச்சரிப்பை சரியாக உச்சரித்தால் போதும். "சரியாக உச்சரிப் பதற்கு பற்களும் சரியாக இருக்க வேண்டுமே" என்கிறீர்களா? அதுவும் சரிதான். முன்வாய் பற்கள் இல்லாத மூதாட்டி "புஷ்பம்" எனச் சொல்வார் என எதிர்பார்க்க முடியாது. புட்பம் என்று தான் சொல்வார். புஷ்பம் என்று அவரை சொல்ல வைத்து விட்டு கிட்ட நிற்காதீர் எச்சிலை Spray பண்ணிவிடுவார் ஜாக்கிரதை.

ஞாபக மறதியாரையும் விட்டு வைக்காது, அநேகமாக வயது முதிர்ந்தவர்கள் அனுபவிப்பது இந்த ஞாபக மறதி. ஒரு முறை புகழ்பூத்த விஞ்ஞானி ஒருவர் ரயிலில் பிரயாணம் செய்யும்போது, ரயில் ஓர் நிலையத்தில் சாப்பாட்டுக்காக நின்றதாம். அந்தச் சமயம் அவர் தனது மூக்குக் கண்ணாடியைத் தொலைத்துவிட்டு இறங்கி ரயில் நிலைய கன்ரீனில்



சாப்பிட, சாப்பாட்டு மெனுவை வாசிக்க முடியாது பக்கத்தில் இருந்தவரிடம் "ஐயா இதில் என்ன எழுதியிருக்கிறது எனக் கேட்க அவர் சொன்ன பதில் எனக்கும் உங்களைப் போல் எழுதப்படிக்கத் தெரியாது".

எனது உறவினர் ஒருவர் ஞாபக மறதியால் சங்கடப்பட்டுக் கொண்டிருப்பார். அவர் ஒரு நாளைக்கு 20 – 30 சிகரெட் குடிப்பார், சிகரெட் பைக்கெற்றை தனது சேட் பொக்கற்றுக்குள் எப்பவுமே வைத்திருப்பார். மனைவி சொல்லி விடும் சாமான்களை ஞாபகமாக வாங்கிவர அவரது மனைவி சிகரெட் பைக்கெற் மட்டையில் எழுதி விடுவார். அப்படி ஒரு நாள் அவரது மனைவி சிகரெட் மட்டையில் சாமான்கள் லிஸ்ரை எழுதி வைத்து விட்டார். சில மணி நேரம் கழித்து சந்தேகப்பட்ட மனைவி அவரது செல்போனுக்கு கோல் பண்ணிக் கேட்டார் "லிஸ்ரிலை எழுதிய சாமான்களை மறக்காமல் வாங்கிப் போட்டியளோ" என்று அதற்கு அவர் சொன்ன பதில் "நான் மறக்கேல்லை ஆனால் சிகரெட் பெட்டியைத்தான் மறந்து போய் விட்டுவிட்டு வந்திட்டன் அப்பா"

இதேபோல் இன்னுமொருவர், தான் மறந்து போனாலும் என ஞாபகப்படுத்த தனது வேட்டித் தலைப்பில் ஒரு முடிச்சுப் போடுவாராம், ஒரு முறை அப்படி முடிச்சைப் போட்டு விட்டு பின் என்னத்துக்கு அந்த முடிச்சை போட்டன் என்று பலரிடமும் கேட்டுக்கொண்டு திரிகிறாராம்.

அண்மைக் காலமாக வடபகுதியில் ரயிலில் மோதி பலர் சாவடைந்து வருவது கவலைக்குரிய விடயமாக உள்ளது. போருக்கு முன்னைய காலங்களில் நாள் ஒன்றுக்கு ஐந்துக்கு மேற்பட்ட பயணிகள் ரயில்கள் தென்பகுதிக்குப் போவதும் வருவதுமாக இருந்த காலங்களில் இவ்வாறு விபத்துக்கள் மிகவும் அரிதாகவே இருந்தன. இது என்ன மாற்றம் என்பது புரியவில்லை.

அந்தக் காலத்து ரயில் எஞ்சின்கள், முக்கியமாக கனேடியன் எஞ்சின் வரும்போது பலத்த சத்தத்துடன் வரும். தவிர தண்டவாளத்தில் அதன் அதிர்வு பலமாக இருக்கும், விபத்துக்கள் நடக்காமல் இருந்தமைக்கு அதுவும் ஒரு காரணம் எனலாம். தற்பொழுது புதிதாக இந்தியாவின் உதவியுடன் போடப்பட்ட தண்டவாள அமைப்பும் எஞ்சினும் ரயில் ஓடும்போது பலத்த சத்தம் ஏற்படாது ரயில் எமக்குக் கிட்ட வரும்போதுதான் சிறு சத்தம் எழுப்பும் வகையில் உள்ளன. இதனால் ரயில் பாதையைக் கடக்க முற்படுபவர்கள் தடுமாறி அதற்குள் அகப்பட வாய்ப்புண்டு. பொதுமக்கள் ஒரு விடயத்தைக் கவனத்தில் கொண்டால் விபத்துக்களைத் தவிர்த்து விடலாம் இரு பக்கமும் ரயில் பாதையில் நடப்பதையோ கடப்பதையோ தவிர்க்க வேண்டும். சட்டப்படி இந்தப் பாதையில் நடப்பது தண்டனைக்குரிய செயல் ரயில்வேத் திணைக்களம் இதுவரை சட்டத்தை மீறுவோர் மீது




எந்தவித நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை. மனித உயிர்கள் அநியாயமாகப் பறிக்கப்படுவது கவலைக்குரியது. போக்குவரத்து சேவையில் ரயில்கள் அரிய பங்கை வழங்கி வருகின்றன. மக்கள் இந்தச் சேவையைப் பயனுள்ளதாக மாற்றுவது அவர்கள் கையில்தான் உள்ளது. அண்மைக் காலங்களில் ரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்வதும் அதிகரிக்கின்றது. இந்தச் செயல் இருவகைப்படும். ஒன்று நன்கு திட்டமிட்டுத் தற்கொலை புரிவது. மற்றையது திடீர் என்று உணர்ச்சி வசப்பட்டு உயிரை மாய்த்துக்கொள்வது.

நன்கு திட்டமிட்டு தற்கொலை செய்ய ஒருவர் தீர்மானித்துத் தண்டவாளத்தின் மீது தலையை வைத்துப்படுத்து இருந்தாராம். பல மணி நேரம் படுத்திருந்தும் அவர் எதிர்பார்த்திருந்த ரயில் வரவில்லையாம். பொறுமையை இழந்த அவர் புகையிரத நிலைய அதிபரிடம் போய் "ஐயா ரயில் எப்ப வரும்?" எனக்கேட்க அதிபர் "ஒரு மணித்தியாலம்

லேற்' என்றாராம் பசி தாங்க முடியாத தற்கொலையாளி சாகத்தான் போறன் எனது கடைசி ஆசையாக வயிறு முட்ட ஏதாவது சாப்பிட்டு விட்டு மீண்டும் தண்டவாளத்தில் படுப்போம் என முடிவெடுத்து அண்மையில் உள்ள சாப்பாட்டுக் கடையில் சாப்பிட்டுக் கொண்டிருக்க எதிர் பாராமல் ரயில் சென்றுவிட தனது தற்கொலை முடிவை மாற்றி விட்டு வீடு சென்றாராம். பசி வந்தால் பத்தும் பறந்து போய்விடும் என்பர். அந்தப் பத்து என்ன என்பது தெரியவில்லை, அந்தப் பத்துக்குள் தற்கொலையும் ஒன்றுதானோ எனச் சிந்திக்கத் தோன்றுகிறது.



"TIME AND TIDE WAITS FOR NO MAN" என ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. இதற்குச் சமமாக "ஐயர் வரும் வரை அமாவாசை காக்குமா" என தமிழில் சொல்லலாம். யாழ்ப்பாணத்தில் சரியான நேரத்தில் ஒரு கருமமும் நடப்பதில்லை என்பதைக் குத்திக் காட்ட வெளிநாட்டுப் பிரமுகர் ஒருவர் சொன்னாராம். "யாழ்ப்பாணத்தில் ஒரே ஒரு கருமம்தான் நேரத்துக்கு நடக்கிறது – அதுதான் சூரியன் உதிப்பதும் அஸ்தமிப்பதும்" என்று அவர் கூறியதும் சரிதான் போல் தெரிகிறது.

மனித வாழ்க்கையில் மூன்று முக்கிய நிகழ்வுகள். பிறப்பு, கல்யாணம், இறப்பு (இறுதி யாத்திரை). இவற்றில் கல்யாணத்துக்குத் தான் நாம் நேர காலம் நியமிக்க முடியும். அதுவும் நாம் நியமித்த நேரத்துக்கு அநேகமாக நடப்பதில்லை. லட்சக்கணக்கில் பணத்தைச் செலவழித்து டாம்பீகமாக சடங்கு செய்கிறோம். இந்தச் சடங்கில் கல்யாணத் தம்பதிகள் நாயகன் நாயகியாக விளங்குவதில்லை. மாறாக ஐயரும் வீடியோ படப்பிடிப்பாளரும் தான் இயக்குநர்கள். அதிலும் வீடியோ படப்பிடிப்பாளர்தான் முக்கிய இயக்குநர். அவரது கட்டளைப்படி கல்யாணப் பெண்ணை பலவிதமாக Pose கொடுக்க வைக்கும் படப்பிடிப்பு தொடங்கி SELF SERVE சாப்பாடு யார் யார் சாப்பிட்டார்கள் என ஒரு ஆவணப்படமே தயாரித்து விடுவார் – தயாரிப்பாளர் (பெண்ணின் அப்பா) செலவில்.

கல்யாண சடங்குகள் நடைபெறும்போது வீடியோ கமெராவுக்கு இடைஞ்சல் எனக் கருதும் மணமேடையில், ஐயரின் ஏற்பாட்டில் அமைக்கப் பட்ட மங்கலப் பொருள்கள் அதாவது தொங்கும் மாலைகள், தோரணங்கள் கமராவுக்கு ஏற்ற ஆங்கிளுக்கு அமைவாக வீடியோ இயக்குநரால் அகற்றப்படும் அல்லது சற்றே விலகி இரும் பிள்ளாய் எனச் சொல்லி விடுவார். இதுவரை தப்பிக்கொண்டு வருவது நாள், நேரம் பார்த்து வைத்த கன்னிக்கால்தான்.

கல்யாணச் சடங்கின் முக்கியமானதும் இறுதியுமான கிரியை அறுகரிசி போடுதல் யார் யார் எல்லாம் பணப் பரிசும் பொருள் பரிசும் வழங்கினார்கள் என்பது பதிவாகி விடும். எனக்குத் தெரிந்த ஒருவர் சொந்தம் பந்தம் இல்லாத கலியாண வீடு ஒன்றையும் விட்டு வைக்க மாட்டார். அறுகரிசி கியூவில் முதலிடம் பிடித்து மறவாது மாப்பிள்ளை கையிலோ மணமகள் கையிலோ என்வலப்பை நீட்டியபடி கமெராவைப் பார்த்து சிவாஜி ஸ்ரைலில் சிரிப்பு சிரித்துவிட்டு ஸ்லோ மோஷனில் மேடையை விட்டு இறங்கி குயிக் மோஷனில் நாகேஸ் ஸ்ரைலில் சாப்பாட்டு மண்டபத்தை அடைந்து வயிற்றுக்கு வஞ்சகம் செய்யாது பார்த்துக்கொள்வார். ஒவ்வொரு கலியாணத்திலும் வெற்று என்வலப் வழங்கும் கொடை வள்ளல் இவர்தான் என்பது எனக்கு மட்டும்தான் தெரியும்.

பிரபல பத்திரிகையில் மரண அறிவித்தல் பகுதியில் ஓர் அறிவித்தல் வந்தது. கைதடியைச் சேர்ந்த மார்க்கண்டு சின்னத்தம்பி (உறங்கு நிலை ஆசிரியர்) காலமானார். இவர் சின்னம்மாவின் அன்புக் கணவரும் – என தொடர்ந்தது. அடுத்த நாள் பிழை திருத்தம் எனும் தலைப்புடன் ஒரு செய்தியும் வந்தது. அதில் நேற்று வெளியான மரண அறிவித்தல் பகுதியில் மார்க்கண்டு சின்னத்தம்பி அவர்களின் மரண அறிவித்தலில் ஓய்வுநிலை ஆசிரியர் என குறிப்பிடுவதற்குப் பதிலாக உறங்குநிலை ஆசிரியர் என தவறுதலாக அச்சிட்டு வெளிவந்தது பற்றி வருந்துகிறோம் என. இதை வாசித்த காலஞ்சென்ற மா.சின்னத்தம்பி ஆசிரியரின் பழைய மாணவன் ஒருவன் குறித்த பத்திரிகை ஆசிரியருக்கு ஒரு கடிதம் அனுப்பி யிருந்தார். அதில் பின்வருமாறு எழுதியிருந்தார்:–



முதலில் அன்புமிக்க பத்திரிகை ஆசிரியருக்கு நீங்கள் குறிப்பிட்டது போல் உறங்குநிலை ஆசிரியர் என்பதில் தவறு ஏதுமில்லை. நான் அவரிடம் படிக்கும்போது வகுப்பில் பாடம் நடத்தாது அநேகமாக உறங்கு நிலையிலே இருப்பார். எனவே நீங்கள் முதலில் குறிப்பிட்டது தான் சரியானது. நீங்கள் வருந்த வேண்டியதில்லை. அன்னாரிடம் கற்றதால் நான் இப்போது "உறங்காநிலை" உத்தியோகம் பார்க்கிறேன்.

இப்படிக்கு
நையிற் வாச்சர் நல்லையா

நண்பர் (1) – என்ன மச்சான் கலியாணம் முடிஞ்ச கையோடை ஹனி முன் போகப் போறதாகச் சொன்னாய் இஞ்சை நிக்கிறாய்?




நண்பர் (2) – ஹனிமூனுக்கு முதல் பான்கீமூனைச் சந்திக்கப் போறன்.

நண்பர் (1) – ஏன்?

நண்பர் (2) – அப்பாவித் தமிழரைக் காப்பாற்றத் தவறியது ஏன்? எண்டு கேட்கப் போறன்.

நண்பன் (1) – கண்கெட்டபின் சூரிய நமஸ்காரம் செய்து என்ன பிரயோசனம் மச்சான். கீதையில் கண்ணன் சொன்னது போல என்ன நடந்ததோ அது நன்றாகவே நடந்தது நடக்கப் போவதும் நன்றாகவே நடக்கும் எண்டு நம்பி வாழவேண்டியதுதான். நீ மூனிட்டைப் (சந்திரன்) போனாலும் சன்னிட்டைப் (சூரியன்) போனாலும் வேலையில்லை மச்சான்.

1962 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் அரச சேவையில் இருக்கும் போது பதவியில் நிரந்தர மாகவும், உயர்வாகவும் இருக்க சிங்களம் அவசியம். எழுத்துப் பரீட்சையும் நேர்முகப்பரீட்சையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தது. எழுத்துப் பரீட்சை இலகுவாக இருந்தது. நேர்முகப்பரீட்சை தான் சங்கம். பரீட்சைக்கு ஒவ்வொருவராக அழைக்கப் பட்டு சிங்களத்தில் கேள்விகள் கேட்டார்கள். எனது பெயரைக் கூப்பிட்டதும் பதட்டத்துடன் உட்சென்றேன்.



"ஆயு போவான்" என்றேன். (அது மட்டும் தான் ஒழுங்காகச் சொல்ல முடியும்) அவர்களுக்கு பதிலுக்கு "ஆயு போவான்" மாத்தைய வாடி வென்ட" என்றார்கள். முன்னால் இருந்த கதிரையைக் காட்டி மின்சாரக் கதிரையில் அமர்வது போல் இருந்தது. அமர்ந்ததும் முதற் கேள்வி "மாத்தையா உதே மொனவ காவே" என்று கேட்டார்கள். உண்மையைச் சொல்ல வேண்டும் என்ற கொள்கை உடையவன் நான் என்பதால் காலையில் புட்டு திண்டதை எப்படி சொல்வது என்று சிந்தித்து விட்டு "மம புட்டுவ காவே" என்றேன். அதன் பின்னர் அவர்கள் வாயடைத்துப் போனார்கள். கேள்வி கேட்பதை நிறுத்தி விட்டு "போமஸ்துதி" என்றார்கள். பதிலுக்கு நானும் அப்படியே சொல்லி விட்டு ஆளைவிட்டால் காணும் என்று வந்துவிட்டேன்.

சில நாட்களுக்குப்பின்பு எமது காரியாலயத்துக்கு தனிச் சிங்களத்தில் ஒரு கடிதம் வந்தது. அங்குள்ள வர்கள் ஒவ்வொருவருக்கும் வாசிக்கத் தெரியவில்லை. பலத்த வாத பிரதிவாதங்களின் பின்னர் கடிதத்தை வாசித்தறிய பாண்கார மாமாவை நாடுவது என முடிவெடுத்து காட்ட அவர் சொன்னது நீங்கள் சிங்கள Exam Pass என்று. நாம் வாயெல்லாம் பல்லாக நின்றோம். இன்றுவரை எப்படி Pass பண்ணினோம் என்பது தான் ஆராய்ச்சிக்குரிய விடயம்.

இதேபோல் எனது நண்பன் ஒருவர் ஆராய்ச்சிக்குரிய ஒரு விடயத்தை இன்றுவரை தீர்க்கமுடியாதிருக்கின்றார். அதாவது நாடாளுமன்றத் தேர்தலில் சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிட்டார். மூன்று வாக்குகளே கிடைத்தன. அவர் என்னைக் காணும் போதெல்லாம் சொல்வது "எனக்குக் கிடைத்த மூண்டு வாக்கிலை ஒன்டு என்ரை.. மற்றது மனிசின்ர.. மூண்டாவது ஆர் போட்டதென்டுதான் கண்டுபிடிக்க ஏலாம இருக்கு".

தமிழ் பகுதிகளில் அண்மைக்கால போதைப் பொருள் பாவனை எப்படி களைகட்டியுள்ளது என்பதை பத்திரிகைகளின் வாயிலாகவும், வானொலிகள் மூலமாகவும் அன்றாடம் பார்க்கவும், கேட்கக்கூடியதாக இருப்பது கவலைக்குரியது. போதைப் பொருட்களில் தான். எத்தனை வகை சட்டத்தின் கீழ் அகப்படும் தொகை அளவு பாவனையில் உள்ளதை விட மிகவும் குறைவானது என்பது சொல்லாமலே புரியும் இளம் சமூகத்தினரது எதிர்காலம் இருண்டதாகவே தென்படுகிறது. புகைப் பாவனை, மது போதைப் பொருட்கள் பாவிக்கும் ஒருவர் எல்லை மீறி அதற்கு அடிமையாகிவிடுவார். அந்த பழக்கத்தில் இருந்து மீளமுடியாதவர்களை ஆங்கிலத்தில் (ADDICT) என்பார்.

இவைகளையெல்லாம் நான் சொல்ல வருவது ஏனெனில் எமது சமூகத்தில் இன்னுமொரு பொழுதுபோக்கென தொலைக்காட்சி பார்த்தல். முக்கியமாக தொடர் நாடகங்கள், மெகா சீரியல் பார்த்தல் இருக்கிறது. பலருக்கு தவிர்க்க முடியாத பொழுதுபோக்காக இது அமைந்துவிட்டது. இதுவும் ஒருவகை போதை தான். பார்வையாளர்கள்



இதற்கும் அடிக்கற் ஆகிவிட்டனர். தொடர் தொடங்கும் நேரம் இந்த உலகையே மறந்துவிடுவார். அண்மையில் எனது நண்பர் ஒருவரை சந்திக்க சென்றிருந்தேன். வீடு பூட்டி இருந்தது. உள்ளில் இருந்து நண்பர் இஞ்சேரப்பா ராசாவை ஆஸ்பத்திரியிலை கொண்டு போய் போட்டவை அவற்றை பாடு எப்படியோ தெரியவில்லை. எனக் கேட்ட கேள்விக்கு அவரது மனிசி ஆள்முடிஞ்சிருக்கும் அந்த மாதிரியான வெட்டெல்லே கத்தியால கார்த்தி வெட்டினவன் என்றார். எதுக்கும் ஏழு மணிக்கு தொலைக் காட்சியைப் போட்டால் தெரியும் தானே என்றார். மனுசன் மெகா சீரியல் இருவரும் டிஸ்கஸ் பண்ணியிருப்பது பின்பு தான் தெரிந்தது. சிவ பூசைக்குள் கரடி புகுந்த மாதிரி நானும் அவர்களது மெகா சீரியல் நேரத்துக்கு போய் அகப்பட்டு விட்டேன். வாருங்கோ அண்ணை என அவரது மனைவி வரவேற்றாலும், மனதுக்கு ஏன் இந்த நேரம் பார்த்து இந்த மனுசன் வந்து நுழைஞ்சது

என அவர் நினைப்பது எனக்கு விளங்கினாலும், நானும் அவர்களது தொடர் நாடகத்தை பார்த்து விட்டு போவோம் என அமர்ந்து விட்டேன்.

ரீ போடப்பா என்றார் நண்பர். இந்த வெக்கைக்கு ரீ என்னத்துக்கு என்றார் மானுசி. நான் வேண்டாம் வீட்டில் குடிச்சிட்டு தான் வந்தனான் என ஒரு பொய் சொல்லி இருவரையும் சமாதானப் படுத்தவும் மெகா சீரியல் ஆரம்பமாகவும் சரியாக இருந்தது. முன்பு நடந்த கடைசி தொடரை ஸ்லோ மோஷனில் காட்டினார். அதில் வில்லன் எப்படி கையில் கத்தியுடன் ஒருவரைக் கலைத்துக் கொண்டு சந்துபொந்தெல்லாம் துரத்துவது வழிப்போக்கர்கள் அதை எல்லாம் அசட்டை செய்யாமல் தன் பாட்டுக்கு ஸ்லோமோஷனில் போவது என்று காட்டிக்கொண்டிருந்தார்கள். வேடிக்கையாக இருந்தது. நண்பனின் மனுசி இடைக்கிடை ஐயோ பாவம் ஐயோ பாவம் வெட்டப்போறான் என பதறிக்கொண்டிருந்தார். மனுசனோ திறந்த வாய் மூடமறந்து பார்த்துக் கொண்டிருந்தார். இந்தக் கட்டம் முடியும் முன் தொடரின் ஸ்பொன்சர் விளம்பரம் போட்டார்கள். சுமார் பத்து நிமிடம் விளம்பரம். இந்த சமயம் நண்பர் என்னை சந்தோஷப்படுத்த ஊரில என்ன புதினம் அண்ணைய் என்றார். ஏன் ரீவில நியூஸ் பார்த்தால் தெரியும் தானே என்றேன். நாங்கள் நியூஸ்எல்லாம்பார்க்கிறதில்லை. "வெறும்பொய்தான் சொல்லுவார்கள்" என்றாள் அவரது மனுசி.

அப்ப உந்த தொடர்நாடகமெல்லாம்உண்மையான விடயத்தை தான்சொல்லுதோ என்றேன். வாயடைத்துப் போனவர் ஐயோ கடவுளே என கத்திக் கொண்டு குசினிக்குள் ஓடினார். என்னப்பா என்று நண்பர் கேட்க சொதி அடுப்பில பொங்கி ஊத்துண்டு போட்டுது எண்டார். பரவாயில்லை சட்டியை இறக்கி வைத்து விட்டு வந்து இரும். நாடகம் தொடங்கப் போகுது என்றார். நாடகம் தொடர்ந்தது. சோகமான கட்டங் களில் இருவரும் உணர்ச்சிவசப்பட்டு கண்ணீர் விட்டுக்கொண்டே பார்த்தனர். ஒரு கட்டத்தில் வில்லன் கதாநாயகியை கொலை செய்யும் நோக்கில் கழுத்தில் கத்தியை வைத்துக் கொண்டு நீண்ட வசனம் பேச திடீரென்று பொலிஸ் அறைக் கதவை உடைத்து உட்புக தன்னை மறந்த நண்பர் இரு கைகளையும் தட்டி ஆரவாரப்பட ரீவி நின்று விட்டது. என்னப்பா நடந்தது என மனைவியும் கவலைப்பட ஒன்றுமில்லை என மளுப்பினார். நண்பர் நடந்தது இது தான் ரிமோட்டை கையில் வைத்துக் கொண்டு தட்டியதன் பயன் ரீவி ஓவ் ஆகிவிட்டது. ஆளைவிட்டால் காணும் என நான் மெல்ல எஸ்கேப் ஆகிவிட்டேன்.

## திரும்பி வந்த அலிகேஷன்

காக்கைக்குத் தன்குஞ்சு பொன் குஞ்சு என்பார். இதன் நேரடி விளக்கத்தை விளக்க வேண்டியதில்லை. மனிதர்கள் தமது உறவுகளை பெரும் ஆசையுடன் நேசிப்பார். அப்படி நேசிக்கப்படும் பொருள் உயிருள்ளதாகவோ, அல்லது உயிரற்றதாகவோ இருக்கலாம். சுற்றி வளைப்பானேன். நான்உங்களுக்கு சொல்ல வருவது மாரிமுத்து ஆசையுடன் வளர்த்து வரும் நாய்குட்டியைப் பற்றிய கதை. பீதாம்பரம் பிறக்கிறாசியர் வீட்டில அடிக்கடி தொட்டாட்டு வேலைகள் செய்யப் போகும் மாரிமுத்துக்கு அங்குள்ள அலிகேஷன் நாய் போல் தானும் ஒரு நாய் வளர்க்க வேணும் என்பது சின்ன சின்ன ஆசையல்ல. பெரிய ஆசை. மாரிமுத்து தனது நண்பன் ஊத்தைக்குமாரிடம் இந்த ஆசை பற்றி சொல்லியிருந்தான். மாரிமுத்துவின் அப்பாவித்




தனத்தை பயன்படுத்தி ஊத்தைக்குமார் அவருக்கு உள்ளூர் நாய்க்குட்டியொன்றை அலிகேஷன் என்று சொல்லி பெருந்தொகைக்கு விற்றுவிட்டான். இந்த விடயத்தை செல்லப்பாவிடம் சொல்லாமல் சஸ்பன்சாக வைத்திருந்தான் மாரிமுத்து. தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் என நிற்கும் மாரிமுத்து தன்ரை நாய்க்குட்டி ஒர் அலிகேஷன் நாய் குட்டி என ஊர் முழுவதும் சொல்லிக் கொண்டிருந்தார். அல்கேஷன் என அவனது நாக்கு உச்சரிக்க மறுத்துவிட்டதால் அது அலிகேஷனாக வலம் வந்தது. பிற்காலத்தில் அந்த நாய்க்குட்டியின்

அட்டகாசத்தால் ஊரில் பலர் அலிகேஷன்களை விதானையாரிடம் கொடுக்க மாரிமுத்து கலங்கிப் போனான். அலிகேஷன் என்றால் ஆங்கிலத்தில் குற்றச்சாட்டு என அறியாத அப்பாவி மாரிமுத்து கடைசியில் செல்லப்பாவிடம் சரணடைந்து உண்மையைக் கூறி அலிகேஷனை எப்படி அகற்றலாம் என ஐடியா கேட்டார். செல்லப்பாவின் மனைவி பூமணியும் மாரிமுத்துவின் துயரைப் போக்க அவர்களது கலந்துரையாடலில் பங்கேற்று இறுதியில் நாய்க்குட்டியை யார் கண்ணிலும் படாதவாறு கல்லுண்டாய் வெளியில் கொண்டு போய் விட்டுவிட்டு வருவது என தீர்மானம் நிறை வேற்றினார். மாரிமுத்து தான் அந்த கைங்கரியத்தை செய்வது என முடிவு எடுக்கப்பட்டது. செல்லப்பாவும் மாரிமுத்துவும் இணைபிரியாத கூட்டாளிகள் என்பதால் ஊர் மக்கள் தமது அலிகேஷன்களை வாபஸ் பெற்றுவிட மாரிமுத்து தனது செல்ல நாய்க் குட்டியை நல்ல நாளாய்ப் பார்த்து அதற்கு பிரியமான மீன்குழம்பு சோறு ஊட்டிய பின் கல்லுண்டாய் வெளியில் விட்டுவிட்டு சோகமாய் வீட்டுக்குள் முடங்கிவிட்டார். பல நாட்களாக செல்லப்பா வீட்டுக்கு வராததால் மாரிமுத்துக்கு என்ன நடந்தது? என செல்லப்பாவின் மனைவி பூமணி கேட்க செல்லப்பா விசயம் அறிய மாரிமுத்து வீட்டுக்கு போனார். அங்கு மாரிமுத்து புதுசாரம், புதுசேட் போட்டுக் கொண்டு செல்லப்பாவை வாங்கோ என வரவேற்றார். உங்களிட்ட வரவேணும் எண்டு வெளிக்கிட கும்பிடப்போன தெய்வம் குறுக்க வந்த மாதிரி வந்திட்டியள் என்றார். என்ன விசயம் எனக் கேட்க இண்டையோட என்ர அலிகேஷனை அகற்றி இரண்டு கிழமையாச்சு அது தான் உங்களுக்கு ஒரு பாட்டி வைக்க என்று ஏற்கனவே வாங்கி வைத்திருந்த இரண்டு போத்தல் கள்ளைக் காட்டினார். இருவரும் ஆண் பனைக் கள்ளை அனுபவித்துக் குடிக்க குசுனிப்பக்கம் பானை, சட்டி உருளும் சத்தம் கேட்க மாரிமுத்து சொன்னார் அண்ணை கள்ளப் பூனையின்ர அட்டகாசம் தாங்கேலாது. எதுக்கும் பார்த்துக் கொண்டு வாறேன். என குசுனிக்குள் ஓடியவர் ஐயோ அண்ணை என்ரை அலிகேஷன் திரும்பி வந்திட்டு என்றார்.

தூக்கமும் கண்களைத் தழுவட்டுமே. தூங்காத கண்கள் இரண்டு என தூக்கத்தைப் பற்றி பல பிரபல்யமான பாடல்கள் எமது சினிமாவில் உண்டு. தூக்கம் என்பது மனிதனின் வாழ்வில் இன்றியமையாத தொன்று. 20 – 70 வயதுக்கிடையில் சராசரி 15 வருடங்களைத் தூக்கத்தில் செலவு செய்து விடுகிறோம் என்றால் அதன் இன்றியமையாத செயற்பாட்டை விளக்க வேண்டியதில்லை. நித்திரையின்மையின் பாதிப்பு – யுத்த களத்தில் போர் தோல்வி. நரம்புத் தளர்ச்சி நோயாளர்கள் மனநிலை பாதிப்பு – மனைவியை இழந்த கணவன். கணவனை இழந்த மனைவியெனச் சொல்லிக் கொண்டே போகலாம். இனி தூக்கத்தைப் பற்றி சில குறிப்புகளைப் பார்க்கலாம்.

1. ஆழ்ந்த அமைதியான தூக்கம் நித்திரை போய் முதல் சில மணித்தியாலங்களில் தான் பெற முடியும் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.
2. வழக்கமான 8 மணி நேர நித்திரைக்குப் பதிலாக 6 மணி நேரம் மட்டும் தூங்கினால் அடுத்த நாள் நாம் இழந்த 2 மணி நேரத்தை ஈடுசெய்ய 25 வீத கலோரி சக்தியை பயன்படுத்த வேண்டி வரும் என்கிறார்கள்.



3. குறைவான இரவுத் தூக்கம் உள்ளவர்கள் சுறு சுறுப்பானவர்கள் என்ற நம்பிக்கை எம்மில் பலருக்குண்டு. உதாரணமாக மாவீரன் நெப்போலியன், விஞ்ஞானி எடிசன் போன்றோரை குறிப்பிடுவர். ஆனால் அவர்கள் பகலில் குட்டித் தூக்கம் (CATNAP) போட்டுவிடுவர். இதனால் 24 மணி நேரத்தில் வழமையான தூக்க நேரத்தைப் பெற்றுவிடுவர் என்பது பலருக்குத் தெரியாது.
4. மனிதனின் முழுத் திறனையும் பெற ஓர் ஆய்வு செய்யப்பட்டது. அதில் தொழிற்சாலை ஊழியர் களுக்கு மதிய உணவின் பின்பு குட்டித் தூக்கம் கொள்ள அனுமதிக்கப்பட்டதில் அவர்களது முழுத்திறனையும் பெறப்பட்டதாக முடிவுகள்

தெரிய வந்தனவாம். இதேபோல மதிய போசனத்தின் பின் ஒரு மணி நேர தூக்கம் கொண்ட சர்வகலாசாலை மாணவர்கள் தாம் தொடர்ந்து படித்ததை விடக்கூடிய புள்ளிகள் பெற்றனர் என ஆய்வுகள் தெரிவிக்கின்றவாம்.

5. நிம்மதியான தூக்கத்துக்கு நாம் படுக்கும் கட்டிலின் மெத்தை அதிக மென்மையாகவோ, அதிக கடினமாகவோ இல்லாது நடுத்தரமான தன்மை கொண்டதாக இருப்பின் தூக்கத்துக்கு அனுசரணையாக அமையுமாம் தவிர படுக்கைக்கு முன் தேக அப்பியாசம் கடுமையாகச் செய்தால் களைப்புற்று தூக்கம் குழம்ப இடமுண்டு இந்தச் சமயத்தில் வெந்நீரில் குளித்தால் சாதகமாக இருக்கும். கோடை காலத்தில் தண்ணீரிலும் குளிக்கலாம் என்கிறார்கள்.
6. கோடை காலத்தில் படுக்கையறையில் மின் விசிறியை சுழலவிடுவது நல்லது. ஆனால் அது கணக்கான வேகத்தில் சத்தமின்றி சுழன்றால் தூக்கத்துக்கு அனுசரணையாகவிருக்கும் என்கிறார்கள்.

தூக்கத்தைப் பற்றி உங்களுக்குச் சொல்ல எனக்கொரு சுவையான சம்பவம் ஞாபகத்துக்கு வருகுது.

வகுப்பறையில் வாத்தியார் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். மாணவன் ஒருவன் மேசை மீது படுத்துறங்கிவிட்டான். கோபப்பட்ட வாத்தியார் "டேய் சுந்தரம் எழும்பு எழும்பு" என்று அவனை எழுப்பி "என்னடா பகல் நித்திரை கொள்ளுறாயோ" என்றார். பதிலாக அவன் "சேர் அப்துல் கலாம் அவர்கள் இளைஞர்களைக் கனவு காணச் சொல்லியிருக்கிறார். அதான். என்று இழுக்க கடைசி வாங்கில் அமர்ந்திருந்த அமிர்தலிங்கம் பக்கத்தில் அமர்ந்திருந்த அருமை நாயகத்திடம் "யார் அந்த அப்துல்கலாம்" என்று கேட்க இதுகூட உனக்குத் தெரியாதோ "அவர்தான் புளியடிச் சந்தியிலை றெயிலர் கடை வைச்சிருக்கிறவர்" எண்டான்.



Table mannecrs மேலைத் தேசத்தவர்கள் கடைப்பிடிக்கும் ஒரு பண்பு அதே போல் நம்மவர்கள் கடைப்பிடிக்கும் சாப்பாட்டு முறையில் மாற்றங்கள் ஏற்பட்டு தமிழ் பண்பாடு விருந்தோம்பலுக்கு "ரற்றா" காட்டிவிட்டது விருந்தோம்பல்.

விருந்தோம்பலாகி வருகிறது. அக்காலத்தில் தரையில் அமர்ந்து வாழையிலையில் உண்பதும், விருந்தாளிகளை உபசரித்து கறிசோறு பரிமாறும் பண்பு மாறுவது வருந்தத்தக்கது. சரி மேசை கதிரையில் உட்கார்ந்திருந்து சாப்பிடுவதில் தவறு இல்லை. ஆனால் இந்த Self serve முறையை நாம் முறையாக அனுசரித்து நடக்கின்றோமா என்பது தான் கேள்வி. முக்கியமாக கலியாண வைபவங்களில் அறுகரிசி போடும் வரிசையில் ஆண்களும் பெண்களும் இடிபட்டு நிற்பது மணமக்களை மனதார வாழ்த்தவல்ல. மாறாக அறுகரிசியை மணமக்கள் தலையில் போட்டு என்வலப்பை அவர்கள் கையில் திணித்து வீடியோ கமாராக் களுக்கு போஸ் கொடுத்ததும் ஓட்டப்போட்டி ஆரம்பமாகி சாப்பாட்டு மண்டபத்தை அடைந்து அங்கும் வரிசையில் இடம்பிடிக்க இடிபடுவது சபாஸ் சரியான போட்டி தான். என்னதான் அவசரமோ? பந்திக்கு முந்து படைக்குப் பிந்து என்ற கோட்பாட்டை தவறாது கடைப்பிடிப்பாளர்கள் போலும். பழைய நண்பர் ஒருவரை ஒரு கலியாண வீட்டில் சந்தித்து கதைத்துக் கொண்டிருந்தேன்.

தனக்கு 20 வருசமாய் டைபிற்றிஸ் கொலஸ் ரோல் இருப்பதாகவும் இன்சுலின் ஊசியும், மருந்தும் எடுப்பதாகவும் சொன்னார். "கொன்றோல்லை இருக்குது" எண்டார். அவர் சொன்னது தனது வியாதியை தனது மனதைப் பற்றியதல்ல என்பதை பின்னால் கண்டு கொண்டேன். சாப்பாட்டுக்கு கியூவில் முதலிடம் பிடித்து நிண்டவர் உருளைக் கிழங்குக் குழம்பு 3 கறண்டி, கத்திரிக்காய் பிரட்டல் 3 கறண்டி அள்ளிப் போட்டு சோற்றை மூடிவிட்டு

மூலையில் அமர்ந்து அனுபவிச்சுச் சாப்பிட்டார். அவரது மனுசி முறைச்சுப் பார்க்க "மருந்தும் ஊசியும் கொண்டு வந்தனான் அப்பா" என்று சொல்லிக் கொண்டு "பாயாசம் எங்கை" என்று விசாரித்துக் கொண்டு திரிந்தார்.

மற்றொருநாள் அன்னதானச் சாப்பாடு சாப்பிடேல்லை எண்டு போட்டு சாப்பாட்டு மண்டபத்துக்குள் நுழைய வாசலில் ஒருவர் தடியுடன் நிண்டார். விசாரித்தளவில் ஒழுங்காய் இருந்து சாப்பிடவேணும் எண்டு வெருட்டுவாராம். பிறகேன் மினக்கெடுவான் எண்டு வீட்டை வந்திட்டன்.



மனது மனது என்பார்கள் இந்த மனது என்பது என்ன என்பதைப் பற்றி கொஞ்சம் சிந்திக்கலாம் என நினைத்தேன். அதன் பலன் தான் சிலவரிகள் உங்களிடம் பகிர்ந்து கொள்ளலாம். காதலைப் பற்றி கவிஞர்கள் சொல்லாத விடயம் இல்லையெனலாம். சினிமா முதல் பண்டைய காவியங்கள் வரை பிச்சு உதறிவிட்டார்கள். உதறிக்கொண்டும் இருக்கிறார்கள். காதலுக்கு சின்னமாக இதயத்தை காண்பிக்கிறார்கள். ஆங்கிலத்தில் ஸ்வீற் ஹாட் 'Sweet heart' என்றார்கள். என் இதயத்தின் அடித்தளத்திலிருந்து (From the bottom of my heart) என்றார்கள். காதலுக்கும் மனித இதயத்துக்கும் என்ன சம்பந்தமோ தெரியவில்லை. காதல் மூளையிலிருந்து தான் பிறக்கிறது என உயிரியல் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். குறிப்பாக மனிதனை மூளைதான் ஆட்டிப் படைக்கிறது. அது சுப்பர், சுப்பர் கணினி என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. மனது என்பது மூளையின் வெளிப்பாடுகளில் ஒன்று. மனிதனுக்கு அவையவங்கள் இரண்டு இரண்டாக உள்ள போதிலும் மூளை மட்டும் தனித்து நின்று அவனை ஆட்டிப் படைக்கிறது. கவிஞர் கண்ணதாசன் எழுதிய சினிமாப் பாடல் ஒன்றில் கதாநாயகனை "இரண்டு மனம் வேண்டும் இறைவனிடம் கேட்டேன் நினைத்து வாழ ஒன்று மறந்து வாழ ஒன்று" என கேட்க வைத்து விட்டார். காரணம் கதாநாயகனால் தனது சோகத்தை மறக்க முடியாது. அதை மறந்து போக ஒரு மனதைப்பாவிக்கலாம்என எண்ணுகிறான். காரணம் மனக்கவலை மாற்றல் அரிது என்பதால் தானோ?

சரி விடயத்துக்கு வருவோம். மனம் ஒரு குரங்கு கடிவாளம் இல்லாத குதிரை. கோயிலுக்கு கும்பிடப் போனாலும் தியானத்தில் மனதை அடக்க முற்பட்டாலும் பஜனையில் பாடினாலும் குரங்கும் குதிரையும் அடங்க மறுக்கின்றன. எனது நண்பர் முருகன் படத்துக்கு முன்னால் நின்று தேவாரம் பாடிக்கொண்டிருந்தார். அவரைக் குழப்பக் கூடாது என நினைத்து நான் அமைதியாக அவரைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவரோ அடிக்கடி தேவாரத்தை நிறுத்தி "கணபதி கோழி முட்டை அவிஞ்சு போச்சோ பார்" என்று தனது வேலையாளைக் கேட்டுக் கொண்டே இருந்தார். அவரது மனது கோழி முட்டை மீதுதான். அதனை முருகன் மீது திருப்ப முயற்சி பண்ணிக் கொண்டே இருந்தார் பாவம் அவரால் முடியவில்லை.

கோயிலுக்குப் போய் மனதை அடக்கி வழி படுவோம் என்றால் அங்குள்ள பாவைகளும் பொம்மைகளும் வயது வந்தவர்களுக்கு மட்டும் தான் (Adults only dress) அலங்கோலமாக நிற்கின்றன. தெய்வச் சிலைகளை தாங்கி செல்ல உதவும் வாகனங்களும் பாலியல் நிலையில் Sex pose இல் ஆடி மனமெனும் குரங்கை தட்டி விடுகின்றன. இதையெல்லாம் தாண்டி மனசை அடக்குபவன்தான் ஞானி ஆகிறான்.

# சிரிப்பே சிறந்த மருந்து

வெளிநாடு ஒன்றில் தொழில் புரியும் மருத்துவர் ஒருவர் தனது வீட்டுத் தண்ணீருக்கு குழாய் உடைந்ததால் பொருத்துநர் ஒருவரைத் தொடர்ந்து கொண்டு வரவழைத்து அதை சரி செய்துவிட்டு வந்த பொருத்துநருடம் உங்கள் கூலி எவ்வளவு என்று கேட்க அவர் 500 டொலர் என்றார். அதற்கு மருத்துவர் நான் கஸ்டப்பட்டு உழைத்தாலும் ஒரு நோயாளியிடம் 100 டொலருக்கு மேல் பெற முடியவில்லையே என்று ஆதங்கப்பட பொருத்துநர். அதற்காகத் தான் நான் முன்னைய தொழிலை விட்டு இந்த வேலையைச் செய்கிறேன் என்றார். முன்பு என்ன தொழில் என மருத்துவர் கேட்டார். மருத்துவர் என்றார் பொருத்துநர். ஈழத் தமிழர்களே



ஈழத் தமிழர்களே நீங்கள் என்னை கல்லைக் கட்டி கடலில் தூக்கி போட்டாலும் கட்டு மரமாகத்தான் மிதப்பேன். நீங்கள் அதில் ஏறிப் பயணம் செய்யலாம் கவிழ்ந்து விழ மாட்டேன். சந்தர்ப்பம் வரும்போது எனது பதவியை காக்க கவிழ்த்து விடுவேன். அவர் சொன்னதை செய்வதில் வீரர் என்பதை செயலில் காட்டிவிட்டார்.

நீதிபதி :- (குற்றம் சாட்டப்பட்டவரைப் பார்த்து) நீர் வழக்காளிக்குச் சொந்தமான, பழைய இரும்பைக் களவாடியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளீர். உமது நிலை என்ன?

குற்றம் சாட்டப்பட்டவர் :- ஐயா! நான் கிருஷ்ண பரமாத்மாவின் தத்துவப் படியே நடந்துள்ளேன்.

நீதிபதி :- விளங்கவில்லை விளக்கமாகச் சொல்

கீதாசாரப்படி "எதை நீ எடுத்துக் கொண்டாயோ அது, இங்கிருந்தே எடுக்கப்பட்டது. எதைக் கொடுத்தாயோ அது இங்கே கொடுக்கப்பட்டது. எது இன்று உன்னுடையதோ நாளை மற்றொருவருடையதாகிறது, மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும் நான் எடுத்த இரும்பின் நிலையும் அதுவாகும் இதில் சொந்தம் கொண்டாட என்ன இருக்கிறது.

நீதிபதி :- !!






நோயாளி :- டொக்டர் எனக்கு மண்டைக் குத்து நிக்குதில்லை. நீங்கள் தந்த மருந்துகளை விழுங்கியும் பலன் இல்லை.

டொக்டர் :- அப்பிடியா.. இந்தாருங்கோ, இந்த மருந்தையும் எடுத்துப் பார்த்து விட்டு எனக்கொருக்கா வந்து சொல்லுங்கோ! மறந்துவிடா தேங்கோ!

நோயாளி :- சரி டொக்டர் நீங்கள் என்னிலை எவ்வளவு கரிசனையாய் மருந்து -கள் தாறியள்..

டொக்டர் :- அப்பிடியொண்டுமில்லை எனக்கும் உதே அறிகுறி இருக்கு!

நோயாளி :- ???



1955 ஆம் ஆண்டளவில் கொக்குவில் இந்துக் கல்லூரியில் படித்த காலத்தில் மலேயா தேசத்திலிருந்து வந்த சில மாணவர்களும் என்னுடன் படித்தனர். அவர்களுக்கு தமிழ் சுட்டுப் போட்டாலும் வராது. தமிழ்ப் பாட நேரம் வந்ததும் நாம் எல்லாம் தமிழ்ப் பண்டிதராக மாறிவிடுவோ

எமக்கு தமிழில் எல்லாம் தெரியும் என நடித்து மலேயா மாணவர்களை மடக்கி விடுவோம்.


ஒரு சமயம் தமிழ் வாத்தியார் பழமொழிகள் பல சொல்லித் தந்தார். வகுப்பு முடிந்ததும் மாணவர்களே, நான் சொல்லித்தந்த பழமொழிகளை மனனம் செய்து நாளைய வகுப்பில் சொல்ல வேண்டும் என சொல்லிவிட்டு அடுத்த நாள் வகுப்பில் ஒவ்வொரு மாணவனும் இரண்டு பழமொழி சொல்லிவர எனக்குப் பக்கத்திலிருந்த மலேயா மாணவன் "மச்சான் நான் எல்லாம் மறந்துபோனன். டக்கெண்டு இரண்டு பழமொழி சொல்லித்தா" என்றான். ஆபத்தில் உதவும் உயரிய உள்ளம் கொண்ட நான் "கூழ் ஆனாவும் குளித்துக் குடி, கந்தையானாலும் கசக்கிக் கட்டு" என சொல்லிக் கொடுத்தேன். அவனது முறை வந்ததும் எழும்பி நின்று உஷாராக "கந்தையானாலும் கசக்கிக் குடி. கூழானாலும் குளித்துக்கட்டு" என ஒரு புதுமொழி சொல்ல வகுப்பறை கலகலப் பானது.

உந்த டாக்டர் போலி டாக்டர் போலை கிடக்கு ஏன் அப்பிடிச் சொல்லுறியள்..?

மருந்து எழுதிக் குடுத்திட்டு, தன்ரை பாமசியிலை 100 குளிசை வாங்கினால் 10 குளிசை இனாம் எண்டு சொல்லுறாராம்.

நோயாளிகளைப் பரிசோதித்துவிட்டு பில் கொடுக்கும் போது தேமோ மீற்றருக்கு மேலை ஏதாவது பாத்துத் தாருங்கோ எண்டு கேட்கிறாராம் அந்த டொக்டர்.

அது பழக்க தோஷம் அவர் முன்பு மீற்றர் ஓட்டோ ஓட்டியாக தொழில் செய்தவராம்.



நேர்ஸ் அம்மா டொக்டர் எங்கை?

அவர் தியேட்டரிலை நிக்கிறார். இஞ்சை நாங்கள் எவ்வளவு நேரம் காத்திருக்கிறம் அவர் படம் பார்க்கிறாரோ?


இல்லை அவர் ஒப்பரேஷன் தியேட்டரிலை..!

நேர்ஸ் :– ஆச்சி ஏன் இஞ்சை வந்தனியள்? என்ன வருத்தம்?

ஆச்சி :– எனக்குப் பிள்ளை, எல்லாம் இரண்டு இரண்டாய் தெரியுது. கண் டொக்டர் 22 ஆம் வாட்டுக்குப் போகச் சொன்னவர் அதுதான் வந்தன்.

நேர்ஸ் :– ஆச்சி இது 2 ஆம் வாட்.

ஆச்சி :– ..!





மந்திரி :– மன்னா எதிரி எம்மீது படையெடுக்கத் திட்டமிட்டிருப்பதாக எமது ஒற்றன் குறுந் தகவல் அனுப்பியிருக்கிறான்.

மன்னன் :– ஆம் மந்திரியாரே நானும் உளவுச் செய்தி மூலம் அறிந்தேன். படையெடுப்பை முறியடிக்க ஏற்பாடு செய்து விட்டேன்.

மந்திரி :– அப்படியா எப்படி?

மன்னன் :– எமது அந்தப்புரத்து அழகிகளில் ஐவரை தெரிவு செய்து வரவேற்பறையில் அமர்த்தியிருக்கிறேன் எதிரியின் பலவீனம் எனக்கு நன்கு தெரியும்.

மந்திரி :– சபாஷ் மன்னா சபாஷ்..

மனைவி :– நாதா, உங்கள் மேல் எவ்வளவு அன்பு வைத்திருக்கிறேன் தெரியுமா? எனக்கு முன்பு நீங்கள் இறந்தால் உடன் கட்டை ஏறிவிடுவேன்.

கணவன் :– நீ உடன்கட்டை ஏறவேண்டாம் அடிக்கடி உறுட்டுக்கட்டையை மட்டும் கையில் எடுக்காதே! அதுவே நீ செய்யும் உபகாரம்.




செல்லம்மா தன்ரை மனிசன்ரை செத்த வீட்டிலை அழலேல்லையாம்! மெகா சீரியல்களைப் பார்த்து பார்த்து அழுததாலை. அழுகை வரேல்லையாம். எப்ப சவம் எடுப்பினம் அடுத்த சீரியல் தொடரைப் பார்க்க வேணும் எண்டு சொல்லிக் கொண்டிருக்கறா.

ஐயாத்துரை பெண்சாதி தங்கம்மாவுக்கு தங்கடை வீட்டுப் புதினத்தில் பார்க்க ஊர் புதினம் அறிய ஆவல். ஒரு துரும்பு கிடைச்சால் போதும் அதுக்கு மூக்கு வாய், கண் எண்டு வைச்சு ஒரு கதையையே கற்பனை செய்து உருவாக்கிப் போடுவா. பாருங்கோ, உதாரணத்துக்குப் போனகிழமை முத்தர் வீட்டு மருமகள், மாமியாரைப் பார்க்க வந்த இடத்திலை மாமியாரும் மருமகளும் கதைச்சது தங்கம்மாவின்ரை காதிலை சாடையாய் விழுந்திட்டுது. போன அலுவலை மறந்து நிண்டு காதை கூர்மையாக்கி கேட்டுவிட்டு அடுத்த வீட்டு அன்னம்மாவிட்டை போய் சொன்னா "அன்னம்மா உனக்கு விஷயம் தெரியாதோ முத்தண்ணையின்ரை மருமகளுக்கும் மாமியாருக்கும் குசினிக்குள்ளை சண்டை" எண்டு. உனக்கு எப்பிடித் தெரியும் எண்டு திருப்பிக் கேட்ட அன்னம்மாவுக்கு "ஐயோ! மாமி சுட்டுப்போடாதேங்கோ ஐயோ! மாமி சுட்டுப் போடாதேங்கே" எண்டு மருமகள் சொல்ல சொல்ல நெருப்பாலை சூடு விழுந்திருக்கு. பாவம் மருமகள்



நல்ல பெட்டை இந்த மனுசி செய்த வேலையைப் பாரன் அன்னம்மா எண்டா. அப்பாவியான அன்னம்மா இந்தக் கதையைப் பரப்பி ஊரே நம்பி விட்டுது. நடந்தது இதுதான். தங்கம்மா குசினிக்குள்ளை தோசை சுட்டுக் கொண்டு மருகளுக்குச் சாப்பிடக் கொடுத்திருக்கிறா. தனக்கு போதும் எண்டு சொல்ல இனி சுட்டுப் போடாதேங்கோ மாமி என்பதை "ஐயோ மாமி சுட்டுப்போடாதேங்கோ ஐயோ மாமி சுட்டுப்போடாதேங்கோ என REPEAT பண்ணியதை தங்கம்மா பெரிய கதையாக்கி விட்டா பாருங்கோவன்.



வகுப்பு ஆசிரியர் பாடம் நடத்திவிட்டு மாணவர்களைப் பார்த்து ஒவ்வொரு மாணவனையும் எழுப்பி பிற்காலத்தில் என்ன தொழில் புரிய விருப்பம் எனக் கேட்டார். முதல் மாணவன் "சேர்! நான் மருத்துவராய் வந்து மக்களுக்குச் சேவை செய்ய விருப்பம்" என்றான். அடுத்த மாணவன் "சேர் நான் பெரிய பொறியியலாளராக வந்து நாட்டுக்கு உதவ விருப்பம்" என்றான். அடுத்தவன் "சேர்! நான் பட்டயக் கணக்காளராகப் படித்து கணக்கு விட மன்னிக்கவும் கணக்காளராக விருப்பம்"

எனச் சொன்னான். அடுத்த வாங்கில் அமர்ந் திருந்தவன் சட்டத்தரணியாவது தான் எனது இலட்சியம் என்றான். கடைசி வாங்கில் கனகராசா பணிவாக எழும்பி நின்றான். "சேர்! எனக்கு குப்பை அள்ளும் வேலை கிடைத்தால் பெருமகிழ்ச்சி அடைவேன்" என்றான். ஆச்சரியப்பட்ட ஆசிரியர் "ஏன் அப்படிச் சொல்கிறாய்?" என்றார். பதிலுக்கு அவன் "வாரத்தில் ஒரு நாள் தான் வேலை சேர்" என்றான்.

பாடசாலையில் நோயுற்ற சிறுவனைப் பார்த்து

ஆசிரியர் :- உனது பெயர் என்ன? உன் பெற்றோருக்கு அறிவிக்க வேண்டும்.

சிறுவன் :- கவலைப்படாதீர்கள் என் பெயர் எனது பெற்றோருக்குத் தெரியும்.



பல்மருத்துவர்:- உங்கள் கொதிக்கும் பல்லை ஐந்து நிமிடத்தில் பிடுங்கி விடுவேன்.

நேயாளி :- எவ்வளவு செலவாகும் டொக்டர்?

பல்மருத்துவர்:- 300 ரூபா

நோயாளி :- ஐந்து நிமிடத்துக்கு 300 ரூபாவா?

மருத்துவர்:- நீங்கள் விரும்பினால் மிக ஆறுத -லாகவும் பிடுங்கலாம்

நோயாளி :- !!!




நீதிபதி :- ஒவ்வொரு தவணையும் சட்டத்தரணி இல்லாது நீதிமன்றில் வந்து நிற்கிறாயே, அப்படி ஒரு சட்டத்தரணியை ஏற்பாடு செய்ய முடியாதா உன்னால்?


குற்றம் சாட்டப்பட்டவர்:- முடியாது ஐயா! என்னிடம் அவ்வளவு பணம் இல்லை.

நீதிபதி :- ஏன் 100 ரூபாவுக்கு எல்லாம் உனது சார்பில் தோன்றப் பல சட்டத்தரணிகள் முன்வருவார்களே!

குற்றம் சாட்டப்பட்டவர் :- அந்த 100 ரூபாய்க்காரர்கள் பலர் நீதிவான்களாகப் பதவி உயர்வு பெற்றுச் சென்று விட்டார்களாம். ஐயா நான் என்ன செய்வது.

நீதிபதி :- !!!

மறதி மன்னன் மணியம் அவசர சிகிச்சைப் பிரிவில் இரு காதுகளும் கடுமையாகக் காயமுற்ற நிலையில் சேர்க்கப்பட்டார். அவரைப் பார்த்த மருத்துவர் "என்ன நடந்தது" என்றார். அதற்கு மறதி மணியம் "மருத்துவர் எனது சேட்டை அயர்ன் பண்ணிக் கொண்டு இருந்த போது போன்



வந்தது அதைத் தவறுதலாக அயனில் ஆன்சர் பண்ணியதன் விளைவு. காது.." என்றார். மருத்துவர் "அப்போ மற்றக்காதுக்கு என்ன நடந்தது? என்றார். மறதி மணியம் "அது அம்புலன்சை அழைக்க அவசரத்தில் மீண்டும் அயன்" என்றார்.!!!

மருத்துவர் :- ஞாபக மறதிக்கு நான் தந்த மாத்திரைகள் வேலை செய்யுதா?
நோயாளி :- ஆம் ஆம் அது சரி நீங்கள் யார்?



நேர்ஸ் :- (நோயாளியைப் பார்த்து) வாங்க ட்ரெஸ் (ட்ரெஸ்ஸிங்) பண்ணலாம்
நோயாளி :- ஏன், நான் நல்லாய்த் தானே ட்ரெஸ் பண்ணியிருக்கிறேன்.

தாய் :- டாக்டர், நீங்கள் பிள்ளைக்கு தந்த மருந்து சரியில்லை போல காய்ச்சல் விட்டபாடில்லை.
மருத்துவர் :- மருந்தை ஒழுங்கா கொடுத்தீர் -களா?
தாய் :- இல்லையே
மருத்துவர் :- ஏன்
தாய் :- மருந்துப் போத்தலில் பிள்ளை களுக்கு எட்டாத இடத்தில் வைக் கவும் என்று போட்டிருக்கே!



மருத்துவர் :- (நோயாளியைப் பார்த்து) "காற் -றோட்டம் வர எனது அறிவுரைப் படி ஜன்னலைத் திறந்தபடி நித்திரை கொண்டீர்களா?
நோயாளி :- ஆம் மருத்துவரே
மருத்துவர் :-"அப்போ வருத்தம் மறைந்திருக்குமே"
நோயாளி :- வருத்தம் மறைந்த பாடில்லை ஆனால் எனது கைக்கடிகாரமும் கைப் பையும் மறைந்து விட்டன.


ஒருவர் கடும் காய்ச்சலுடன் மருத்துவரைச் சந்திக்க வந்த போது "மருத்துவரை 3 கிழமை களுக்குப் பின்புதான் சந்திக்கலாம்" என வரவேற்பாளர் கூறினார். அதற்கு நோயாளி "3 கிழமைகளுக்குப் பின் என்றால் நான் இறந்துவிடக்கூடும்" எனச் சொல்ல, வரவேற்பாளர் 'அப்படியானால் எமக்கு ஒரு உதவி செய்ய முடியுமா" எனக் கேட்டார். "என்ன உதவி" என நோயாளி கேட்க "அப்படி ஏதும் நடந்தால், யார் மூலமாவது உங்கள் முன்பதிவை நீக்கச் செய்ய ஏற்பாடு செய்ய முடியுமா?" என்றார்.

தமது ஞாபக சக்தியைச் சோதிக்க 3 மறதிப் பேராசிரியர்கள் மருத்துவரிடம் போனார்கள். முதலாவது மறதிப் பேராசிரியரிடம் மருத்துவர் கேட்டார் $3 \times 3$ எவ்வளவு? பதில் 300 என வந்தது. இரண்டாவது பேராசிரியரிடம் கேட்க ஞாயிற்றுக் கிழமை எனப் பதில் வந்தது. மூன்றாவது பேராசிரியர் ஒன்பது எனச் சொல்ல, "சரியான விடையை எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?" என்றார். மருத்துவர், "மிகவும் சுலபம், ஞாயிற்றுக் கிழமையிலிருந்து 300 ஐக் கழித்தால் வருவது ஒன்பதுதானே" என்றார்.




அண்மையில் வெளிநாடு சென்று திரும்பிய ஒருவர் தனது உள்நாட்டு நண்பரைக் கண்டு, "ஆகா! வெளிநாட்டில் ஆணும் பெண்ணும் எவ்வளவு அன்னியோன்னியமாக, எங்கு சென்றாலும் கை கோர்த்தபடி செல்கிறார்களே!" என வியந்தார். அதற்கு உள்ளூர் நண்பன் "எட மடையா! அது அன்னியோன்னியமில்லை ஆளையாள் விட்டுட்டு ஓடாமல் இருக்க தற்காப்பு ஏற்பாடு. அதுகூட உனக்குத் தெரியோதோ!" என்றார்.

பதிலுக்கு நண்பர் கேட்டார் உள்ளூர் தம்பதிகள் வெளியில் செல்லும் போது ஆணுக்குப் பின் பெண்



அடக்கமாக செல்கிறார்களே? என வினவ நண்பர், "வீட்டுத் திறப்பும், நகைப் பெட்டித் திறப்பும் தன்னிடம் இருக்குது எண்ட துணிவு ஆணுக்கு இருக்கிறதால தான்" என்றோரே பார்க்கலாம்.



ஆசிரியர் :– சிவபூசைக்குள் கரடி புகுந்த மாதிரி எண்ட பழமொழிக்கு உதாரணம் சொல்லு பார்க்கலாம்.

மாணவன் :– F.M வானொலியில் அருமையான பாட்டுக் கேட்டுக் கொண்டிருக்க இப்பொழுது ஏழாவது விக்கெட்டும் வீழ்த்தப்பட்டுள்ளது என வில்லன் வீரப்பா குரலில், அறிவிப்பாளர் சொல்வது...

ஆசிரியர் :– அதில் என்ன தவறு கிரிக்கெட் ரசிகர்களுக்காக அப்படிச் சொன்னால் என்ன?

மாணவன் :– அதிலை ஒண்டுமில்லை சேர், என்ர அம்மாவின்ரை கேள்விக்கு பதில் சொல்லேலாமல் இருக்கு.

ஆசிரியர் :– அப்பிடி என்ன கேக்கிறா?

மாணவன் :– கிறிக்கெட்கிறவுண்டிலை 6 விக்கெட்டுக்கள் தானே நட்டிருப்பினம் பிறகு என்ன மாதிரி 7 ஆவது விக்கட் விழுந்தது எண்டு கேட்கிறா சேர்.

ஆசிரியர் :– உன்ரை கொம்மாவுக்கு கிரிக்கெட் எண்டா சுத்த சூனியம் போலை.

மாணவன் :– அதோடை விட்டாவே, LBW எண்டால் என்ன எண்டும் கேட்கிறா.

ஆசிரியர் :– LBW எண்டால் LAST BALL WICKET எண்டது கூட கொம்மாவுக்குத் தெரியேல்லையோ?

மாணவன் :– (மெதுவாக) உங்களிலும் பார்க்க அம்மா பரவாயில்லை.

ஆசிரியர் :– என்ன வாய்க்குள்ளை முணுமுணுக்கிறாய்?

மாணவன் :– இல்லை சேர் உங்களுக்குள்ள அறிவு அம்மாவுக்கு இல்லை எண்டு சொன்னனான்!.



பாடகர் என்ன 'கள்ளா கள்ளா' என்று பாடுகிறார்? அவருக்கு தடிமன் பிடித்து மூக்கு அடைத்துவிட்டது அதுதான் 'கண்ணா கண்ணா' என்று பாடுவதற்குப் பதில் 'கள்ளா கள்ளா' என்று பாடுகிறார். அதுவும் சரிதான் வெண்ணெய்யைத் திருடியவன் கள்ளன் தானே!

என்ன மச்சான் கலியாணம் முடிஞ்சு ஹனி மூன் போகேல்லையோ? அதுக்கு முதல் பான் கீ மூனிட்டைப் போகப் போறன். ஏன்? நாட்டு நடப்புகள் சரியில்லை முறைப்பாடு கொடுக்கணும்.

என்ன, வேட்பாளர் பேசும் போது அடிக்கடி மைக்கைத் தட்டுகிறாரே! "கேளுங்கள் தரப்படும்,

தட்டுங்கள் திறக்கப்படும் என்ற பாட்டின் அர்த்தத்தை தவறாகப் புரிந்து கொண்டு தட்டித் தட்டிப் பேசினால் வோட்டுக்கள் கிடைக்குமென நினைக்கிறார் போலும், வோட்டுகளுக்குப் பதிலாக வேட்டுகள் கிடைக்காமல் இருந்தால் அவர் அதிர்ஷ்டசாலி.

ஆடுற மாட்டை ஆடிக்கறக்கணும் பாடுற மாட்டை பாடிக் கறக்கணும் என்பார்கள் சிலரிடம் இருந்து ஒரு பொருளை பெறுவதாயின் அவர்களிடம் உள்ள பலவீனத்தைப் பயன்படுத்தி நாம் பெற வேண்டியதைப் பெற்றுவிடலாம்.



அந்தக் காலத்தில் யாழ்ப்பாணத்திலை இருந்து சுன்னாகம் மீன் சந்தைக்கு தினமும் மீன் கடகம் ஏற்றும் தட்டிவான் றைவர் (முதலாளியும் அவர்தான்) மீன் விற்கும் பெண்களையும் ஏற்றிக் கொண்டு சந்தையில் இறக்கி விட்டுவருவார். கூலி தினமும் கொடுக்க வேண்டும். ஆனால் சில பெண்கள் கூலி ஒழுங்காக கொடுப்பதில்லை. இவர்களுக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேண்டும் என்று நினைத்து யாழ்ப்பாணத்திலிருந்து சுன்னாகம் வரும்போது கொக்குவில் சந்தியில் தட்டிவானை நிப்பாட்டிவிட்டு முன்பக்க எஞ்சின் மூடியைத் திறந்து பார்த்து விட்டுச் சொன்னார். வான் ஓடாது கிசுகிசு பழுதாய்ப் போச்சு புதுசாய் வாங்கிப் பூட்டினால் தான் ஓடும் என்றார். அதற்கு பெண்கள் கேட்டார்கள் "கிசுகிசு" கனகாசு முடியுமோ எண்டு. குறைந்தது 100 ரூபா வரும் எண்டார். சந்தைக்குப் பிந்திப் போனால் மீன் விற்கேலாது. நாறிப்போகும் என்பதால் வேறு வழியில்லாது பெண்கள் ஒவ் வொருவரும் தங்களிடம் உள்ள பணத்தை சேர்த்து அவர் கையில் கொடுத்தார்கள். றைவர் யாழ்ப்பாணம் போவதாகப் பாசாங்கு செய்து விட்டு சில மணி நேரத்தில் வந்து அவர் சொன்ன கிசுகிசுவை பூட்டுவதுபோல் மீண்டும் பாசாங்கு செய்து சுன்னாகம் போய் அவர்களை இறக்கிவிட்டார். மீன்கடகம் என்றதும் எனக்கு வேறு ஒரு சம்பவம் ஞாபகத்துக்கு வருகிறது. சன நெருக்கமான பஸ்ஸில் பிரயாணம் செய்யும் போது ஆச்சி ஒருவர் சந்தைக்கு போவதற்கு முற்பக்க கதவால் ஏறி தனது கடகத்தை றைவருக்கு பக்கத்தில் வைத்தார். றைவர் (சுடுதண்ணி) கத்தினார். 'எணை ஆச்சி கடகத்தை உப்பிடி வைக்காதை நான் என்ன மாதிரி கியர் போடுறது" என கத்த ஆச்சி சொன்னார் "ஏன் மோனை கோவிக்கிறாய் கடகத்துக்குள்ளை போடன் இது வெறும் கடகம் தானே" என்றார் கிளுக்கிண்டினாலும் சிரிக்காத றைவர் சிரித்தே விட்டார்.




எனது மனைவியை யாழ் போதனா வைத்திய சாலையிலிருந்து வீட்டுக்கு அழைத்து வர தனியார் அம்புலன்ஸ் வண்டியை வாடகைக்கு அமர்த்தினேன். அவரை அதில் ஏற்றிவிட்டு வண்டிச் சாரதியிடம் எனது வீட்டுக்கு வரும் வழியை விவரமாகச் சொல்லி விட்டு மோட்டார் சைக்கிளில் முன்னுக்கு வந்துவிட்டேன். ஆனால் பல மணிநேரமாக அம்புலன்ஸ் வீடு வந்து சேரவில்லை. பின்பு சாரதியை கைபேசியில் தொடர்பு கொண்டு ஒரு வழியாக அம்புலன்ஸை வரவழைத்தேன்.

நடந்தது என்னவெனில் குறிப்பிட்ட அம்புலன்ஸில் ஏ.சி (A.C) பழுது இருந்தும் எல்லா யன்னல் களையும் சாரதி மூடி அடைத்து விட்டார். அதனால் எனது மனைவிக்கு வண்டி எங்கு செல்கிறது என்பது தெரியவில்லை. மேலும் சாரதி வழியைத் தவறவிட்டுவிட்டார். ஒருவாறு வியர்த்து விறுவிறுத்தபடி மனைவி வந்து சேர்ந்தார். இல்லை சோர்ந்தார். இனி அம்புலன்ஸில் பிரயாணம் செய்வதானால் ஐம்புலன்களையும் அடக்கித்தான் ஆக வேண்டும் போலிருக்கிறது. அதனால் தான் அதற்கு அம்புலன்ஸ் எனப் பெயரிட்டனரோ?.



பொலிஸ் :- என்ன உங்கள் மனைவி ஓடி விட்டாளா?

கணவன் :- ஓம் சேர் அவள் ஆடிமாதம் ஓடி விட்டாள்

பொலிஸ் :- ஏன் உடனடியாக வந்து முறைப் படவில்லை?

கணவன் :- எங்கே அவள் திரும்பி வந்து விடுவாளோ என்ற பயத்தில் இருந்து விட்டேன்.


டாக்டர் :- என்ன இது விரலை துண்டு துண்டாய் வெட்டியிருக்கு?

நோயாளி :- மெகா சீரியலை ரீவியிலை பார்த்து வெண்டிக்காயை வெட்டினதாலை ஏற்பட்ட காயம் டாக்டர்.

கோழி மேச்சாலும் கோறண மேந்திலை மேய்க்க வேணும் என்று யாழ்ப்பாணத்தில் ஒரு பேச்சு வழக்கு இருக்கிறது. இதில் அர்த்தம் இருக்கிறது போல்தான் தெரிகிறது. அரச சேவையில் உள்ள சுதந்திரம் தனியார் சேவையில் இல்லை. அதுவும் அரச வெளிக்கள உத்தியோகத்தர்கள் சுதந்திரப் பறவைகளாகத் திரிவர். இவர்களுக்கு மாதாந்த பிரயாணப் படியும் வழங்கப்படும். இவ்வளவு இருந்தும் சில ஊழியர்கள் இவற்றை மதியாது வேலையை புறம் தள்ளி விட்டு வீட்டுக்குச் சென்று விடுவர். வேலை நாளில் லீவு இல்லாது (French Leave) வீட்டுக்குச் சென்ற வெளிக்கள உத்தி



யோகத்தர் ஒருவரை அவரது மேல் அதிகாரி கண்டுவிட்டார். இதை அறிந்து கொண்ட உத்தியோகத்தர் பலமாக யோசித்து விட்டு அடுத்த நாள் தனது மேல் அதிகாரிக்கு ஒரு தந்தி அடித்தார் "Please Grant Leave Yesterday" என்று.



பள்ளியில் படிக்கும் போது, எமது வகுப் பாசிரியர் குளப்படிவிடும் மாணவர்களுக்கு அடிக்கடி (imposition) தண்டனை வழங்குவார். அதாவது புத்தகத்தில் ஒரு பந்தியை 50 தடவை அல்லது 100 தடவை என திருப்பி திருப்பி எழுத வேண்டும்.

அப்படி ஒருமுறை சரித்திரப் பாடப் புத்தகத்தில் ஒரு பந்தியைக் காட்டி 100 தடவை

எழுதச் சொல்லிவிட்டார். எனக்குப் பக்கத்தில் இருந்த மாணவன் கொஞ்சம் சுட்டி ஒரு முறை மட்டும் அந்தப் பந்தியை அழகான கையெழுத்தில் எழுதிவிட்டு ஏனைய மாணவர்களுடன் தனது கொப்பியையும் ஆசிரியர் மேசை மீது வைத்து விட்டான். வகுப்பாசிரியர் ஒவ்வொரு கொப்பியையும் பார்த்துவிட்டு அம்மாணவன் முறை வந்தபோது சற்று கடுப்பாகி "சுந்தரம் எழும்பி நில். இது என்ன ஒரு தடைவ மட்டும் எழுதி என்னைப் பேய்க் காட்டப் பார்க்கிறியோ" என்றார். அதற்கு அவன் "இல்லை சேர் நான் ஒருமுறை எழுதினால் 100 தடவை எழுதின மாதிரி" என்றான்.

நண்பி 1:- எனக்கு அடிக்கடி மிஸ்கோல் வருகுது பெரிய தொல்லையாய் கிடக்கு..

நண்பி 2:- யார் மிஸ்கோல் எண்டு பாத்தியோ?

நண்பி 1:- பாத்தன் எங்கடை பொஸ் தான் மிஸ் கோல் எடுக்கிறார்.

நண்பி 2:- அப்படிச் சொல்லு அவற்றை மிசிஸ் ஊரிலை இல்லை அதுதான் 'மிஸ்' கோல் எடுக்கிறார் போலை.






மகன் :- அப்பா ஒரு 100 ரூபா தாங்கோ

தகப்பன் :- என்னத்துக்கு

மகன் :- லண்டனிலை இருக்கிற ஃபிறெண்டுக்கு டொக்குமென்ஸ் ஸ்கான் பண்ணி அனுப்பிவிட வேண்டும்

தகப்பன் :- அதுக்கேன் காசுகுடுப்பான்? பெரிய ஆஸ்பத்திரியிலை இலவசமாய் ஸ்கான் பண்ணலாம் தானே


மகன் :- ??? !!!

தாய் :- என்ன மோனை இப்ப நீ கொம்பியூட்டருக்கு முன்னாலை குந்திறேல்லை. ஊர் சுத்தித் திரியிறாய்

மகன் :- இல்லை அம்மா கொம்பியூட்டறிலை வைரஸ்.

தாய் :- அப்படியே? கவனமாய் இரு உனக்கும் தொத்திவிடும். நல்ல டொக்டறிட்டை கொண்டு போய்க் காட்டு மேனை..

மகன் :- ???




விளையும் பயிரை முளையிலே தெரியும் என்பார்கள். அதாவது ஒரு மனிதனின் வாழ்க்கையை அவனது சிறு பராயத்திலேயே அறிந்து கொள்ள முடியும் என்பதுதான் விளக்கம். சமயகுரவர்களுள் ஒருவராகத் திகழும் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பாலனாக இருக்கும்போதே தேவாரம் இயற்றிப் பாடியிருந்தவர் என்பதுவும் இந்தப் பழமொழியின் கருத்தை அடியொற்றியதாகும். இது போல் தான் பல சிறுவர்கள் தமது அசாதாரண திறமையை வெளிப்படுத்தி எம்மை வியக்கவைப்பர்.

இவர்களை ஆங்கிலத்தில் Prodigy என்பர். அண்மைக் காலங்களில் பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்களால் தண்டனை என்ற பெயரில் காது கிழிய அடிப்பதும், பிரம்பால் அடித்துத் துன்புறுத்து வதும் எந்த விதத்திலும் நியாயப்படுத்த முடியாத செயலாயுள்ளது. இந்தச் செயல் இன்று நேற்றல்ல, கடந்த பல ஆண்டுகளாவே நடைபெறுகிறது. விஞ்ஞானம் வளர்ந்துவிட்ட நிலையில் இந்தத் தண்டனைகள் ஏற்றுக்கொள்ளத் தக்கது அல்ல. ஒரு மாணவனையோ மாணவியையோ தண்டிப்பதன் மூலம் அவர்களின் கற்கும் திறனை விருத்தி செய்ய முடியாது என்பது மனோதத்துவ நிபுணர்களின் முடிவு ஆகும். மேலும் மாணவர்களை அன்பால் மட்டுமே மேம்படுத்த முடியும் என்பதை ஆராய்ச்சிகள் தெளிவுபடுத்துகின்றன. இவை தவிர ஆசிரியர்கள் மாணவர்களுடன் நட்புரீதியில் பழகி பாடம் நடத்தும்போது மாணவர்கள் தமக்குப் புரியாத விடயத்தை ஆசிரியரிடம் கேள்விகள் கேட்டு அறியும் சுதந்திரத்தை வழங்கவேண்டும். இதைச் சொல்லும்போது பழைய ஞாபகம் ஒன்று. நான் மாணவனாக இருந்தபோது விளையாட்டுப் போட்டிக்கு இல்லங்களை அலங்கரிக்கப் பூக்கள் கொண்டு வரும்படி பொறுப்பாசிரியர்கள்கூறியிருந்தனர். குறும்புக்கார மாணவன் ஒருவன் "என்ன பூக்கள் கொண்டு வரலாம்" என்றான். ஆசிரியர் "உனக்கு விருப்பமான பூ எதுவெண்டாலும் கொண்டு வா"



என்றார். உடனே அவன் "தேங்காய்ப்பூ கொண்டு வரலாமா?" என்றான். வகுப்பறையே சிரிப்பில் அதிர்ந்தது. ஆனால் ஆசிரியர் கோபப்படவில்லை. அவரும் எம்முடன் சேர்ந்து சிரித்தார். இன்னொரு நாள் எமது வகுப்பாசிரியர் கணித பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அடிக்கடி மாணவர்களைப் பார்த்து நான் சொல்லுறது "புகுந்து விட்டுதோ?", "நான் சொல்லுறது புகுந்து விட்டுதோ?" (புரிந்து விட்டுதோ? என்பதன் பேச்சு வழக்குச் சொல்) எனத் தனது பாணியில் கேட்டுவிட்டு எனது பின் வாங்கில் அமர்ந்திருந்த மாணவன் அமிர்தலிங்கத்தைப் பார்த்து "அமிர்தலிங்கம் என்ன கூரையைப் பார்க்கிறாய்" என்று கூறி மீண்டும் "என்ன புகுந்து விட்டுதோ?" – என்றார். அதற்கு அமிர்தலிங்கம் "இல்லை சேர் வால் மட்டும் பூரேல்லை" என்றான் அமிர்தலிங்கம் கூறியது வகுப்பறைக்கு மேலுள்ள கூரையில் சாரைப்பாம்பு எலியொன்றை விழுங்கிக் கொண்டு இருக்க வெளியே தெரிந்த எலியின் வால் பாம்பின் வாயினுள் புகவில்லை என்பதாகும்.

# செல்லப்பாவும் மாரிமுத்துவும்




முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும் என்பார்கள். அந்தக் காலத்தில் உலோகத்தால் செய்யப்பட்ட ஏசி கண்டுபிடிக்க அல்லது தயாரிக்க முன்பு ஏற்பட்ட அடைமொழியாக இதை எடுத்துக் கொள்ளலாம். பல நாட்களாக செல்லப்பாவின் மூளையைக் குடைந்து கொண்டிருந்தது அவரது பென்சன் பைல். அவர் அரச ஆசிரியர் சேவையில் இருந்து ஓய்வுபெற்று ஆறு மாதங்கள்ஆகியும் அவரது பென்சன் பைல் கல்வித் திணைக்களத்தில் தஞ்சம் புகுந்த அகதி போல் தேடுவார் அற்ற நிலையில் ஆடாமல் அசையால் "இன்" ட்ரேயில் (in tray) உறங்கிக் கிடந்தது. அதிகாரிகள் அதில் அக்கறை கொள்ளாது இருந்ததில் ஆத்திரம் அடைந்த செல்லப்பா, பொருத்தம் இல்லாவிடினும் தனது கூட்டாளி மாரிமுத்துவிடம் தனது ஆதங்கத்தைக் கொட்டினார். மாரிமுத்துவோ "வெளிக்கிடுங்கோ செல்லப்பா அண்ணை ஒரு கை பார்த்துவிட்டு வருவம்" என்று உசுப்பேற்றி விட்டார்.

இருவரும் சைக்கிளில் புறப்பட்டனர். வழியில் கள்ளுத் தவறணை தென்படவே மாரிமுத்து சொன்னார். "செல்லப்பாண்ணை ஆளுக்கொரு குட்போர் ஸ்பீங்கிங் இங்கிலீஸ் (good for speaking english) அடிச்சிட் சிட்டுப் போனால்தான் உசாராய்க் கதைக்கலாம்" என ஐடியா கொடுக்க, செல்லப்பா நேரடியாகச் சைக்கிளை கோப்பிறேசனுக்குள் விட்டார். அரை மணி நேரம் கழித்து செல்லப்பாவும் மாரிமுத்துவம் புனர்வாழ்வு பெற்ற மனிதர்களாக கல்வித் திணைக்களத்தை அடைந்து வெளி வாங்கில் அமர்ந்தனர்.

நேரம் செல்லச் செல்ல உட்சென்ற பானம் செல்லப்பாவுக்கு உஷாரைக் கொடுத்தது. நேராக உயர் அதிகாரியிடம் போய் தனது பிரச்சினையைக் கூற, அவர் "இண்டைக்கு ஒண்டும் செய்யேலாது. பென்சன் செய்யும் இலிகிதர் லீவு" என்றார். "அக்ரிங் லிகிதர் செய்யலாம்தானே?" இது செல்லப்பா. அலுமாரிச் சாவியை அவர் கொண்டு போட்டார் எனப் பதில் வந்தது.

"அக்ரிங் என்றால் லீவில் செல்லும் எழுதுநர் தனது கடமையைப் பொறுப்பேற்பதாகச் சம்மதித்துக் கையொப்பமிட்ட பின்பு மேல் அதிகாரியால் அந்த லீவு வழங்கப்படுகிறது. இதை நான் உங்களுக்குச் சொல்லித்தான் தெரிய வேண்டியதில்லை எனக் கூறி உங்களுடைய பணிப்பாளரைப் பார்த்துப் பேசுகிறேன் (I will speak to the director) என இங்கிலீசிலை சொல்லி வெளிக்கிட, இடை மறித்தார் அந்த அதிகாரி.

"கொஞ்சம் நில்லுங்கோ சேர்! உங்களின்ரை விவரத்தை அக்ரிங் எழுதுநரிடம் கொடுங்கோ. நான் பொறுப்பெடுத்து உங்களின்ரை பென்ஷன் பைலை அனுப்பி விடுகிறன்" எனப் பணிவாகச் சொன்னார். சரி நன்றி (ok thank you) எனச் செல்லப்பா பலத்த குரலில் சொல்ல, மாரிமுத்து குட் போர் ஸ்பீங்கிக் இங்கிலீஸ் வேலை செய்திருக்கு என்றார்.



பாவியார் போகும் இடமெல்லாம்பள்ளமும் திட்டியும்" என்பர். இது மாரிமுத்துவுக்குச் சரியாகப் பொருந்தும் போல்தெரிகிறது. எந்தக் கருமத்தை எடுத்தாலும்அந்தக்கருமம்மாரிமுத்துவை சங்கடத்தில் கொண்டுபோய் விட்டு விடும். நாய் வளர்க்கும் ஆசையில் உள்ளூர் நாய்க்குட்டி ஒன்றை வளர்க்க முற்பட்ட வேளையில் ஊரார் எதிர்ப்பால் அவர் பட்ட கஷ்டம் அவருக்குத்தான் தெரியும். அந்த நாய்க்குட்டி விவகாரம் அவருக்கு மனத்தாக்கத்தை ஏற்படுத்தினாலும் மீண்டும் ஒரு ஆடு வளர்க்கும் ஆசை அவரை ஆட்கொள்ள, தன் நண்பன் ஊத்தைக் குமாரிடம் தனக்கு ஒரு மறி ஆடு வாங்க ஓடர் கொடுத்துவிட்டார். போனமுறை ஊத்தைக்குமார் தன்னைப் பேய்க்காட்டி உள்ளூர் நாய்க்குட்டியைத் தலையில் கட்டியதுபோல் இந்த முறை ஏமாறத் தயாரில்லை எனத் தனது நண்பர் செல்லப்பா அண்ணையிடம் சபதம் எடுத்தார். எதற்கும் கவனமாயிரு என செல்லப்பா எச்சரிக்க "இந்தமுறை அசைக்கேலாது அண்ணை" என்றார்.

ஆட்டுக்குத் தீனி போட என்ன செய்யப்போறாய் என்று செல்லப்பா கேட்க "இருக்கவே இருக்கிறது பீதாம்பரம் பிறக்கிறாசியார் வீடு" என்றார். "ஏன் அவை தீனிக்கு காசு தருவினமோ" எனக் கேட்க "இல்லையண்ணை பிலா மரத்திலை இருந்து விழுற பிலாப் பழுத்தல் காணும்" எண்டார். "எதுக்கும் கவனமாய் இரு" என செல்லப்பா எச்சரிக்க. "அபசகுணமாய் பேசாதை அண்ணை" எனச் செல்லமாகக் கோபப்பட்டார். நல்ல நாளாய்ப் பார்த்து ஊத்தைக்குமார் அழகான ஆடு ஒன்றை அவிட்டு மாரிமுத்துவின் கொட்டிலில் கட்டிவிட்டான். காசுக்குப் பிறகு வாறன் எனச் சொல்லிவிட்டுப் போய்விட்டான். பசி எடுக்கும் போதெல்லாம் பாய் பாய் என்று கத்தி மாரிமுத்துவை றேடியோச் செய்தி கேட்கவிடாது இடைஞ்சல் கொடுத்தது ஆடு. வளவில் உள்ள இலை குழை களை வெட்டி மரங்களை மொட்டை அடித்தார் மாரிமுத்து. பிறக்கிறாசியார் வீட்டுப் பிலாப் பழுத்தல் ஒரு மூலைக்கும் காணாது. இப்படியே இரண்டு கிழமை கடந்தது. ஒரு நாள் வாசலில் நின்ற பொலிஸ்காரரைக் கண்ட மாரிமுத்து "வாங்கோ சேர்" எனத் தயக்கத்துடன் வரவேற்றார்.

"நீங்கதானா மாறிக்குத்து" எனக் கொச்சைத் தமிழில் கேட்க "இல்லை சேர் என்ரை பெயர் மாரிமுத்து நீங்கள் மாறிச் சொல்லுறியள்" எண்டார். "பொலிஸ் ஸ்ரேசன் வாறது. நீங்க கள்ள ஆடு வளக்கிறது" எண்டார். உடன் பதிலாக "நான் வெள்ளாடுதான் வளக்கிறன் சேர். கள்ள ஆடு வளர்க்கேல்லை வந்து பாருங்கோ" என வரவேற்றார். "எனக்கு மிச்சம் கதை சொல்ல வேண்டாம் பொலிஸ் ஸ்ரேசன் வாறது" எனச் சொல்லிவிட்டுப் போய்விட்டார். மாரிமுத்துவுக்கு கையும் ஓட வில்லை காலும் ஓடவில்லை. உடுப்பை மாற்றிக் கொண்டு பொலிஸ் ஸ்ரேசனுக்கு வெளிக்கிட அவர் மனதில் பல சந்தேகங்கள் எழுந்தன. அதில் ஒன்று ஆடு உன்னுடையதுதான என்று கேட்பார்கள். அதற்கு ஆதாரமாகப் பிலாப்பழுத்தல் குத்தும் குத்தூசியை ஒரு பாக்கில் போட்டுக்கொண்டு ஓட்டமும் நடையுமாக பொலிஸ் ஸ்ரேசனை அடைந்தார். வாசலில் நின்ற பொலிஸ் பாக்கிலை என்ன எனக் கேட்க "அது குத்தூசி" என்றார். அது என்ன என எனக் கேட்க "குத்தூசி, குத்தூசி" என்றார். அது என்ன என திருப்பித் திருப்பிக் கேட்க மாரிமுத்து நேரடி மொழிபெயர்ப்பாக பொக்ஸ் நீடில் (Box Needle) என்றார். கோபப்பட்ட பொலிஸ் காரர் மாரிமுத்துவின் முகத்தில் பொக்சிங் பழகி விட்டார். இந்தக் கதையை மாரிமுத்து தனது நண்பன் செல்லப்பாவிடம் சொல்ல செல்லப்பா கேட்டார் "அது சரி எதற்காக குத்தூசியை பொலிஸ் ஸ்ரேசனுக்கு கொண்டு போனனீ" என்று. "நான் ஆடு வளர்க்கிறன் எண்டு நிரூபிக்க குத்தூசியைக் காட்டலாம் என்றுதான்" என அப்பாவித்தனமாகச் சொன்னார். "எதற்கும் ஊத்தைக்குமார் வரட்டும் செய்யிறன் வேலை" என்று தன் கோபத்தைக் காட்டினார் மாரிமுத்து.



வெள்ளைக்காரனிடம் சமையல் வேலைக்குப் போன மாரிமுத்துவுக்கு மொழி இடைஞ்சலாய், சங்கடமாய் இருந்ததால் அவ்வேலையை விடத் தீர்மானம் எடுத்து, சிறு இடைவெளிக்குப் பின் செல்லப்பாவின் வீட்டுக்குப் போனார். அவர் சும்மா போகவில்லை. தனது குரல் வளத்தை செல்லப்பா வுக்கும் அவரது மனைவி பூமணிக்கும் காட்ட "சங்கடமான சமையலை விட்டு சங்கீதம் பாடப்போறன்" என பழைய சினிமா நகைச்சுவைப் பாடலைப் பாடிப்பாடியே படலையைத் திறந்தார். அடிக்கடி செல்லப்பா வீட்டுக்கு விசிற் செய்யும் மாரிமுத்து சில நாள்கள் இடைவேளை விட்டுப் போனதினால் "வா வா மாரிமுத்து உனக்குப் பாடவும் தெரியுமோ?" எனப் பப்பா மரத்தில் ஏற்றி விட்டாள் பூமணி. பதிலுக்கு "நான் பாடாத பாட்டோ?, நடிக்காத நாடகமோ? எனப் புளுகினார் மாரிமுத்து. குறுக்கிட்ட செல்லப்பா "என்ன நாடகமோ" என ஆச்சரியப்பட "என்ன செல்லப்பாண்ணை நேற்றிரவு எங்கட நடகம் நடந்தது தெரியாதோ" எனக் கேட்க, "ஓ..ஓ கேள்விப்பட்டனான். நாடகத்தில நடிச்ச மார்க்கண்டர் ஆஸ்பத்திரியிலை எண்டும் கேள்விப்பட்டனான்" எனச் சொல்ல, பூமணி கேட்டாள் என்ன நடந்தது என்று. "உங்களுக்குச் சொன்னால் என்ன, மார்க்கண்டர் தான் பிரபுதேவா எண்டு காட்ட நெளிஞ்சு வளைஞ்சு டான்ஸ் ஆடினதாலை நெஞ்சுவருத்தம் வந்து ஆஸ்பத்திரியிலை வாட்டல மறிச்சு இருக்கினம்" எண்டார். குறுக்கிட்ட செல்லப்பா.. "அது சரி உனக்கு என்ன பாத்திரம் தந்தவை" எனக் கேட்டக, "எனக்கேன் பாத்திரம், நேற்றும் இரண்டு சருவச்சட்டி வாங்கினனான்" எண்டார்.

"அட பேயா நாடகத்திலை என்ன கதாபாத்திரம்" எனத்திரும்பவும்கேட்க "நாடகத்திலை ஒரு வெள்ளைக் காரன் வாறான்.." எனச் சொல்ல மீண்டும் "வெள்ளைக் காரனா" என செல்லப்பா ஏங்க மாரிமுத்து "நாடகத்திலை அவர்தான் வில்லன், அவரை காட் பண்ண அவருக்குப் பக்கத்திலை துவக்கோட நிற்பன்" எண்டார். பூமணி "மாரிமுத்துவுக்குப் பொருத்தமான வேடம்" என்று ஏற்றிவிட்டாள். "உனக்குத் துவக்குச் சூட்டிங் தெரியுமோ" எனச் செல்லப்பா கேட்க, "பீதாம்பரம் பிறக்கிறாசியார்


வீட்டு வன்னித் தென்னந்தோட்ட வாச்சர் வேலைக்கு துவக்குச் சூட்டிங் பழகினனான்" என்றார். குறுக்கிட்ட செல்லப்பா "நாடக மேடைக்கு கல்லொன்று விழுந்ததாம்" எனக் கேட்க, மாரிமுத்து "அது சின்னச் சல்லிக்கல்லுத்தான் அண்ணை" எனச் சொல்ல, பூமணி கேட்டான் "ஏன் கல் எறிஞ்சவங்கள்" என்று. அதற்கு "ரைமிங் பிழைச்சுப் போச்சு" எண்டார். மாரிமுத்து விபரமாய்ச் சொல் எண்டார் செல்லப்பா.

ஒரு கட்டத்திலை வில்லன் கதாநாயகனைச் சுடுவதாகவும் அதற்குச் சரியான நேரத்திலை கந்தையாண்ணை பட்டாசு கொளுத்துவதாகவும் இருக்க, வில்லன் இதோ உன்னைச் சுட்டுத் தள்ளுகிறேன் எனச் சொல்ல முதல் கதாநாயகன் விழுந்து சாவதாக நடிக்க முதல் கந்தையாண்ணை பட்டாசு வெடிக்க வைத்துவிட சமயோசிதமாக வில்லன் வசனத்தை மாத்தி என்ன நடிக்கிறாயா எனக் கேட்க மீண்டும் கந்தையாண்ணை ரைம் பண்ணி வெடி சுட இரண்டாம் முறையும் கதாநாயகன் இறக்க சனமெல்லாம் கைதட்டிச் சிரிச்ச கையோடை கல்லெறியும் விழுந்து மேடையில தொங்கவிட்ட மைக்கும் உடைஞ்சு போச்சு" என்றார் மாரிமுத்து. "நாடகம் நடிச்சதுக்கு என்ன காசு கீசு ஏதாவது தந்தவையோ" என பூமணி கேட்க "நான் கௌரவ நடிகனாய் வேடம் போட்டதாலை காசு வேண்டேல்லை, ஆனால் வயிறுமுட்ட பாயசம் குடிச்சனான்" எண்டார்.

ஏது பாயசம் எனக் கேட்க "நடிகர்களுக்கு பெரிய அண்டாவிலை நிறையப் பாயசம் காய்ச்சி வைச்சவை. நாடகத்திலை அரசனாக நடித்தவற்றை தலையிலை வைச்ச "விக்" குனியேக்கை பாயாச அண்டாவுக்குள்ளை விழுந்ததாலை ஒருத்தரும் குடிக்கேல்லை. நான் நிறையக் குடிக்க வாய்ச்சுப் போச்சு"எண்டார் மாரிமுத்து. இதைக்கேட்ட செல்லப்பா "இனிமேல் நாடக மேடையை கல்லுக் கும்பியில்லாத இடத்திலைதான் போட வேணும்" என்று நக்கலடித்தார்.

குட்மோனிங் செல்லப்பாண்ணை, பூமணி அக்கா எனச் சொல்லியபடியே படலையைத் திறந்து உரிமையுடன் செல்லப்பா வீட்டுத் திண்ணையில் அமர்ந்தார் மாரிமுத்து. "என்ன சங்கதி இங்கிலீசிலை விளாசிறாய்" எனச் செல்லப்பா கேட்க, "நான் இப்ப பள்ளிக்கெல்லோ போறனான்" எனச் சொல்ல குறிக்கிட்ட பூமணி "இந்த வயசிலையும் பள்ளிக்குப் போறியோ" எனக் கேட்க. அக்கா மண்டைசொறி பள்ளிக்குப் பீதாம்பரம் பிறக்கிறாசியாற்றை பேத்தியை காலையிலை கூட்டிக்கொண்டு போய் விட்டிட்டு மதியம் திரும்பிக் கொண்டு வந்து விடவேணும். மாதம் மூவாயிரம் சம்பளம்" எண்டார். பெருமையாக "அந்த மண்டைசொறி பள்ளிக்கூடம் எங்கை இருக்கு நான் கேள்விப்படலையே" எனப் பூமணி கேட்க, குறுக்கிட்ட செல்லப்பா அது மண்டை சொறியில்லை மொன்ரிசொறி என்றார்.


"இத்தாலிய நாட்டுக் கல்வியாளர் மாரியர் மென்ரிசோறி என்பவரால் ஏற்படுத்தப்பட்ட சிறுவர் பாடசாலை. குழந்தைகளின் இயல்பான திறமைகளை வளர்த்தெடுக்கும் முறையை ஏற்படுத்திவிடுவதுதான் இதன் முக்கிய குறிக்கோளாகும். இவர் 1870 இலிருந்து 1952 வரை வாழ்ந்தவர்" என விவரமாக



ஆசிரியர் பாணியில் எடுத்துவிட்டார். இதைக்கேட்ட மாரிமுத்து "அண்ணை நீ மாஸ்ரர் வேலை பார்த்த படியாலை எல்லா விடயங்களையும் அறிஞ்சிருக் கிறாய்" என்று ஏத்திவிட்டார். பூமணி சொன்னா "இப்ப நல்ல தமிழிலை முன்பள்ளியெண்டும், இங்கிலீசிலை பிறீஸ்கூல் எண்டும் சொல்லுகினம்" எண்டா. "விட்டிடாதை விட்டிடாதை" என்று உஷார் படுத்திவிட்டார் செல்லப்பா. இதைக்கேட்ட மாரிமுத்து விழுந்து விழுந்து சிரிச்சார். "ஏனப்பா சிரிக்கிறாய்" எனச் செல்லப்பா கேட்க "இல்லை அண்ணை நான் வேறை விதமாய் அர்த்தம் கொண்டுவிட்டன், இப்பதான் விளங்குது" எண்டு. "அதென்ன அர்த்தம்" எனப் பூமணி கேட்க, "இல்லை முன்பள்ளிக்குப் போகும் பிள்ளைகளின்ரை தலையில் இருக்கிற பேன் கடி தாங்க முடியாமல் அடிக்கடி மண்டையைச் சொறிஞ்சுகொண்டு நிற்கிறதுகள் இதால அந்தப் பள்ளிக்கு மண்டைசொறி பள்ளி எண்டு சொல்லுகினம்

எண்டு நினைச்சன்" என தனது கண்டுபிடிப்பைச் சொல்லி மீண்டும் சிரிச்சார். ஆனால் செல்லப்பா தம்பதியினர் சிரிக்கவில்லை பாவம் மாரிமுத்து. மாரிமுத்து செல்லப்பாவைப் பார்த்து "நீ எல்லா விடயங்களையும் அறிஞ்சு வைச்சிருக்கிறாய்" என்று ஏற்றிவிட்டதால அதை மெய்ரென் பண்ண, செல்லப்பா "என்ன இருந்தாலும் பிரிட்டன் ஐரோப்பிய யூனியனிலை இருந்து பிரிஞ்சிருக்கக் கூடாது" என ஆதங்கப்பட்டார். "ஏன் அண்ணை" எனக் கேட்க, "ஆங்கில மொழியின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும். காரணம் ஐரோப்பிய யூனியனில இருந்து இணைப்பு மொழியான ஆங்கிலம் நீக்கப்படவிருப்பதால்வருங்காலங்களில்ஆங்கிலத்தின் ஆதிக்கம் குறைந்துவிட வாய்ப்பிருக்கிறது" என தனது மேதாவித்தனத்தை எடுத்துவிட்டார். "என்ன இருந்தாலும் தமிழ் மொழிக்குப் பாதிப்பில்லை. ஆங்கிலேயர் ஆங்கிலத்தை மறந்தாலும், எங்கடை தமிழ்நாட்டுத் தமிழர் ஆங்கிலத்தை கைவிட மாட்டார்கள்" என்ற புதிரைப் போட்டார். "என்ன அண்ணை சொல்லுறாய்" என மாரிமுத்து கேட்டக ஒரு குட்டிக் கதையைச் சொன்னார். யாழ்ப்பாணத் தமிழர் ஒருவர் சென்னைக்குப் போன சமயம் கடையொன்றுக்குப் போய் எனக்கு ஒரு கட்டி சவுக்காரம் தாங்கோ என் கேட்க கடைக்காரன் "அது என்ன சார்" என வினவ சவுக்காரத்தைத் தொட்டுக் காட்டினாராம். அதற்குக் கடைக்காரன் "அட என்ன சார். சோப் என தமிழில் கேட்கக் கூடாதா" எனக் கேட்டாராம். இது எப்படியிருக்கு?

சோகமே உருவாக மாரிமுத்து கையில் நாய்ச் சங்கிலி ஒன்றை ஏந்தியவாறு விறுவிறுப்பாகச் செல்லப்பா வீட்டுக்குப் போனார். இடைக்கிடை "ரைகர் ரைகர்" என்று பலத்த குரலில் கூப்பிட்டவாறே செல்லப்பா வீட்டைச் சுற்றிச் சுற்றி வந்தார். "என்ன மாரிமுத்து ரைகர் ரைகர் எண்டு கூப்பிடுகிறாய்? கையிலை நாயின்ரை சங்கிலியை வைச்சிருக்கிறாய்! ரைகரை நாய்ச் சங்கிலியாலை கட்டப் போறாயோ" என்று நக்கலடித்தார். இதைக் கேட்ட பூமணி "சும்மா இருங்கோ! மாரிமுத்துவின்ரை நாயைக் காணேல்லை போலை கிடக்கு. அதுதான் தேடுகிறார்" என்று கணவரின் வாயை அடக்கினார். "அக்கா நேற்று எங்கடை ஒழுங்கையாலை முத்துத் தம்பின்ரை சவ ஊர்வலம் போனதெல்லே. அவங்கள் போட்ட வெடிச்சத்தம் காதைப் பிளந்தது. என்ரை ரைகர் பயத்திலை சங்கிலியை அறுத்துக் கொண்டு எங்கையோ ஓடிவிட்டுது" என்றார் கவலையாக.



"அது என்ன சாதாரண வெடியே? எங்கடை நாயும் பத்தாயத்துக்குக் கீழே பதுங்கிப் படுத்திட்டுது" என்றார் பூமணி. "அது என்ன வெடியப்பா! வெளிநாட்டிலை இருந்து வந்த முத்துத் தம்பியற்ற பிள்ளையள் காசைக் கரியாக்கி ஊரையே பய முறுத்தின மாதிரியிருந்தது" எண்டார் செல்லப்பா. "அதோடை முடிஞ்சுதே! பக்கத்து வீட்டு மயில் வாகனத்தாற்ற மதில் சுவரிலையும் கண்ணீர் அஞ்சலி நோட்டீஸ் ஒட்டி விலாசம் எழுப்பினவை. போன கிழமைதான் மயில்வாகனத்தார் இரண்டு லட்சம் செலவிழித்து மதில் கட்டி பெயின்ற் அடிச்சவராம்" எண்டார் மாரிமுத்து. "காலமை கடைக்குப் போகேக்கை பாத்தன் பாவம் மயில்வாகனத்தத் விளக்குமாத்தோடை நிக்கிறார்" என்றார் செல்லப்பா. "ஏன் அவைக்கு அடிக்கவோ" எனக் கேட்டார் பூமணி. "சும்மா இரப்பா அந்தாள், வெடிச்ச வெடியளின்ரை கடுதாசிப் பேப்பரை கூட்டிக்கொண்டு நிக்கிறார்" என்றார் செல்லப்பா. கோபமுற்ற பூமணி "உந்தக் கோதாரிவிழுந்த வெடியாலை காகங்களையும் காணன்" என்றார். "உனக்கேன் காகத்தை? எனச் செல்லப்பா கேட்க, "விரதம் பிடிக்கேக்கை கா... கா... எண்டு கூப்பிட்டுச் சோறுவைக்கத்தான்" என்றார்.

"என்ன இருந்தாலும் எங்கடை அரசியல் வாதிகள் சொன்னதிலை அரைவாசி நிறைவேறி விட்டுது" என்றார் செல்லப்பா. "என்னண்ணை சொல்லுறாய்? என மாரிமுத்து கேட்க, "இலங்கையை ஒரு சிங்கப்பூராய் மாத்தப்போறம் எண்டு அடிக்கடி சொல்லுறவையேல்லோ! சிங்கப்பூரைப் போல எங்கட ஊரிலை காகமும் இல்லை தெரு நாய்களும் ஓடி ஒளிஞ்சிட்டுது" என்று முடித்தார். "துணிவிருந்தால் உந்த வெடியளை இல்லாமல் பண்ணட்டும் பாப்பம்" என்று மங்களம் பாடிமுடித்தார் பூமணி. பாவம் மாரிமுத்து மீண்டும் "ரைகர் ரைகர் என்று கூப்பிட்டுக் கொண்டு வீடுதிரும்பினார்.

செல்லப்பாவும் மாரிமுத்துவும் இணைபிரியாத கூட்டாளிகளாக இருப்பினும் இடையில் சிலகாலம் பிரிய நேரிட்டது. காரணம் மாரிமுத்துவுக்கு வெளி நாடு போய் பணம் சம்பாதிக்க வேணும் எண்ட ஆசை அடிமனதில் அடித்தளம் போட்டிருந்ததுதான். இந்த ஆசையை இடைக்கிடை செல்லப்பாவுக்குச் சொல்லியிருக்கிறார். இதைவிட சர்ச்சைக்குரிய கூட்டாளிஊத்தைக்குமாரும்மாரிமுத்துவின்ஆசைக்கு இடைக்கிடை தூபமிட்டுக் கொண்டிருந்தான்.





சவூதிக்குப் போய் கைநிறைய சம்பாதிக்க வேணுமெண்டால் ஒரு லட்சம் தா உனக்கு விசா வாங்கித் தாறன் எண்டு ஆசை காட்டி வந்துள்ளான். விசா ஏதோ கடையில் விற்பது போல எண்ணி மாரிமுத்துவும் ஏமாந்து போனார். அதனால் செல்லப் பாவுக்கு தெரியாமலே ஊத்தைக் குமாருடன் கொழும்புக்குப் போய் அலைந்து விட்டு வந்த கையுடன் செல்லப்பாவின் வீட்டுக்குப் போய் விசயத்தை அவிட்டு விட்டார். செல்லப்பாவும் அவரது மனைவி பூமணியும் மாரிமுத்து மேல் பரிதாபம் கொண்டு ஆறுதல் சொல்லினர். செல்லப்பா, "வெண்ணெய்யை கையில் வைத்துக் கொண்டு நெய்க்கு அலைந்த மாதிரியெல்லோ உன்ரை கதையிருக்கு" எண்டார். அதற்கு மாரிமுத்து "என்னண்ணை விளக்கமாய்ச் சொல்லண்ணை" எண்டார். "உனக்கு சமையல் தெரியுமோ?" எண்டார் செல்லப்பா. "என்ன புதிசாய்க் கேக்கிறாய் அண்ணை, வீட்டிலை நான்தான் சமையல் எண்டு தெரியாதோ?" எண்டார். "அது இல்லை வெளிநாட்டு தனியார் தொண்டு நிறுவனம் ஒண்டுக்கு பெரியவர் வெள்ளைக் காரர் தனக்கு சமைக்க ஆள் தேவை எண்டு அண்டைக்குச் சொல்லி வைத்தவர். உன்னை சேர்த்து விடலாம். ஆனால் ஒரு சிக்கல் இருக்கு" எண்டார். "என்ன சிக்கல்?" எண்டு மாரிமுத்து ஆவலாய்க் கேட்க "மொழிப் பிரச்சினை. உனக்கு வடிவாய் இங்கிலீசு வராது. பிறகு என்னெண்டு சமாளிப்பாய்?" என்று கேட்டார் செல்லப்பா. "அது நானெல்லோ சமாளிக் கிறது. வெளிக்கிட்டு வாருங்கோ அண்ணை! போய்க் கதைப்பம்" என அவசரப்பட்டார். பூமணியும் "பாவம் மாரிமுத்து. போய் ஒருக்கா கதைச்சு வேலையை அரேஞ் பண்ணி விடுங்கோ" எனத் தனக்குத் தெரிந்த இங்கிலீசிலை சொன்னா?

செல்லப்பா மாரிமுத்துவைக் கூட்டிக்கொண்டு போய் வெள்ளைக்காரருக்கு அறிமுகப்படுத்தினார். "குட்மோனிங் ஹீ இஸ் மிஸ்ரர் மாரிமுத்து. ஏ பிரண்ட் ஒஃப் மைன்" (காலை வணக்கம். இவர் மாரி முத்து. என்னுடைய நண்பர்) என அறிமுகப்படுத்த, "ஹலோ மிஸ்ரர் மாறிகுத்து" என் சுருக்கமாக வரவேற்றார். அந்த வெள்ளைக்காரர்.பதிலுக்கு மாரிமுத்து "ஐ ஆம் மாரிமுத்து. நொற் மாறிகுத்து" எனத் திருத்தினார். உடனே பாய்ந்த செல்லப்பா "வாயைப் பொத்து. அவர் என்னமாதிரியும் கூப்பிடட்டும். சும்மா இரு" என அடக்கினார். "ஹீ இஸ் ஏ குக் ஹீ வில் குக் ரேஸ்ரி கறி" (இவர் ஒரு சமையக்காரர். நன்றாகக் கறி சமைப்பார்) எனத் தொடர்ந்தார். மாரிமுத்து "யெஸ் சேர்! ஐ ஆம் ஏ குட் குக்கர்" எண்டார். பொறுத்துக் கொண்டிருந்த "ஐ லைக் சீ பூட்" (கடலுணவில் எனக்கு விருப்பம்) எனச் சொல்ல மாரிமுத்து "ஐ குக் ஏ பூஃட்" எண்டார். செல்லப்பா குறுக்கிட்டு எட மடையா அவர் தனக்கு கடல் உணவு, அதுதான் மீன், இறால், நண்டு, கணவாய் பிடிக்கும் எண்டு சொல்லுறார். அந்தக் கறியில் அசலாய்ச் சமைப்பார் எண்டு சொல்லண்ணை எண்டார் மாரிமுத்து. செல்லப்பாவும் சொன்னார். ஒத்துக்கொண்ட வெள்ளைக்காரர் மாதம் 100 டொலர் சம்பளம் தரலாம் எண்டு சொல்லுங்கோ. நாளையில இருந்து சமையலுக்கு வரலாம் எண்டார். உடனே மாரிமுத்து "100 டொலர் என்றால் காணாது அண்ணை. குறைஞ்சது 7 ஆயிரம், 8 ஆயிரம் ரூபாய் எண்டாலும் தரச் சொல்லுங்கோ, இல்லையெண்டால் வேண்டாம்" எண்டார். செல்லப்பாவுக்கு தன் தலையை எங்கே கொண்டு சென்ற அடிப்பது என்று தெரியாமல் திணறினார். "100 டொலர் எண்டால் எங்கடை காசுக்கு எவ்வளவு?" எண்டு மாரிமுத்து செல்லப்பாவிடம் கேட்டார். "அதென்னண்ணை, எங்கட 100 ரூபாய் மாதிரித்தானே" எண்டார் மாரிமுத்து. "கிட்டத்தட்ட 20,000 ரூபா வரும்" என்றார் செல்லப்பா. வாயைப்பிளந்த மாரிமுத்து வாயை மூட மறந்து நின்றபோது கேட்டார். "இதே தெரியுதில்லை பின்ன என்னத்தை உழைச்சு கிழிக்கவெண்டு சவூதிக்கு வெளிக்கிட்டனீ?".


சிறுவயது முதல் செல்லப்பாவும் மாரிமுத்துவும் இணைபிரியாத கூட்டாளிகள். அரிவரி வகுப்பி லிருந்து ஒன்றாகப் பள்ளிக்கூடம் போய்வருவர். பள்ளிக்கூடத்தை பள்ளி கொள்ளும் கூடமாக மாரி முத்து பாவித்ததால், செல்லப்பா மாரிமுத்துவை முந்திக்கொண்டு ஒவ்வொரு வகுப்பிலும் ஒரு வருடம் எனத் தடங்குதடையின்றி கடந்து எஸ்.எஸ்.சி எனும் தடையையும் தாண்டி ரெயினிங் கொலிச்சுக்கு எடுபட்டு ஆசிரியர் தொழிலை மேற்கொண்டு ஓய்வுபெற்று விட்டார்.




மாரிமுத்துவுக்கு மண்டையில களிமண் என அவரது ஆசிரியர் கள் முடிவுகட்டி பள்ளிக் கூடம் வரவேண்டாம் எனச் சொல்லி விட்டனர். அந்த முடிவு மாரிமுத்துவுக்கு சந்தோசத்தைக் கொடுத்தது. காரணம் படிப்பு அவருக்கு கசந்தது. கூலிவேலைகள் செய்து வாழ்க்கையை நடாத்தினார். இருந்தும் செல்லப்பாவும் மாரிமுத்துவும் இணை பிரியா கூட்டாளிகள்தான். செல்லப்பா கலியாணம் கட்டிக் குடும்ப வாழ்வில் மூழ்க, மாரிமுத்துவுக்கு கலியாணம் தவணை தவணையாகத் தள்ளிப் போயிற்று, பிள்ளையார் கலியாணம் போல. அவர் தான் பிடிச்ச முயலுக்கு மூன்று கால்கள் எனும் கொள்கையில் உறுதியாய் இருப்பார். எதிர்த்துக் கதைச்சால் திடீர் என்று கோபம் வரும். தினம் தோறும் செல்லப்பா வீட்டுக்குப் பேகும்போது ஒரு செய்தியுடன்தான் போவார்.

இன்று அவர் செல்லப்பாவுக்கும் அவரது மனைவி பூமணிக்கும் ஒரு புதுக்கதையைச் சொன்னார். அதுதான் யாழ்தேவியை முந்திச் சைக்கிள் ஓட்டிய கதை. தான் சைக்கிள் பழகி ஒரு வருடக் கொண்டாட்டமாகக் கொடிகாமத்திலிருந்து பளை வரை யாழ்தேவியுடன் போட்டியாக சைக்கிள் ஓடி வெற்றி பெற்றமை பற்றி செல்ரலப்பாவுக்கும் பூமணிக்கும் எடுத்துவிட்டார். பூமணி பூமாதேவி போல் பொறுமை உள்ளவர். மாரிமுத்துவின் புளுகுகளை கேட்ட பின்னர் அவரைச் சந்தோசப் படுத்த (சொண்டுக்குள் சிரித்தாலும்) மாரிமுத்து நீ ஒரு கெட்டிக்காரன்தான் என ஏற்றி விடுவார். செல்லப்பா என்னெண்டு யாழ்தேவியை முந்தி ஓடி வெற்றி எடுத்தனி எனக் கேட்க, அது பெரிய கதை யண்ணை என ஆரம்பித்து யாழ்தேவி கொடிகாமம் ரயில் நிலையத்திலிருந்து வெளிக்கிட நான் அதைக் கலைச்சு கலைச்சு சயிக்கிளிலை ஓட 3 ஆம் கிளாஸ் பெட்டியிலை இருந்தவை என்னைப் பார்த்துச் சிரிச்சவை எனவும் தனக்குச் சரியான கோவம் வந்து எனச் சொல்ல பூமணி “மாரிமுத்துவுக்கு கோவம் வந்தால் தெரியும்தானே?” என ஏற்றி விட்டார். அதுவும் 3 ஆம் கிளாஸ் பெட்டியிலை இருந்தவை சிரிச்சதாலதான் மாரிமுத்துவும் கோவமும் உசாரும் வந்து ஓடினது என்றார் செல்லப்பா.3 ஆம் கிளாஸ் பெட்டியிலை இருந்தவை சிரிச்சது பிழைதான் என்றும் 2 ஆம் கிளாசிலை இருந்தவை சிரிச்சிருந்தால் பிழை யில்லை எனவும் நக்கல் அடிக்க, மாரிமுத்து சாந்த மாகி விட்டார். பூமணி, அது என்னமாதிரி வெற்றி எடுத்தனி எனக் கேட்க, பளை ஸ்ரேசனிலை சிக்னல் விழாமல் ரயில் நிற்கதான் அதை முந்தி ஓடி வெற்றி எடுத்திட்டன் என்றார்.

Jack of all trades Master of none (எல்லாத் தையும் செய்வான் ஆனால் ஒண்டும் ஒழுங்காத் தெரியாது) என்பார்கள். இது மாரிமுத்துவுக்குப் பொருந்தும். ஊரில் உள்ளவர்கள் அவரை நேசிப் பதற்குக் காரணம் அவரது நேர்மையும் அப்பாவித் தனமும் எனலாம். என்ன வேலையென்றாலும் தனக்குத் தெரியும் எனத் தலையில் தூக்கிப் போட்டுக் கொண்டு கடைசியில் திக்குமுக்காடிவிடுவார். தனது இன்ப துன்பங்களை செல்லப்பாவுக்கும் அவரது மனைவி பூமணிக்கும் சொல்லி ஆறுவதில் மாரிமுத்துவுக்கு திருப்தி. இதேபோல் பீதாம்பரம் பிறக்கிறாசியார் வீட்டிலை பிலாக்காய் இறக்கின





கதையைச் செல்லப்பாவுக்கும் பூமணிக்கும் சொல்ல வேண்டிய கட்டாயத்துக்கு மாரிமுத்து தள்ளப்பட்டார். காரணம் சுன்னாம் சந்தையிலை மாரிமுத்து வெடித்த பலாக்காய்கள் விற்றுக் கொண்டிருப்பதை செல்லப்பா கண்டுவிட்டார். எனவே பிலாக்காய் இறக்கின கதையை செல்லப் பாவுக்கும் பூமணிக்கும் சொல்ல வேண்டிய கட்டாயத்தில் சொன்னார்.

"அண்ணை பிறக்கிறாசியார் வீட்டை பிலாக் காய் இறக்க உவன் ஊத்தைக்குமாரை உதவிக்குக் கூட்டிக்கொண்டு போனனான். அவன் என்னைப் பேய்க்காட்டிப் போட்டான்" என்றார். என்ன மாதிரியெண்டு செல்லப்பா கேட்க "வண்டியிலை கயித்தை இறுக்கக் கட்டிப்போட்டு வெட்டடா எண்டான். நானும் அவனை நம்பி வண்டியிலை கயித்தை இறுக்கக் கட்டிப்போட்டு வெட்டிவிட்டன். பிலாக்காய் விழுந்து வெடிச்சுப் போச்சு என்றார். "ஏன் வண்டியிலை கயித்தைக் கட்டினனி" எனப் பூமணி கேட்க, "பிலாக்காய் காம்பு கட்டையாய் இருந்தது அக்கா அதுதான் ஊத்தைக் குமார் ஐடியா சொல்ல நானும் யோசிக்காமல் வெட்டி விட்டுடன்" என்றார்.

வண்டியிலை வடிவாய்க் கட்டியிருந்தால் லேசிலை பிலாக்காய் விழாது என்று செல்லப்பா தீர்ப்புக் கூற, மாரிமுத்து சொன்னார் நீ சொல்லுறதும் சரிதான் அண்ணை. நானும் ஒரு சின்ன மிஸ்ரேக் விட்டுட்டன் என்றார். என்ன மிஸ்ரேக் எனக் கேட்க "கயித்தை என்ரை வண்டியிலை கட்டினதுதான் அந்த மிஸ்ரேக்" எண்டார். செல்லப்பாவும் விடாமல் கேட்டார் "அது சரி காம்பு நீளமான வெடிச்ச பிலாக் காய் விற்றுக் கொண்டிருந்தாய், அதெப்படி?" என்று. அதற்கு அவர் சொன்ன பதில் "அது சின்னத் தடுமாற்றம் – கயித்தைக் காம்பிலை கட்டிப்போட்டு மேலை வெட்டுறதுக்குப் பதிலாய் கீழை வெட்டிப் போட்டன் அண்ணை. அதிலை இரண்டு சோடிப் பிலாக்காய் விழுந்து வெடிச்சுப்போச்சு" எனக் கவலைப்பட, பூமணி ஆறுதல் சொன்னா "என்ன இருந்தாலும் மாரிமுத்து பிலாக்காய் இறக்கிப் போட்டுதுதானே!"

கண்டதே காட்சி கொண்டதே கோலம் எனச் சிலர் சிறுசிறு பிடயங்களில்கூட தவறு இழைத்துப் பின்பு துன்பம் அடைவர். இவர்கள் ஒரு பொருளையோ அல்லது ஆள்களையோ கண்டவுடன் முன்பின் யோசனை இல்லாது காதல் கொண்டு பின் தன்னையே நொந்து கொள்வர். சுற்றி வளைப்பானேன். எங்கடை மாரிமுத்து பற்றிய ஒரு சிறுகதை விளக்கம் தரும்.

வழக்கம்போல் மாரிமுத்து பீதாம்பரம் பிறக் கிறாசியார் வீட்டுக்கு மரக்கறி வாங்கிக் குடுக்க மருதனார்மடம் சந்தைக்குப் போனார். பிறக்கிறாசியார் பெண்சாதி எழுதிக் குடுத்த மரக்கறி வகைகளைத் தவறாது பார்த்து வாங்கி விட்டார்.

சந்தையை விட்டு வெளியில் கே.கே.எஸ். வீதியில் வீதியோரம் குவித்து விற்பனைக்குப் போடப்பட்ட கலர் பாட்டா செருப்புகளைக் கண்டு திகைத்துப் போய் நின்றுவிட்டார்.

மனதுக்குள் மத்தாப்பு. இன்று என்ன விதப் பட்டும் ஒரு சோடி செருப்பு வாங்கியே தீருவேன் எனச் சபதமெடுத்துச் தென்னிலங்கை வியாபாரியிடம் போனார். (காலைச் சாப்பாட்டுக்கென பிறக்கிறாசியார் பெண்சாதி கொடுத்த 150 ரூபா அவரது தீர்மானத்துக்கு வலுச் சேர்த்தது) துணிந்த பின் மனமே துயரம் கொள்ளாதே என்ற கண்டசாலாவின் தேவதாஸ் படப் பாடலை றீவைண்ட் செய்து துணிவுடன் குருத்துப் பச்சை நிற சோடியை கையில் எடுத்துப் பார்க்க வியாபாரி ஐயா உங்களுடைய காலுக்கு உந்தக் கலர் நல்லாய் இருக்கும் என உசார்ப்படுத்தினான். என்ன விலை எனக் கேட்க கனக்க இல்லை 100 ரூபா தான். கடைகளிலை 200 ரூபா விக்கினம் எண்டான் வியாபர்ரி.




வியாபாரி தனது மனதை மாற்றிவிட முன்பு அந்தச் செருப்பை மரக்கறி பாக்குக்குள் செருகி விட்டு 100 ரூபா தாளை கொடுத்துவிட்டு பொடி நடையாய் நேராய்ச் செல்லப்பா வீட்டுக்குப் போனார். தனக்குச் சொந்தமாகிவிட்ட அந்தச் செருப்பை செல்லப்பா அண்ணைக்கும் பூமணி அக்காவுக்கும் காட்டிப் புளுகாவிடில் அவர் பொச்சம் தீராது.

குருத்துப் பச்சை நிற செருப்பை மரக்கறி பாக்கில் இருந்து கிளறி எடுத்துக் காட்ட பூமணி சோக்கான கலர் செருப்பு, என்ன விலை என்றார். "சொன்னால் நம்பமாட்டியள் 100 ரூபாதான்" எனச் சொல்ல, செல்லப்பா "கொள்ளை மலிவு" என ஏற்றி விட்டார். புளுகம் தாங்காத மாரிமுத்து இரண்டு செருப்பையும் ஒன்றுடன் ஒன்றை டொக் டொக் எனத் தட்டிக் கொண்டிருந்தார்.


திடீரென்று மாரிமுத்துவின் முகம் மாரி மழை மேகம் போல் இருண்டது. "செல்லப்பா அண்ணை ஏமாந்து போனன்" எண்டார். என்ன சங்கதி என செல்லப்பா கேட்க ஒரு செருப்பு 8 ஆம் நம்பர், மற்றத 7 ஆம் நம்பர். அவசரப்பட்டுப் போனன் எண்டார். "கையோடை போய் மாத்த வேணும். வாருங்கோ அண்ணை போட்டு வருவம்" என்றார். "வெயில் உச்சிக்கு வந்திட்டுது பின்னேரம் போய் மாத்துவம் உன்ரை சயிக்கிளைக் கொண்டுவா" என்றார் செல்லப்பா. "சரி அண்ணை! ஓர் இடமும் போய்விடாதேங்கோ பின்னேரம் வாறேன்" என சோகமாகப் போய்விட்டார். வீட்டில் இருக்க இருப்புக் கொள்ளவில்லை.

பல கோணங்களில் யோசித்தார். ஒருவேளை செருப்பு வியாபாரி மதியத்துடன் வியாபாரத்தை முடித்துக்கொண்டு போய்விட்டால் என்ன செய்வது என ஒரு மனம் சொல்லிற்று. இன்னொரு மனம் சீச்சீ அப்படியெல்லாம் நடக்காது. என்னைக் கடவுள் கைவிடமாட்டார் எனவும் தோன்றிற்று. வந்தது வரட்டும் அந்தந்த வேலையை அப்போதே செய்வது நல்லது என இறுதியாக முடிவு எடுத்துத் தனக்குத் தெரிந்த ஓட்டோ ஒன்றை வாடகைக்குப் பிடித்து நேரடியாக மருதனார்மடத்துக்குப் போய்க் கண்டேன் வியாபாரியை (கண்டேன் சீதையை என ராமருக்கு அனுமான் சொன்னது போல்) என மனதுக்குள் புளுகத்தில் ஐயா இந்த செருப்பை மாத்தி 8 ஆம் நம்பர் சைசில ஒரு சோடி தாருங்கோ என்றார். கலர் நீலம் தான் இருக்கு பரவாயில்லையா என வியாபாரி கேட்க பரவாயில்லை என்றார். மாற்றி எடுத்த செருப்புடன் நேரடியாக செல்லப்பா வீட்டுக்குப் போய் வாயெல்லாம் பல்லாக நின்றார். பூமணி கேட்டா "செருப்பு மாத்தியாச்சோ" என்று "இஞ்சை பாருங்கோ" என நீலச் செருப்பைக் காட்டினார்.

செல்லப்பா "ஓட்டோவுக்கு எவ்வளவு?" என கேள்விக்கணை தொடுக்க சளைக்காமல் மாரி முத்து சொன்ன பதில் "மொத்த செலவு 250 ரூபா." மாரிமுத்துவை தூக்கிவிட பூமணி சொன்னா "நீலச் செருப்பும் மாரிமுத்துவுக்கு வடிவாய்த் தான் இருக்கு...!"

செல்லப்பாவுக்கும் அவரது மனைவிக்கும் ஒரு நாளாவது மாரிமுத்துவைக் காணாது பொழுது போகாது. இரண்டு கிழமையாக மாரிமுத்து செல்லப்பா வீட்டுப் பக்கம் வரவே இல்லை என்பதால் அவர்களது ஆவல் அதிகமாகவே இருந்தது.

பூமணி கேட்டா "இஞ்சாருங்கோ! மாரிமுத்துவை வழிதெருவிலை காணேல்லையோ" என்று. "இல்லையப்பா! சில நேரம் வன்னிப் பக்கம் தொழில் நிமித்தம் ஆள் போயிருக்கும்" என்றார். அவர் சொல்லி முடிய முன் படலேக்கை "செல்லப்பாண்ணை செல்லப்பாண்ணை" என முனகிக் கேட்டது. "ஆரது?" என செல்லப்பா கேட்க "அது நான். மாரிமுத்து மாரிமுத்து" என கோட்டடியிலை முதலியார் கூப்பிடுவதுபோல் பதில் வந்தது. பூமணி சொன்னா,




"அட எங்கட மாரிமுத்து. கேற்றைத் திறந்து விடுங்கோ" செல்லப்பாவுக்கு ஓடர் வழங்கப்பட்டது. கேற்றைத் திறந்து விட்ட செல்லப்பா "உனக்கு ஆயுள் 100 உன்னைப் பற்றித்தான் கதைசுக் கொண்டிருக்க நீயும் வாறாய். எங்கையப்பா போனனீ" என வினவ அது பெருங்கதை அண்ணை எண்டார். பூமணி கேட்டா "கோயிலிலை பெருங் கதை கேட்கப் போனனியோ?" "பூமணி அக்காவுக்கு என்னோடை பகிடி விடாட்டி பொச்சம் தீராது" எனச் செல்லமாகக் கோபித்தார். "அவவின்ரை கதையை

விடு என்ன நடந்தது" என ஆவலாகக் கேட்டார் செல்லப்பா. சொல்லுறன் அண்ணை. "அதுசரி! ஏன் இப்பவெல்லாம் கேற்றை பொழுதுபட முதலே பூட்டுறியள்?" "நீ எந்த உலகத்திலை இருக்கிறாய்? யாழ்ப்பாணத்திலை அழையா விருந்தாளியள் செய்யும் அட்டகாசம் உனக்குத் தெரியாதோ" என்றார் செல்லப்பா.

பூமணி கேட்டா அந்தப் பெருங்கதையைச் சொல்லு என்று. "நான் ஒரு அயிற்றிங் வாச்சர் வேலைக்கெல்லே இரண்டு கிழமையாய் வன்னிக்குப் போனனான்" எனச் சொல்ல பூமணி சொன்னா "அப்பிடிச்சொல்லு அதுதான் ஆளை இந்தப் பக்கம் காணேல்லை" என்றார். செல்லப்பா கேட்டார் "உதென்ன வலது கைவிரல்களிலை கார்த்திகை விளக்கீட்டுக்கு கிளுவந்தடியிலை பந்தம் சுத்தின மாதிரி சுத்திக் கட்டியிருக்கு" என்று. "அதுதான் பெருங்கதையண்ணை. நையிற் வாச்சர் வேலை. பீதாம்பரம் பிறக்கிறாசியாற்றை 20 ஏக்கர் தென்னந்தோட்டத்திலை வன்னியிலை டியூட்டி. ஒரு நாள் நடுச்சாமம் ஒரு தனியன் யானை, அரைப் பனை உயரமிருக்கும். என்னோடை நேரடி மோதலுக்கு வந்திட்டுது". "அடக்கடவுளே!" எனப் பூமணி பதைபதைக்க, மாரிமுத்து சொன்னார் "என்னட்டை தப்பேலுமோ! ஒழிச்சு வைச்சிருந்த சீன வெடியைக் கொளுத்தி ஒரு விசுக்கு விசுக்கி விட்டன். யானைப் பிள்ளை எடுத்தார் ஓட்டம். யானைக்குச் சீனவெடியெண்டால் பயம் எனப் பூமணி தனது கண்டுபிடிப்பைச் சொல்ல, மாரிமுத்து சொன்னார் "யானை வெடிக்குப் பயந்து ஓடேல்லை. நான் ஐயோ எண்டு பிலத்துக் கத்தின கத்தினதாலை எடுத்தார் ஓட்டம்".

எம்.ஜீ.ஆர் படத்திலை கன்னத்தில் என்னடி காயம் எனக் கேட்டுப் பாடுவது போல் கையில் என்னடா காயம் எனச் செல்லப்பா கேட்க மாரிமுத்து அது சீனவெடி செய்த மாயம் என்றார். விளக்கமாய்ச் சொல்லு எனக் கேட்க வெடியை எறியிறதுக்குப் பதிலாய் கொள்ளிக் கட்டையை எறிஞ்சுபோட்டு வெடியைக்கையில்வைத்திருந்ததால் ஏற்பட்ட காயம் என்றார்.



நெற்றி நிறைய விபூதியும் சந்தனப் பொட்டும் தரித்து கையில் வரிந்து கட்டிய நூலுடனும் செல்லப்பா வீட்டுக்கு வருகை தந்திருந்தார் மாரிமுத்து. செல்லப்பாவின் மனைவி "என்ன மாரிமுத்து அத்தி பூத்த மாதிரி, கன நாளாய் இந்தப் பக்கம் ஆளைக் காணேல்லை" எனக் கேட்க "அது பெருங்கதை அக்கா" என்றாப் மாரிமுத்து. "ஏன் பிள்ளையார் பெருங்கதை கோயிலிலை தொடங்கிவிட்டுதோ" என்றார் பூமணி. "அக்காவுக்கு பகிடியாய் இருக்கு" எனச் சொல்லி முடிக்க முதல் செல்லப்பா குறுக்கிட்டு "குட்டான் ஐயர் வீட்டிலை உன்னைக் கண்டதாய்க் குமாரசாமி சொன்னார்" என வினவ "அண்ணை எனக்கு ஒரு டவுட்டு உன்னைக் கேட்டால்தான் தெரியும்" என்றார் மாரிமுத்து.

"என்ன டவுட்டு" எனக் கேட்க ஆவிக்கும் பேய்க்கும் என்ன வித்தியாசம்? என்று கேட்டார். "இதென்னப்பா காலங்காத்தலை ஒரு குண்டைத் தூக்கிப் போடுறாய்" என்று செல்லப்பா நழுவ, "செத்த ஆக்களின்ரை உயிர்தான் ஆவியாய் உலாவும். பேய் வேறை ஆவி வேறை" என விளக்கம் கொடுத்தாள் பூமணி. அதற்கு "குட்டான் ஐயர் சொன்னது சரிதான் எனக்கு ஆவியாலைதான் தொல்லை. செத்துப்போன அப்புவின்ரை ஆவி அடிக்கடி கனவிலை வந்து வெருட்டுது. நூல் கட்டி விபூதி போட எல்லாம் சுகம் வரும் எண்டு நூல் கட்டி விட்டவர் இஞ்சை பாருங்கோ" எனத் தனது கையைக் காட்டி "100 ரூபா கொடுத்தனான்" எண்டார் மாரிமுத்து. "பார்வை பார்க்கிறதிலையும் குட்டான் ஐயர் கெட்டிக்காறன்" என்று புழுகினார். "அதுசரி உனக்குப் பேய்களிலை நம்பிக்கை இருகுகோ" என்று செல்லப்பா கேட்க முழு நம்பிக்கை இருக்குது அண்ணை. அண்டைக்கு இரவு சுடலை ஒழுங்கையாலை வரேக்கை இரண்டு பேய் என்னைக் கலைச்சுக் கொண்டு வந்தவை. நான் வேகமாய் ஓடி வந்திட்டன் எனச் சொல்ல, "அட

மாரிமுத்து ஓட்டத்திலை கெட்டிக்காரன் எண்ட படியாலை தப்பி வந்திட்டுது" எனச் சொல்லி, "கலைத்த பேய்கள் ஆண் பேய்களா? பெண் பேய்களா?" என்று ஆர்வமாகக் கேட்டாள் பூமணி. "என்னக்கா அந்த நேரத்திலை ஆண், பெண் பார்த்துக் கொண்டு நிற்கேலுமோ" என மறுத்தார் மாரிமுத்து. "எனக்கெண்டால் உந்தப் பேய்களிலை நம்பிக்கை இல்லை" எனச் செல்லப்பா சொல்லப் பூமணி "அதெப்படி" என்று கேட்க "உண்மையிலை பேய்கள் இருக்கு எண்டால் அவைக்கு ஒரு பொது மொழி இருக்க வேணும். இல்லாட்டித் தமிழ்ப் பகுதியிலை உள்ள பேய்கள் வேற மொழிகள் கதைக்கிற பகுதிகளுக்குப் போய்ச் சமாளிக்க ஏலாது. அதேபோல வேற நாட்டுப் பேய்கள் இஞ்சை வந்தாலும் சமாளிக்கேலாது" என முடிக்க, முதல் மாரிமுத்து குறுக்கிட்டு "அதுக்குத்தான் இஞ்சைத்தைய பேய்கள் அங்கே போறேல்லை. அங்கத்தைய பேய்கள் இஞ்சை வாறேல்லை" எனத் தனது கண்டுபிடிப்பைச் சொன்னார். குறுக்கிட்ட பூமணி "உனக்கு என்னெண்டு தெரியும்" என்றார். "பேயோட்டி ஒருத்தன் எனக்குச் சொன்னவன்" என்றார் மாரிமுத்து. இறுதியாக பட்டிமன்ற நடுவர் தீர்ப்புக் கூறுவதுபோல, செல்லப்பா "உந்த பேய்க் கதையை விடுங்கோ. பேய்கள் இருக்குதோ இல்லையோ எங்கடை தமிழ்ச் சினிமாக்காரர் பேய்ப் படங்கள் எடுத்து எங்களைப் பேய்க்காட்டி நல்லாக் காசு உழைச்சுப் போடுவினம்"எனக் கூறக் குறுக்கிட்ட பூமணி "தமிழ்ச் சினிமா மட்டுமல்ல முந்தி வந்த றகுலா (Dragulla) இங்கிலீஸ் படங்களும் பேய்களுக்கு கதாநாயகன் அந்தஸ்தை கொடுத்து பணத்தைப் பறித்தன" என்றார்.

"நம் நாட்டை விட இந்தியாவில் பேயை வைத்தே பணம் பறிக்கும் பேயோட்டிகள் பலர் இருப்பதாகவும் அண்மையில் பேயோட்டி ஒருவன் பேய் பிடித்த பெண் ஒருவரை அடித்தே கொன்ற தாகவும் செய்திகள் வந்தன. எனவே ஏமாறு பவர்கள் இருக்கும் வரை ஏமாற்றுபவர்கள் இருக்கத்தான் செய்வார்கள்" என முடித்தார் நடுவராகச் செயற்பட்ட செல்லப்பா.



# நூலாசிரியர் பற்றி.....

கலாபூஷணம் முத்தையா மாசிலாமணி அவர்கள் தமிழும் சைவமும் செழித்து வளரும் யாழ்ப்பாணத்தின் பெருமைக்குரிய கிராமங்களில் ஒன்றான தாவடியில் தோன றியவராவார். புகழ்பூத்த குடும்பத்தில் பிறந்த இவர் சிறுவயதிலிருந்தே கல்வியிலும் சமூகசேவையிலும் ஆர்வம் மிக்கவராகத் திகழ்ந்தார். தனது முதலாம் தரக் கல்வியை தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலையிலும், இரண்டாந்தரக் கல்வியை கொக்குவில் இந்துக் கல்லூரியிலும், உயர் கல்வியை கண்டி குண்டசாலை விவசாயக் கல்லூரியிலும் கற்று 1961 இல் குடியேற்றத்திட்ட அதிகாரியாக அரசசேவையில் இணைந்தார். 1984 இல் பதவியுயர்வு பெற்று முல்லைத்தீவு மாவட்ட காணி அதிகாரியாக கடமையாற்றி 1991 இல் இளைப்பாறினார். தனது சேவைக் காலத்திலிருந்தே அதாவது 1965 ஆம் ஆண்டு முதல் வானொலி நாடகங்களையும் மேடை நாடகங்களையும் எழுதி மக்கள் மனதில் இடம் பெற்றுக்கொண்ட இவர் 2004 ஆம் ஆண்டிலிருந்து பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதும் எழுத்தாளராக மாறி 2013 ஆம் ஆண்டுக்குரிய சிறந்த பத்திரிகை எழுத்தாளர் விருதை (தமிழ்மொழி) பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

திரு.மு.மாசிலாமணி அவர்களின் நாடக, இலக்கிய பணிக்காக 2013 ஆம் ஆண்டில் புகழ் மிக்கதும் பெருமைக்குரியதுமான அரசின் கலாபூஷணம் விருதைப் பெற்றுக் கொண்டார். அவரது இச் சாதனையைப் பாராட்டி தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலைச் சமூகம் அவருக்கான பாராட்டு விழாவையும் அதே காலத்தில் நடத்தியமை குறிப்பிடத்தக்கதாகும். இப்பாடசாலையில் பழைய மாணவர் சங்கத்துடன் நெருங்கிய தொடர்புடைய இந்நூலாசிரியர் இப்பாடசாலையின் பல்வேறு விதமான அபிவிருத்திப் பணிகளுடன் தன்னை ஈடுபடுத்தியிருப்பது பாராட்டுக்குரியதாகும். இப்பணிகளுடன் நெருங்கிய தொடர் புடையதாக அவரது நூலாக்கப் பணிக்கு நாம் மிக்க பாராட்டுக்களைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். அவரால் எழுதப்பட்ட ஆக்கங்களை ஒன்று திரட்டி உருவாக்கப்பட்டிருக்கும் “சிரிக்க சிந்திக்க சில வரிகள்” எனும் அவரது முதலாம் நூல் இன்று வெளிவருவது மகிழ்ச்சிக்குரியதாகும். அவரது இந்நூலாக்கப் பணி மேலும் தொடர வேண்டுமென வாழ்த்துவதுடன் இதற்கான எனது பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பேராசிரியர் க.தேவராஜா**

யாழ்.பல்கலைக்கழகம்.

சாயி பிறிண்டேர்ஸ் - இணுவில். 077 2209474.